
» தீ விபத்து; அதிர்ச்சித் தகவல் பக்கம் 9


» காங்கிரஸை தோற்கடிப்பேன் பக்கம் 11


» டக்ளஸின் காலம் கடந்த கண்டுபிடிப்பு பக்கம் 13


» சினத்தன சிங்கங்கள் பக்கம் 20



விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 24

# உதயன்

சுடர் 27
கதிர் 84

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 06 சனிக்கிழமை (18/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# கொழும்பில் மக்கள் திரள் அரசுக்குக் கடும் எதிர்ப்பு

## ஒடுக்குவதில் படைகள் தீவிரம்; கோட்டையில் புகைக்குண்டு வீச்சு

கொழும்பு, பெப்ரவரி 18

எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து எதிர்க்கட்சிகளின் கூட்டு கொழும்பு, கோட்டையில் நேற்று மாலை பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அங்கு திரண்ட மக்கள் வெள்ளத்தைக் கலைத்துப் போராட்டத்தை ஒடுக்குவதில் அரசு தீவிரம்காட்டியது. பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பீச்சியடித்தும் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டினர். பதிலுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசினர். இதனால் கொழும்பு நகரப் பகுதி களேபரமானது.

மக்கள் தனக்கு எதிராக கிளர்ந்து எழுவதைத் தாங்க முடியாத அரசு, அவற்றை அடக்குவதில் தீவிரம் காட்டுவதுடன் கொடூரமாகவும் நடந்து கொள்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட பெரும் களேபரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கையில் காயமடைந்தார். ரணில் உட்பட மூத்த தலைவர்கள் உடனடியாகக் களத்தில் இருந்து அகற்றப்பட்டனர். தமது தரப்பில் 15 பேர் கல் வீச்சில் காயமடைந்தனர் என்று பொலிஸார் அறிவித்தனர்.

ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நடைபாதை வியாபாரிகளின் மரத் தட்டுக்களை இழுத்துவந்து நடு வீதியில் போட்டுக் கொளுத்தினர். கோட்டை

» 23


(மேலும் படங்கள் 4 ஆம் பக்கத்தில்)

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பட்டத்தின்போது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக் காரர்களைப் பொலிஸார் கலைத்தனர்.

## மிதி பலகையில் பயணித்தவர் விழுந்து சில்லில் நசியுண்டு சாவு

பூநகரி, பெப்.18

பஸ்ஸில் இருந்து தவறி விழுந்த இளைஞர் அதன் சில்லில் நசியுண்டு சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் பூநகரி நாலாம் கட்டை ஆறாம்குறுக்குத் தெரு பிள்ளையார் நகர் சந்தியில் இடம்பெற்றுள்ளது. அதே பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் நியூட்வாசன் (வயது-23) என்ற இளைஞரே சாவடைந்தவர் ஆவார்.

பூநகரியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் முன் மிதிபலகையில் நின்று பயணித்த குறித்த இளைஞன், பஸ் சடுதியாகச்

» 23

## யாழ். வந்த கொமன்வெல்த் தலைவர் பல்வேறு தரப்பு மக்களுடன் சந்திப்பு

### போதனா வைத்தியசாலை, நூலகத்துக்கும் சென்றார்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். மாவட்டத்தின் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் மற்றும் மக்களின் வாழ்வாதார செயற்பாடுகள் தொடர்பில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுநலவாய நாடாளுமன்றத் தலைவருமான சேர் அலன் ஹார்சல் துறுஸ்ட் அடங்கிய குழுவினர் விரிவாக ஆராய்ந்தனர் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் காலை யாழ். பொது நூலகத்துக்குச் சென்று அங்குள்ள சகல பகுதிகளையும் பார்வையிட்டதுடன் நூலகம், முன்பு எரிக்கப்பட்ட சம்பவத்தையும் நினைவு கூர்ந்தனர். தொடர்ந்து கோட்டைப் பகுதிகளில் இடம்பெற்று வரும் புனரமைப்புப் பணிகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அதன் பின்னர் யாழ்.

» 23

## அலைகடலெனத் திரண்டு வாருங்கள் வீதியில் இறங்கிப் போராடுவோம்

### மக்களுக்கு ஜே.வி.பி. அழைப்பு

கொழும்பு, பெப்.18

மஹிந்தவின் அராஜக அரசுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தவண்ணமே உள்ளன. மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களைத் தடுக்கு முகமாக குண்டுத் தாக்குதல்கள், கண்ணீர்ப் புகை அடித்தல் முதலான அரசின் கொடூரச் செயல்களினால் அப்பாவி மீனவர் ஒருவர் பலிக்கடாவாகியுள்ளார்.

எரிபொருள்களின் விலையேற்றம், பஸ் மற்றும் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க வேண்டும். அரசின் அராஜகங்களை எதிர்த்து நாம் வீதியில் இறங்கிப் போராடத் தயாராக உள்ளோம். அதற்காக மக்கள் அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அறைகூவல் விடுத்தார்.

கொழும்பு கோட்டை ரயில்நிலையம் முன்பாக எரிபொருள் விலையேற்றம், பஸ் மற்றும் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க வேண்டும் எனத் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏகாதிபத்தியர்களின் எண்ணங்களை நிறைவேற்றி அவர்களை மனங்குளிர வைப்பதற்காக நாட்டு மக்களின் மீது பெரும் சுமையை அரசு ஏற்றிவைத்துள்ளது. இதனால் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்த வண்ணம் உள்ளன.

» 23

## சிட்னியில் பறந்த புலிக்கொடி



சிட்னி,பெப் 18

சிட்னியில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் போது பார்வையாளர் பகுதியில் புலிக்கொடி ஒன்று பறக்க விடப்பட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சிட்னி மைதானத்தில் நேற்று மாலை ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இலங்கை அணி ஆடிக் கொண்டிருந்த போது பார்வையாளர் ஒருவர் புலிக்கொடியை ஏந்தி உயர்த்திப் பிடித்தபடி இருந்தார்.

இலங்கை அணியின் ஆதரவாளர்கள் மத்தியில் புலிக்கொடி பறப்பதை அவதானித்த ஆஸ்திரேலிய பொலிஸார் உடனடியாகச் சென்று அந்தக் கொடியைப் பறித்தெடுத்தனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் புலிக்கொடியுடன் ஒருவர் மைதானத்தில் நுழைந்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(த)

## 13ஆவது திருத்தம் முடங்கினால் இலங்கை – இந்திய உறவு பாதிக்கும்

### இந்திய முன்னாள் அதிகாரி கருத்து

சென்னை,பெப் 18

இலங்கை அரசு 13 ஆவது சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தாவிட்டால், அது இந்திய-இலங்கை உறவில் சிக்கலைத் தோற்றுவிக்கும் - விரிசலை ஏற்படுத்தும் என்று இந்தியாவின் முன் னாள் வெளியுறவுச் செயலர் லகன் லால் மெஹ்ரோத்ரா எச்சரித்துள்ளார். எனவே 13 ஆவது திருத்தத்தை உடன் நடை

» 23

ராஜீவை கொலை செய்ய பிரபாகரன் முட்டாள் அல்ல. பின்னணியில் அமெரிக்காவே இருந்துள்ளது.

அமைச்சர் விமல் பரபரப்புக் கருத்து

விரிவாக வாசிக்க 13ஆம் பக்கம் பார்க்க

## சவேந்திர சில்வா நியமனம் ஆசிய நாடுகளும் விசனம்

நியூயோர்க்,பெப்.18

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா பொதுச்செயலருக்கு ஆலோசனை வழங்கும் சிறப்புக் குழுவுக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்ட விவகாரத்தில், பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகள் அதிருப்தியை

» 23

### பாணின் விலையும் அதிகரிக்கும்

எரிபொருள் விலை உயர்வை அடுத்து பாணின் விலையை 3 முதல் 6 ரூபாவரை அதிகரிக்க வேண்டி உள்ளதாக பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே.ஜேவர்த்தன தெரிவித்துள்ளார். விலை அதிகரிப்புத் தொடர்பில் கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

### ரூபாவின் பெறுமதி மேலும் வீழும்

நாணய மாற்றுவீதத்தில் இலங்கை மத்திய வங்கி தனது தலையீட்டை விலக்கிக் கொண்டதை அடுத்து அமெரிக்க டொலருக்குப் பெரும் வீழ்ச்சியைக் கண்ட ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி அடைந்து ஒரு டொலருக்கு எதிராக 130 ரூபாவரை செல்லலாம் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

### வேலை கேட்டு ஆர்ப்பாட்டம்

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வேலை வாய்ப்பை உடனடியாக வழங்கக் கோரி மாத்தறை நகரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அரசியல் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டே வேலைவாய்ப்புகள் வழங்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டியே இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பட்டதாரிகள் அனைவருக்கும் உடனடியாக வேலை வழங்கக் கோரினர்.

### தோட்டத் தொழிலாளர் நேற்றுப் போராட்டம்

எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து மலையகத்தில் மஸ்கெலியா, தலவாக்கலைப் பிரதேசங்களில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர். இதனால் தேயிலைத் தோட்டங்களில் பணிகள் பாதிப்படைந்தன. எனினும் தமது தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்று இ.தொ.கா. தெரிவித்தது.

### நிராகரிப்பு

பஸ் கட்டணங்கள் உயர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள சுமையை குறைக்கும் வகையில் அரச ஊழியர்களுக்கு போக்குவரத்துப் படி வழங்க வேண்டும் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே விடுத்த வேண்டுகோளை அமைச்சரவை நிராகரித்து விட்டது.

### படைச்சிப்பாய் கைது


குருநாகல் மக்கள் வங்கிக் கிளையின் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரத்திலிருந்து (ஏ.ரி.எம்.) பணத்தை கொள்ளையடிக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ். நாவற்குழி முகாமில் கடமையாற்றும், இராணுவத்தின் கெமுனுவோச் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய் கைதானார்.

### குற்றங்களைத் தடுக்க முயற்சி

ஜனாதிபதியின் சிங்கப்பூர் பயணத்தின்போது, ஆள்கள் கடத்தல் மற்றும் போதைப் பொருள்கள் கடத்தலைத் தடுப்பது தொடர்பாக இரு நாடுகளும் கவனம் செலுத்தி உள்ளன.

# இராணுவ நீதிமன்றத்தை நிராகரித்தது கூட்டமைப்பு

## சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகம் என்றும் விமர்சிப்பு



> சர்வதேசத்தை ஏமாற்றி நாடகம் ஆடுவதற்காக அரசு மேற்கொண்ட ஒரு தந்திரமான நடவடிக்கையே இது.

> ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விசாரிக்க இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டமை கண்துடைப்பு நாடகமே.



கொழும்பு, பெப்.18

இறுதி போரில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய நியமித்த இராணுவ நீதிமன்றத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரித்திருக்கிறது.

இந்த இராணுவ நீதிமன்றத்தை நாங்கள் ஒரு சதவீதமும் ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வதேசத்தை ஏமாற்றி நாடகம் ஆடுவதற்காக அரசு மேற்கொண்ட ஒரு தந்திரமான நடவடிக்கையே இது. எனவே இதனைக் கூட்டமைப்பு முற்றாக நிராகரிக்கிறது'' என்று உதயனுக்குத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமசந்திரன்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு இராணுவத் தளபதியினால் இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ நீதிமன்றம் தொடர்பான கூட்டமைப்பின் தெளிவான நிலைப்பாட்டை அவர் உதயனிடம் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இந்த இராணுவ நீதிமன்றத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. போர்க் குற்றங்கள் நடைபெற்ற பிரதேசத்தில் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய தற்போதைய இராணுவத் தளபதியே இந்த இராணுவ நீதிமன்றத்தையும் நியமித்திருக்கிறார். இது ஒரு வேடிக்கையான செயல். இந்த நிலையில் இராணுவத் தளபதியினால் நியமிக்கப்பட்ட நீதிமன்றம் எப்படி சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்கும் என்று நம்புவது?

ஜெனிவா மாநாட்டில் இலங்கை அர்சுக்கு பெரும் நெருக்கடி ஒன்று காத்திருக்கிறது. அந்த நெருக்கடியில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக வழி தேடிக் கொண்டிருக்கிறது அரசு. அதற்காகப் பல அதிரடி அறிவிப்புக்களை அது இப்போது விடுக்கிறது. அதில் ஒன்று தான் இந்த இராணுவ நீதிமன்றம். சர்வதேசத்தை ஏமாற்றி நாடகம் ஆடும் செயல் தான் இந்த நடவடிக்கை. தமிழ் மக்களின் தீர்வில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்பது போலப் பாசாங்கு செய்து சர்வதேச சமூகத்தைத் தனக்கு ஆதரவாகத் திருப்பப் பார்க்கிறது இலங்கை.

இந்த நீதிமன்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன தீர்வு கிடைக்கும்? ஒன்றுமே கிடைக்கப் போவதில்லை என்றார் சுரேஸ்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக விசாரணை நடத்த இராணுவ நீதிமன்றம் ஒன்றை இராணுவத் தளபதி நியமித்துள்ளமை வெறும் கண்துடைப்பு நாடகம் என்று தெரிவித்தார்.

இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டமை தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்த சுதந்திரமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவேண்டியது அவசியமானது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சில பரிந்துரைகளை அரசால் நடைமுறைப் படுத்த முடியும். ஆனாலும், போர்க்குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறுதல் விவகாரங்களுக்கு சுதந்திரமான விசாரணை ஒன்றின் மூலமே பதிலளிக்க முடியும் - என்று கூறினார். (த-5)

### கூட்டமைப்பைப் பலப்படுத்தும் கூட்டம் இன்று

வவுனியா, பெப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் பலப்படுத்துவது தொடர்பான கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் வவுனியா நகர சபை மண்டபத்தில் பி.பகல் 3 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

கூட்டமைப்பில் ஏற்கனவே அங்கம் வகிக்கும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கல்ந்து கொள்ளவுள்ளனர்.

மாவட்ட மட்டதில் கிளைகளை அமைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (த)

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த இல்ல மெய்வன்மைப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ம-16)

## கண்துடைப்பு என்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை

லண்டன், பெப்.18

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றம் வெறும் கண்துடைப்பு நடவடிக்கை எனச் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச அழுத்தங்களைப் புறந்தள்ளுவதற்காகக் காலத்தைக் கடத்தும் ஓர் உபாயமே இராணுவ நீதிமன்றம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தி யிருந்த நிலையில் இப்போது மன்னிப்புச் சபையும் அதை நிராகரித்திருக்கிறது.

இலங்கையில்இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு இராணுவ நீதிமன்றம் ஒன்றை நியமிக்கும் முடிவுக்கு வந்துள்ளதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும்

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை நிராகரித்து வந்த இலங்கைப் படைத்துறை திடீரென நேர் எதிர்மாறாக இராணுவ நீதிமன்றத்தை அமைக்க முயல்வதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வாளர் யூலன்டா பொஸ்டர் தெரிவித்துள்ளார். (த)

## சிலாபம் மீனவரின் இறுதிக்கிரியை இன்று; கலவரம் வெடிக்காதிருக்க கடும் பந்தோபஸ்து!

சிலாபம், பெப்.18

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சிலாபம் மீனவரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறவுள்ள நிலையில் பதற்ற நிலைமை உருவாவதைத் தடுக்கும் வகையில் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் சிலாபம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இறுதிக்கிரியை நடைபெறும் முன்னர் சிலாபத்தை அண்டிய பகுதிகளில் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்துவதற்கு மக்கள் தயாரானபோதும், பதற்ற நிலைமை ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் அவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்காதிருப்பதற்கு பாதுகாப்புத் தரப்பு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சிலாபம் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்திவரும் சி.ஐ.டி. பொலிஸார் மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு மூன்று துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர் என்று தெரிகிறது.

இந்தச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் விசேட அதிரடிப்படையினர் முறையான விசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்படுவார்கள் என்றும், சி.ஐ.டியினர் இதுவரை 25 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்திருக்கிறார்.

துப்பாக்கிச்சூடு இடம் பெற்ற தினம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கொண்டுவரப்பட்டவை எனக் கருதப்படும் இரும்புக் கம்பிகள், வாள்கள், பொல்லுகள், கண்ணாடிப் போத்தல்கள் மற்றும் பெற்றோல் குண்டுகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த சிலாபம் மீனவரின் மனைவி நேற்றுக்காலை நாடு திரும்பினார். பணிப்பெண் தொழிலுக்காக அபுதாபி சென்றிருந்த அவர் கணவனின் மரணத்தைக் கேட்டு நாடு திரும்பிய வேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கதறியழுதமை அனைவரையும் கவலையடையச் செய்தது.

பிள்ளைகளின் கல்விக்காக நகைகளை அடைவு வைத்து வெளிநாட்டுக்குச் சென்ற தமக்கு இப்படியொரு சோகத்திற்கு முகங்கொடுக்க நேரிடுமென்று தாம் கனவிலும் நினைக்கவில்லையென கண்ணீர் மல்க செய்தியாளர்களிடம் கூறினார் அந்தத் தாய்.

(ஒ-சி)

## ஐ.நா. நோக்கிய நடை பயணம் 20ஆவது நாளாக தொடர்ந்தது

லண்டனிலிருந்து ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைச் சபையை நோக்கிய நடைபயணம் 20ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்த ஜனவரி 28 ஆம் நாள் லண்டனில் இருந்து தொடங்கிய இந்த நடைபயணம், ஐ.நா. மனித உரிமைச் சபை தொடங்குகின்ற பெப்ரவரி 27ஆம் நாளில் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைத்திடலை சென்றடையவுள்ளது.

இந்நாளில் நீதிக்காய் ஒன்று படுவோம் எனும் மகாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் மீதான இலங்கை அரசினது இனப்படுகொலை குறித்தான சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டும், தமிழீழத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை ஐ.நா நிறுவவேண்டும், தமிழீழத்தில் பொதுவாக்கெடுப்பொன்று நடத்தப்படவேண்டும்



ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுகிறது.

## பாண்டிச்சேரி பல்கலையில் ஈழ மாணவர் கல்விக்கு வசதி

### துணைவேந்தர் தெரிவிப்பு

பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் இலங்கைத் தமிழ் மாணவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை வழங்க முன்வந்துள்ளது.

பாண்டிச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜே.ஏ.கே.தரீன் நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

'விடுதலைப் புலிகளுக்குப் பின் இலங்கை - இந்தியாவின் விளைவுகள்' என்ற தலைப்பில் நேற்று ஆரம்பமான அனைத்துலக கருத்தரங்கில் தலைமை உரையாற்றிய போதே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

பாண்டிச்சேரி பல்கலைக் கழக சமூக விஞ்ஞான மற்றும் அனைத்துலக கற்கைகள் பாடசாலையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கில் பேராசிரியர் தரீன் மேலும் பேசுகையில், இலங்கையைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் தம்மை அணுகினால் பல்வேறு பிரிவுகளிலும் அவர்களுக்கு இடங்களை ஒதுக்கத் தயாராக இருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

### அரிசி விலை எகிறும் சோற்றுக்கும் 'வேட்டு'

எரிபொருள் விலை அதிகரிப்புடன் அரிசியின் விலையும் நான்கு ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டுமென நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். நெல் குற்றுவதற்கான செயற்பாடுகளுக்கு டீசலும், மின்சாரமும் தேவைப்படுவதால் அவற்றின் விலையுயர்வினால் அரிசியின் உற்பத்திச்செலவும் உயர்ந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. தற்போது வெள்ளைப் பச்சை அரிசி 55 ரூபாவிலிருந்து 60 ரூபா வரையும், சிவப்புப் பச்சை அரிசி 53 ரூபாவிலிருந்து 58 ரூபாவரையும், சம்பா அரிசி 70 ரூபாவை அண்மித்த விலையிலும் உள்ளன.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்ல பெறுபேறு கிடைக்க சர்வதேசம் உதவுவது எப்போது?

இலங்கை வாழ் தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய கடப்பாடு பிரிட்டனுக்கு உண்டு என்று யாழ்ப்பாணம் வந்திருந்த அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுநலவாய நாடாளுமன்றத்தின் தலைவருமான சேர்.அலன் ஹாார்சல் துறுரஷ்டிடம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் தெரிவித்த கருத்துக்குப் பதில் அளித்த அவர் -

தீர்வை வழங்குமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்த முடியுமே தவிர, எம்மால் வேறு எதனையும் செய்ய முடியாது; இது விடயத்தில் எங்களால் இயற்றக்கூடிய வழிமுறைக்குள் இருந்து, செய்யவல்ல எல்லா உதவிகளையும் செய்வோம் - என்று பதில் அளித்துள்ளார்.

கூட்டமைப்பினர் தெரிவித்த கருத்து எந்தளவுக்குச் சரியானதோ, உண்மையானதோ, அதே போன்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் கூறிய அவர்களின் நிலைப்பாடும் சரியானதாகும். இலங்கை சுயாதிபத்தியம் 'உள்ள நாடு என்பதால், இந்நாட்டு அரசிடம் இப்படித்தான் செய்ய வேண்டும், இவ்வாறுதான் செயற்பட வேண்டும்; எதனைச் செய்ய வேண்டும் எதனை இயற்றக்கூடாது என்று வெளிநாடு எதுவும், உரத்துக்கூற இயலாது, நிர்ப்பந்திக்க முடியாது.

வேண்டுமானால் தாம் வழங்கக்கூடிய பல்வேறு வகை உதவிகள் மற்றும் சலுகைகள் ஊடாக இலங்கை அரசாங்கத்தை வசப்படுத்தி நல்லதைச் செய்யுமாறு நட்புறவுடன் கேட்டுக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

அதேபோன்று வெளிநாடு ஒன்று, இலங்கைக்கு வழங்கக் கூடிய கடன் திட்டங்கள், நிதி உதவிகள், வரிச் சலுகைகள் போன்றவற்றை நிறுத்துவதன் மூலம் இந்நாட்டு அரசாங்கத்தைத் தமது வழிக்குக் கொண்டுவரலாம். அதற்கு அப்பால் வேறு எந்த வகையாலும் இலங்கையை எதுவும் செய்ய முடியாது.

இத்தகைய நிலைமையே, தனக்கான பிரதான ராஜ சாதகமாக (ராஜயோகம் என்றும் சொல்லலாம்) இலங்கை அரசு பயன்படுத்துகிறது. ஆகையால் தனி ஒரு தேசம் என்றன்றி, வெளிநாடுகள் கூட்டாக, தமிழர்களுக்குரிய நியாயமான அரசியல் உரிமைகளை வழங்குவதற்குக் கூட்டு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே, இலங்கை அரசை சிறிதேனும் அரசியல் தீர்வுப் பாதைக்குக் காலடி நகர்த்தத் தூண்டுதல் செய்ய முடியும். அதனை முன்னின்று வழிநடத்த வேண்டிய பொறுப்பு பிரிட்டனுக்கு உண்டு என்று தமிழர்கள் எதிர்பார்ப்பது எந்த வகையிலும் தப்பன்று.

இலங்கையில் சமாதானம் மலர வேண்டுமெனில், அனைத்து இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான, நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படுவது மிகவும் அவசியம் - என்பதனை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், சேர். அலன் ஹார்சல் தலைமையிலான பிரிட்டிஷ்நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார்.

அதுமட்டுமன்றி, நிரந்தரத் தீர்வு ஒன்று, பொருத்தமான அரசியல் தீர்வொன்று காணப்படாவிடில், நாட்டில் மீண்டும் இக்கட்டான நிலை உருவாகக் கூடிய வாய்ப்பு உண்டு என்றும் ஆயர் மிகப் பொருத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த வகையில் அது பெரிதாக்கப்பட்ட கூற்றல்ல; மிகவும் யதார்த்தமானதே.

இலங்கையை 1802 ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரை - 145 ஆண்டுகள் பிரிட்டிஷார் (தமது குடியேற்ற நாடாக்கி) ஆண்டனர் என்பது வரலாறு. அவர்கள் சுதந்திரம் வழங்கிய போது, வரையப்பட்ட சோல்பரிப் பிரபுவின் ஒற்றையாட்சி அரசமைப்பே இந் நாட்டில் பெரும்பான்மையினர், சிறுபான்மை மக்களைப் பேரினவாதப் போக்கில் அரசாள்வதற்கு மிகுந்த வாய்ப்பை வழங்கியது.

அறுபத்துநான்கு ஆண்டு காலமாக இந்த நாடு இனப் பிரச்சினை என்ற சீரழிவில் சிக்கிக்கொண்டு, தமிழ் மக்கள் தமது நியாயமான பிறப்புரிமைகளைக் கூட அனுபவிக்க முடியாமல் தடுக்கப்பட்டுத் தவிக்கின்றனர். அதனைத் தவிர்ப்பதற்கு உதவ வேண்டிய வரலாற்றுக் கடப்பாடு ஒன்று பிரிட்டிஷாருக்கு உண்டு. அதனைத் தட்டிக் கழிப்பது பொருத்தமன்று. ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாக நின்று பணியாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு தனக்கு உண்டு என்பதனை பிரிட்டன் வசதியாகத் தவிர்த்துக்கொள்வது தார்மீகம் அன்று. இதனை ஒப்புக்கொள்ள வேண்டிய பண்பும் பலமும் நாகரிகமும் பிரிட்டிஷாரிடம் இருக்க வேண் டும். அதுவே அவர்களால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்ப்பும் அவாவுமாகும்.

வடக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறிப்பிடக் கூடிய அளவுக்குக் குறைக்க முடியாது. இங்கு இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைத்தால், அதற்கு முயன்றாலே, பயங்கரவாதத்துக்கான முனைப்புகள் தலையெடுக்கக் கூடும் என்று அரசாங்கம் கருதுகிறது; கருத வைக்கிறது. போர் முடிந்து இயல்பு நிலை தோன்றி மூன்று வருடங்கள் ஆகின்றன. ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் பல பற்றாக் குறைகளுடன் அச்சம் நிறைந்த நாள்களுடனுமே மாதங்களை நகர்த்துகிறார்கள். அன்றாடம், இரவும் பகலும், எந்த வேளையில் என்ன நடக்குமோ என்று தம்மை அறியாத ஒருவகை அச்சத்துடனேயே வாழ்வதற்கு ஆளாகியுள்ளனர்.

சர்வதேசத்துக்கு உயர்த்திக் காட்டுவதற்காக நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான சிபார்சுகளையேனும், அறிக்கை வெளியிடப்பட்டு இரண்டு மாதங்கள் கழியும் தறுவாயிலும் நடைமுறைப்படுத்துவது குறித்து அரசு மூச்சுத்தானும் காட்டவில்லை. ஆனால் அவை அமிர்தம் நிறைந்த தீர்த்தம் போன்றவை என்று வெளிநாடுகளுக்கு மேளம் அடித்துப் பிரசித்தம் செய்யப்படுகிறது. இதனைக் கிராமிய வழக்கில் வழங்கப்படும் 'வெறுவாய் சப்புவது' என்ற பதத்துக்கே ஒப்பிட முடியும்.

ஆகையால், வஞ்சிப்பு அற்ற, உகந்த அரசியல் தீர்வு ஒன்றின் மூலமும், ஏனைய நல்லிணக்க ஏற்பாடுகள் வழியாகவும் நாட்டில் இன ஒற்றுமையையும் சமாதானத்தையும் உண்டாக்க வேண்டும் என்று -

இந்நாட்டு அரசுக்கு உந்துதல் கொடுக்க வேண்டிய தமிழ் மக்களுக்கான உதவியை, பிரிட்டன் உட்பட்ட அனைத்துலக சமூகமே ஆற்றவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது இயல்பும் இயற்கையுமாகும். இது தொடர்பில் தமிழ் மக்களுக்கு உகந்த - நல்ல - பெறுபேறு கிடைப்பதற்கு சர்வதேசம் வீரியத்துடன் செயற்படுவது எப்போது?

# விலை உயர்வால் பாதிப்புற்ற யாழ்.மக்களுக்கு நிவாரணம்

## தமிழரசுக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.18

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வி.கே. சிவஞானம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அரசினால் இந்த வாரம் முதல் அமுல்படுத்தப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பு நாட்டு மக்கள் அனைவரையும் கடுமையாகப் பாதிக்கும் அதே வேளை யாழ்ப்பாண குடாநாட்டு மக்களை மிக மோசமாகப் பாதிக்கும் நடவடிக்கையாகும். பொதுவாக எரிபொருள் விலை அதிகரிப்பு, உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் செலவுகளை அதிகரித்து வாழ்க்கைச் செலவை அதிகரிக்கும் சுற்றேற்ற தாக்கத்தை (Spiral effects) கொண்டது அந்த நிலையை நமது மக்கள் எதிர் கொள்கின்றனர். இதன் தாக்கமாக சகல பொருள்களினதும் விலைகள் கணிக்க முடியாதவாறு ஏறிக்கொண்டிருக்கிறது.

இந்த வகையில் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு சலுகை அறிவிக்கப்பட்டாலும் அந்த நிவாரணம் போதுமானதா என்பது கேள்விக்குறியே.

இதேநேரம் தமது வாழ்வாதாரத்தை மீள்விக்க முயலும் விவசாயிகள் தமது நீர் இறைக்கும் தேவைகளுக்கு மண்ணெண்ணெயையும், மின்சாரத்தையும் நம்பியிருக்கின்றனர். இவற்றின் விலைகள் முன்னெப்போதும் இல்லாத வாறு அதிகரிக்கின்றன.

இதே போல் மண்ணெண்ணெயையும், மின்சாரத்தையும் நம்பியிருக்கும் கைத்தொழில் துறையும் உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக தமது உற்பத்திப் பொருள்களின் விலைகளை அதிகரிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இதேபோல கட்டுமானத்துறையும் மிகுந்த பின்னடைவைச் சந்திக்கும்.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் போது பல சந்தர்ப்பங்களில் இறக்குமதிப் பொருள்களின் விலை குறைவாக இருக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் சந்தை வாய்ப்பு குறைவடைந்து தொழில்களை மூடி விடும் நிலையும் உருவாகும்.

இவற்றினால் தொழில் வாய்ப்பு குறைந்து மக்களின் வருமானமும் குறைந்து வறுமை நிலைக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படும்.

சாதாரணமாக எந்த வீட்டிலும் அறுபது அலகுகளுக்கு மேலாகவே மின்சாரப் பாவனை இருக்கும். இப்பொழுது அமுலாக்கப்படும் கட்டண அதிகரிப்பின் படி அறுபது அலகுகளுக்கு மேலாக வீட்டுப் பாவனைக்கு மின்சாரம் பாவிக்கும் ஒருவர் 40 வீதம் அதிகரித்த கட்டணம் செலுத்த வேண்டும். முன்பு கட்டண வேறுபாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட 90 அலகும் இப்பொழுது 60 அலகாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது 100 ரூபா செலுத்தும் வீட்டுப் பாவனையாளர் இனிமேல் 140 ரூபா செலுத்த வேண்டும்.

எனவே இந்த அதிகரிப்புகள் குடாநாட்டின் மின்சாரப் பாவனையாளர்கள் அத்தனை பேரையும் பாதிக்கும். மேலும் சமையலுக்கு விறகு வளம் இல்லாது மண்ணெண்ணெய் அடுப்பைப் பாவிப்போரும் மிகவும் பாதிக்கப்படுவர். மண்ணெண்ணெய் விலை 50 வீதத்தால அதிகரிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. தமது தொழில் இடங்களுக்கு பிரயாணம் செய்வதற்கு பொது, தனியார் மற்றும் சொந்த வாகனப் போக்குவரத்தை நம்பியிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் துறை ஊழியர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் போன்ற அத்தனை பகுதியினரும் ஒட்டு மொத்தமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இவையெல்லாமே ஒவ்வொரு குடிமகனதும் வாழ்க்கைச் செலவை நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு அதிகரித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மிகப் பெரியளவில் பாதிக்கச் செய்யும் என்பதுடன் சிறுவர்களும் மாணவர்களும் கூட போசாக்கின்மைக்கு ஆளாக்கப்படும் அபாய நிலையும் ஏற்படும். இவற்றைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு போதிய நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதும் கட்டாயமானதும் ஆகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வடக்கில் சீவல் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.18

வடக்கு மாகாணத்தில் சீவல் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு சீவல் தொழிலுக்கு உரிய உபகரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகப் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் 190 பேருக்கும் கிளிநொச்சியில் 110 பேருக்கும் முதற் கட்டமாக சீவலுக்குரிய உபகரணங் கள் வழங்கப்படவுள்ளன.

சீவல்கத்தி, அதற்கான பாதுகாப்புப் பெட்டி, நெஞ்சுப்பட்டி, கால்பட்டி என்பன சீவல் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

வடக்கில் தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ள சீவல் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும் தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் பனை அபிவிருத்திச் சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்றார்.

(த-17)

## வவுனியா – கொழும்பு ரயில் பயணிகளுக்கு அதி சொகுசு வசதி

வவுனியா,பெப்.18

வவுனியா-கொழும்புக்கு இடையே சேவையில் ஈடுபட்டு வரும் 'சுப்பர் இன்ரர்சிற்றி" ரயிலின் ஒரு பகுதி நவீன முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த ரயிலின் ஒரு பகுதியைக் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று வாடகைக்கு அமர்த்தி அதை நவீன முறையில் புனரமைத்துள்ளது.

இந்தப் பகுதிக்கு பயணிகளின் சொகுசு கருதி குளிரூட்டி உட்பட சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

48 இருக்கைகளைக் கொண்ட இந்தப் பகுதியில் அமர்ந்து பயணிக்கும் ஒரு பயணியிடம் இருந்து ஆயிரத்து 500 ரூபா கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது.

(த-17)

## தமிழ் இறையியல் கல்லூரியை யாழ்.ஆயர் ஆரம்பித்து வைத்தார்

கொழும்புத்துறை,பெப்.18

தமிழ்மொழி மூலமான இறையியல் கல்லூரியை யாழ்.கத்தோலிக்க திருச்சபை ஆரம்பித்து வைத்துள்ளது. அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளின் விண்ணகப் பிறப்பின் 300 ஆம் ஆண்டு நிறைவில் அவரது பெயரைத் தாங்கி இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் உள்ள மறைப்பணி நிலையத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த வாரம் கல்லூரியைத் திறந்து வைத்து முதலாவது கல்வியாண்டுக் கற்கை நெறியை ஆரம்பித்து வைத்தார்.

பொதுநிலையினர் கழக இயக்குநரான அருட்திரு ம.வி.இ.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் அருட்திரு. ஞா. பிலேந்திரன் அடிகள் முதலாவது விரிவுரையை நடத்தினார்.

இக்கல்லூரியில் ஆரம்பித்திருக்கும் இறையியல் இளமாணி மற்றும் சான்றிதழ் கற்கைநெறிக்காக 55 பொது நிலையினர் பதிவு செய்து கல்வியை ஆரம்பித்துள்ளனர்.

(த-135)

## நிகழ்வுகள் இன்று

### பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட பெண்சாரணிய வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று யாழ். மத்திய கல்லூரி யில் நடைபெறும் என்று வடமாகாண ஆணையாளர் என்.தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார்.

### பாராட்டு விழா

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்ற எஸ். கந்தசாமியின் சேவைநலன் பாராட்டு விழா காலை 9.15 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் சங்கத் தலைவர் எஸ்.சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(த-14-115)

### கூட்டம்

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று குறிக்கப்பட்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

(த-100-115)

### ஆண்டு நிறைவு

ஆனைக்கோட்டை மூத்தோர் அவையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா காலை 9 மணிக்கு வண்.ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.சண்முகநாதன் கலந்து கொள்வார்.

### ஒன்று கூடல்



யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் கூட்டுறவு சபையின் முன்னாள் தலைவர், செயலாளர் ஆகியோரின் உருவப்படத் திரை நீக்கமும் இன்று முற்பகல் 11 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஊழியர் நலன்புரி சங்கத் தலைவர் ந.ஆனந்தராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் முதலாவது தலைவர் சி.சிவமகாராஜா, யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முதலாவது செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோரின் உருவப் படங்களின் திரை நீக்கமும் இடம்பெறும். (த-13-16)


# கொழும்பைக் கலங்க வைத்த ஆர்ப்பாட்டம்








## மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் வரை போராட்டம்

### ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரன் சூளுரை

- ★ குடும்ப அடக்குமுறையுடன் கூடிய ஆட்சியை நாட்டில் இல்லாதொழிக்க வேண்டும்.
- ★ மானியங்கள் எமக்கு வேண்டாம்.
- ★ எரிபொருள் விலையைக் குறைக்க வேண்டும்.

கொழும்பு, பெப்.18

மக்கள் மீது அராஜகம் புரியும் அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இந்த அரசை ஆட்சி பீடத்தில் இருந்து அகற்றும்வரை எமது போராட்டங்களை நாம் கைவிடப்போவதில்லை. நாட்டு மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிட்டும்வரை எமது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக எதிரணிக்கட்சிகள் நேற்று நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் நிலவுகின்ற குடும்ப ஆட்சியின் விளைவாக நாடு முழுவதும் அராஜகங்கள் மேலோங்கி உள்ளன. நாட்டு மக்களுக்கு பெரும் சுமையை ஏற்றி வைத்துள்ள மஹிந்த அரசு மக்களின் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும். மஹிந்த அரசை ஆட்சியில் இருந்து விரட்டியடிக்கும் வரை எமது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டேஇருக்கும் என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

'குடும்ப அடக்கு முறையுடன் கூடிய ஆட்சியை நாட்டில் இல்லாதொழிக்க வேண்டும்', 'மானியங்கள் எமக்கு வேண்டாம்', எரிபொருள் விலையைக் குறைக்க வேண்டும்' போன்ற அரசிற்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும், 'எரிபொருள் விலையேற்றத்தைக் குறைக்க வேண்டும் என' கோரி பெண்கள் மண்ணெண்ணெய் குப்பி விளக்குகளை கையில் ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மஹிந்தவின் குடும்ப ஆட்சியை இல்லாது ஒழிக்க வேண்டும் என பலத்த கோசமிட்டனர். அலைகடலென திரண்டுவந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் பேரணியால் ரயில் நிலையப் பகுதியில் நேற்று போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. அத்துடன், கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இருந்த ஜனாதிபதியின் பதாகையைக் கிழித்து மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில் -

ஆட்சிப் பீடத்தில் இருந்து அரசு வெளியேற வேண்டும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளாகிய நாம் ஒரே குரலில் கோஷமிடுகின்றோம். இலங்கை முழுவதும் மஹிந்த அரசு கவிழ்க்கப்பட வேண்டுமென போராட்டங்கள் வெடித்து வருகின்றன. மக்கள் மீது தொடர்ந்து தொல்லைகளையும் துன்பங்களையும் சுமத்தி வருகின்ற அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். ஆட்சி பீடத்தில் இருந்து அரசை அகற்றும்வரை எமது போராட்டங்களை நாம் கைவிடப் போவதில்லை. நாட்டு மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிட்டும் வரை எமது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும் - என்றார்.

## ரூ.3,000 மில்லியன் செலவில் கிளிநொச்சியில் மின்மாற்றி

கிளிநொச்சி,பெப் 18

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு முழுநேரச் சீரான மின்சாரத்தை வழங்குவதற்கென ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் உதவியுடன், கிளிநொச்சியில் பெரிய மின்மாற்றிகளைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 3 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு மின்மாற்றிகளை, ஜெய்க்கா நிறுவனம், இதற்கென வழங்கியிருக்கின்றது. இதன் மூலம் வவுனியாவிலிருந்து வரும் 132 கிலோ வாற்ஸ் மின்சாரத்தை, 33 கிலோவாற்ஸ் மின்சாரமாக மாற்றி அது வன்னிப் பகுதிக்கு வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் சீரான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளவுள்ளதுடன் தொழிற்சாலைகளுக்குத் தேவையான 3 நிலை மின்சாரத்தையும் வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் சுமார் 1 லட்சம் மக்கள் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். இத்திட்டம் எதிர்வரும் யூலை மாதம் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

## தற்செயல் நிவாரண உதவி இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

தென்மராட்சி, பெப்.18

தென்மராட்சி பிரதேசத்தில் தற்செயல் நிவாரண உதவி பெற்ற இருவருக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பணவுத்தொகை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளை குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# மின்சாரம் இல்லாதோருக்கு மண்ணெண்ணெய் முத்திரை

## விவரங்களை அனுப்பி வைக்கக் கோரிக்கை

வலி. வடக்கு, பெப் 18

யாழ். மாவட்டத்தில் மின்சாரம் இல்லாத குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை சமுர்த்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழும் பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் மின்சாரம் இன்றி வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில் தற்போது மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் உரிய மின்சார வசதிகள் இன்றி பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சுமார் நான்காயிரத்தி ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

**யாழ்ப்பாணத்தில் தீவகம் வலிகாமம் பகுதிகளில் பல இடங்களும் வடமராட்சியில் பல இடங்களும் மின்சாரம் வழங்கப்படாத நிலைமையில் காணப்படுகின்றது.**

இதனை விட யாழ்ப்பாணத்தில் தீவகம் வலிகாமம் பகுதிகளில் பல இடங்களும் வடமராட்சியில் பல இடங்களும் மின்சாரம் வழங்கப்படாத நிலைமையில் காணப்படுகின்றது.

இவர்களுக்குத் தற்போது மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை சமுர்த்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளில் வாழும் மக்களின் விவரங்களை உடன் அனுப்புமாறு யாழ். மாவட்ட சமுர்த்தி அதிகார சபையிடமும் கோரப்பட்டுள்ளது.

இதனையிட்டு யாழ். மாவட்டத்தில் மின்சாரம் இல்லாதவர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பும் வகையில் சமுர்த்தி அலுவலர்கள், கிராம அலுவலர்களிடம் இருந்து விவரங்களை பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-86)

# சுயதொழில் கடன் பெறுவோருக்கு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

புனர்வாழ்வு அதிகார சபையினர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்குச் சுயதொழில் கடன் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் ஊக்குவிப்புப் பயிற்சி தொடர்பான கலந்துரையாடலை நடத்தவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் அந்தந்தப் பிரதேச செயலங்களின் விவரம் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் அந்தந்தப் பிரதேச செயலங்களின் விவரம் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தக் கலந்துரையாடலில் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

குணரத்தினம் சத்தியரமேஸ், மட்டுவில் தெற்கு, யோகநாதன் பிருந்தா- தாவளை இயற்றாலை, வீ. உதயகுமார் - அல்லாரை வடக்கு, விஸ்வலிங்கம் ஈஸ்வரலிங்கம் - கெற்பேலி மேற்கு, தெய்வேந்திரன் சதீஸ்வரன் - மருதடி வீதி, மீசாலை, வடக்கு., திலீபன் சுகுணலதா- மந்துவில் கிழக்கு, சோதிலிங்கம் ஜெயகுமார் - சங்கம் வீதி, சங்கத்தானை,

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரச அதிபர் பிரிவு- கந்தசாமி கலைவாணி - ஆழியவளை வடக்கு, வேதாரணியம் ஸ்ரீசங்கர்- மாமுனை வடக்கு செம்பியன்பற்று, ஆறுமுகம் அக்ஸன்- உடுத்துறை வடக்கு, நாகமணி ஓவியசீலன்- மாமுனை வடக்கு, சிவரங்கநாதன் சிகிதா- மாமுனை வடக்கு. (ம-9)

## இலவச இரத்த பரிசோதனை

தென்மராட்சி, பெப்.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவோர் இலவசமாக இரத்தப் பரிசோதனை செய்யும் வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இரத்தப் பரிசோதனை இயந்திரம் 'நிக்கொட்' திட்டத்தில் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு அவை பொருத்தப்படும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தப் பணிகள் பூர்த்தியடைந்ததும் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதிகள் ஆகியவற்றில் சிகிச்சை பெறுவோருக்கு இலவசமாக இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் இதுவரை காலமும் தனியார் ஆய்வு கூடங்களில் பணம் செலுத்தி இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)



*காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியும் அலங்கார வளைவுத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி வீரமங்கை யோகரட்ணம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (ம-250)*

# இயற்றாலைக்கு வெளிச்சம்

தென்மராட்சி பிரதேசத்தின் வரணி, இயற்றாலை கிராமம் முதன் முறையாக மின் வெளிச்சம் பெறவுள்ளது.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்ட மின் விநியோகத் திட்டம் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மின் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (ம-9)

## பாலாவியில் மாணவி கடத்தல்; மேலும் மூவர் சந்தேகத்தில் கைது

பாலாலி தெற்கில் பாடசாலை மாணவியை ஓட்டோவில் கடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் மூவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர். பாலாவி தெற்கைச் சேர்ந்த இருவரையும் கச்சாயைச் சேர்ந்த ஒருவரையும் சந்தேகத்தில் கைது செய்த பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை மூவரையும் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கலந்துவிட்டுத் திரும்பியவேளையில் பாலாவி தெற்கில் மாணவியை ஓட்டோவில் கடத்திய சம்பவம் தொடர்பாக ஏற்கனவே பாலாவி தெற்கு, மந்துவில் கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# சுன்னாகம் – கந்தரோடை வீதியால் அவல நிலை

வலி வடக்கு, பெப் 18

சுன்னாகம் - கந்தரோடை வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதால் பயணிகள் வாகன சாரதிகள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

பல மாதங்களாக இந்த வீதி சேதமடைந்து காணப்படுகின்ற போதிலும் இதனை திருத்தும் நடவடிக்கையில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் எந்த வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கந்தரோடை புதை பொருள் நிலையத்தை பார்வையிட நாளாந்தம் தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் பஸ்கள் மற்றும் உள்ளூர் பயணிகளின் வாகனங்கள் என நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் பயணக்கின்றன.

அத்துடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தமிழ் கந்தையா மகா வித்தியாலயம், நாகேஸ்வரி வித்தியாலயம், றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை செல்லும் மாணவர்கள் அயல் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் உட்பட மானிப்பாய், சண்டிலிப்பாய் சங்கானை எனச் செல்லும் பயணிகள் விவசாயிகள் என பல ஆயிரக் கணக்கானவர்கள் பயணம் செய்யும் இந்த வீதி சேதமடைந்து காணப்படுகின்றது.

**பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் சிரமமடைந்து வருகின்றனர்.**

எனினும் உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்காமை குறித்துப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-86)

# பெண் பொலிஸ் சார்ஜன்ட்டுக்கு மேல் நீதிமன்றம் பிடியாணை

யாழ்ப்பாணம், பெப்.18

வழக்கொன்று தொடர்பாக நீதிமன்றுக்குச் சாட்சியமளிக்க வரும்படி உத்தரவிடப்பட்டபோதும் தொடர்ந்து மூன்று தடவைகள் நீதிமன்றுக்குச் சமுகமளிக்காத பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்கு யாழ்.மேல் நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டு மூன்று வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர் மீதான பிணை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர் மீதான பிணை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கென யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைத் தட்டச்சில் பதிவு செய்த பெண் பொலிஸ் சார்ஜன்டை மன்றுக்கு வரும்படி ஏற்கனவே இரண்டு தடவை உத்தரவிடப்பட்டிருந்தது. நேற்று முன்தினமும் சாட்சியமளிக்க அவர் வராததனாலேயே அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கில் கிளிநொச்சி தொண்டமான் நகரைச் சேர்ந்த சீவரட்ணம் பாலதயாபரன் (வயது- 41) என்பவர் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் கைது செய்யப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்றில் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவருக்கு எதிராக இருந்த ஒரேயொரு சான்று பொருள் அவரது குற்ற ஒப்புதல் வாக்கு மூலமாகும். அதனைப் பதிவு செய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகரினதும் அதனை மொழிபெயர்ப்புச் செய்த பொலிஸ் சார்ஜன்டினதும் சாட்சியங்கள் முடிவுற்ற நிலையில் இக் குற்ற வாக்குமூலத்தைத் தட்டச்சுச் செய்த பெண் பொலிஸ் சார்ஜன்ட் மூன்றாவது தடவையாகவும் ஆஜராகவில்லை.

அதனையடுத்தே பிடியாணை பிறப்பிக்கப்பட்டதோடு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரனும் எதிரி சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸும் ஆஜரானார்கள். (த-4)

# மகேந்திரபுரத்தில் மக்களுக்கு சுவிஸ் கரித்தாஸ் 20 வீடுகள்

## யாழ்.ஆயர் நேற்றுக் கையளித்தார்

கொழும்புத்துறை, பெப்.18

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தால் யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகள் நேற்றுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு நேற்றுக் காலை கொழும்புத்துறை மகேந்திரபுரத்தில் நடைபெற்றது.

சுவிற்சர்லாந்து நாட்டு மக்களின் நிதியுதவியுடன் சுவிஸ் கரித்தாஸ் நிறுவனத்தினூடாக யாழ். கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் இந்த வீடுகளை நிர்மாணித்தது.



கையளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வீட்டுத்திட்ட பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வீட்டுப் பத்திரங்களை பயனாளிகளிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் விசேட விருந்தினர்களாக சுவிஸ்- கரித்தாஸ் நிறுவனப் பிரதிநிதி அனீனா ஃபீலர், கரித்தாஸ் நிறுவன தேசிய இயக்குநர் அருட்திரு ஜோர்ஜ் டி.சிகாமணி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் கே.தெய்வேந்திரராஜா, கிராம அலுவலர் எ.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுவிற்சர்லாந்து நாட்டு மக்களின் நிதியுதவியுடன் சுவிஸ் கரித்தாஸ் நிறு வனத்தினூடாக யாழ். கரித்தாஸ் – கியூடெக் நிறுவனம் இந்த வீடுகளை நிர்மாணித்தது.

தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் யாழ்.கரித்தாஸ் -கியூடெக் இயக்குநர் அருட்திரு பேணாட் றெக்னோ, பாஷையூர் பங்குத்தந்தை அருட்திரு பேடினன்ட் றோய் ஆகியோரும் பங்குபற்றினர். (த-135)

# 'ஆட்டக்காரி'யில் ஆர்வம் தந்தாள் சுவழய பயன்

யாழ்ப்பாணம்,பெப்.18

குடாநாட்டில் இந்த வருடப் பெரும்போக நெற்செய்கையில் '' ஆட்டக்காரி'' நெல்லுக்கே அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் குடாநாட்டில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் அதிகளவானோர் ''ஆட்டக்காரி'' நெல் விதைப்பில் ஆர்வம் காட்டியுள்ளார்கள்.

இந்த நெல் வகை முற்றிலும் நவீன முறையில் விதைக்கப்படுவதாலும் தொழிலாளர்களுக்கு ஆள் தேடி அலைய வேண்டிய நிலை இல்லை என்ற நிலையிலும் நவீன முறையில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

நவீன முறையில் விதைக்கப்பட்ட இந்தப் பயிர்ச் செய்கையில் அதிகளவு நெல் உற்பத்தியாகியமை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனைவிட நெல் அறுவடைகள் யாவும் நவீன இயந்திரங்கள் மூலம் இடம் பெற்றதால் கால தாமதம் இன்றி ஆட்டக்காரியை மூடைகட்டி உடனடியாகவே உழவு இயந்திரங்களில் விவசாயிகள் வயலை விட்டு எடுத்துச் செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

நுகர்வோர் கடந்த வருடம் ஆட்டக்காரி மீதே அதிக ஆர்வம் கொண்டதன் காரணமாகவும் வியாபாரிகள் ஆட்டக்காரியை விற்பனைக்காக வாங்குவதாலும் அதிகளவு விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

குறிப்பாகக் கந்தரோடை, பருத்தித்துறை, தனங்கிளப்பு, வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் இந்த ஆட்டக்காரி நெல் அதிகம் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் கடந்த வருடம் ஆட்டக்காரி மீதே அதிக ஆர்வம் கொண்டதன் காரணமாகவும் வியாபாரிகள் ஆட்டக்காரியை விற்பனைக்காக வாங்குவதாலும் அதிகளவு விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## குமுதினிக்கு இன்று விடுமுறை


யாழ்ப்பாணம்,பெப்.18

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரசபடகு குமுதினி இன்று சனிக்கிழமை சேவையில் ஈடுபடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படகு திருத்த வேலை இடம்பெறவுள்ள காரணத்தாலேயே இன்றையதினம் சேவையில் ஈடுபடாது என நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி கூறியுள்ளார். (ம-7)

## கொடுப்பனவுகள் கிடைக்காதோர் தொடர்பு கொள்க

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதே செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்தவர்கள் யூ.என்.எச்.சி. ஆர். வழங்கும் கொடுப்பனவு ரூபா 20 ஆயிரம் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கூறியுள்ளார். (ம-7)



பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை நியவனதிரிய திட்டத்தின் கீழ் இன்பருட்டியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் மூவருக்கு பலநாள் தங்கியிருந்து தொழில் செய்யும் இயந்திரப் படகுகளைக் கடன் அடிப்படையில் அண்மையில் வழங்கியது. இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் கே.ஈ.பி.டி. சுமண ஸ்ரீ பயனாளி ஒருவருக்குப் படகின் திறப்பைக் கையளிக்கின்றார். (ம-8)

# கச்சதீவு ஆலய சூழல் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

மார்ச் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலைத் துப்புரவு செய்யும் பணியை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

பயணிகள் இறங்குவதற்கென தற்காலிக பாலம் அமைக்கும் பணியும் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை, இந்திய யாத்திரிகர்கள் கணிசமான அளவு திருவிழாவில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் மக்களின் வசதிகளைக் கருத்தில் கொண்டு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கச்சதீவு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத் தந்தை ஆகியோர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கச்சதீவுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர். (ம-7)

## வேலை தேடுவோர் விவரம் பதிவு

யாழ்ப்பாணம், பெப்.18

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வேலை தேடுபவர்களுக்கான பதிவுகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மூன்று தினங்கள் கொக்குவில் கேணியடி சனசமூக நிலையத்தில் கிராம அலுவலர் பிரிவு ஜே/121, ஜே/123, ஜே/124, ஜே/125, ஜே/126, ஜே/127, ஜே/128 பிரிவுகளுக்கான பதிவுகள் இடம்பெறவுள் என.

இந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ம-7)

# குடத்தனை வடக்கில் மருத்துவ சேவை நடத்துக

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கோரிக்கை

வடமராட்சி, பெப்.18

குடத்தனை வடக்கில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் வாரத்தில் இரு தினங்களாவது வைத்திய சேவைகளை நடத்தி பின் தங்கிய மக்களுக்கு உதவ வேண்டும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பகுதிக்கென கடந்த காலங்களில் கட்டப்பட்டிருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடம்பெயர்ந்த அம்பன் அரசினர் வைத்தியசாலை இயங்கி வந்தது.

நிலைமை வழமைக்குத் திரும்பியதையடுத்து அம் பன் அரசினர் வைத்திய சாலை சொந்த இடத்துக்குச் சென்றதையடுத்து இங்கு வைத்திய சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

நிலைமை வழமைக்குத் திரும்பியதையடுத்து அம்பன் அரசினர் வைத்தியசாலை சொந்த இடத்துக்குச் சென்றதையடுத்து இங்கு வைத்திய சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

அத்துடன் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கென கட்டடம் இருந்த போதும் ஆரம்ப சுகாதார சேவைகள் கூட நடைபெறுவதில்லை.

எனவே வெறுமையாக உள்ள இந்தக் கட்டடத்தில் வாரத்தில் இரண்டு தினங்களாவது வைத்தியசேவையை நடத்த முன்வரவேண்டும்.

இந்த வைத்திய சேவையால் இந்தக் கிராமத்தையும் அதனை சுற்றியுள்ள நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் பயன்பெறுவார்கள்.

எனவே இந்தச்சேவையை ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு புதிய தொலைபேசி இலக்கங்கள்

தென்மராட்சி, பெப். 18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு புதிய தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை அலுவலகத்துக்கு 021-227-0661, வெளிநோயாளர் பிரிவுக்கு 021-227-0662 ஆகிய புதிய இலக்கங்கள் ரெலிகொம் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

முன்னர் வைத்திய சாலையில் காணப்பட்ட சிடிஏஎம் தொலைபேசிகள் செயலிழந்துள்ளதையடுத்து புதிய தொலைபேசி இலக் கங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# கூட்டு ஒப்பந்தம் மீறப்பட்டது குறித்து மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

நுவரெலியா,பெப்.18

கூட்டு ஒப்பந்தத்தில் மலையக மக்களுக்கு தோட்ட நிர்வாகங்கள் வழங்குவதாக உத்தரவாதம் அளித்தவற்றை தோட்ட நிர்வாகங்கள் வழங்காதுள்ளமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் என்பனவற்றின் மீதே செய்யப்பட்டுள்ளது.

**தோட்ட நிர்வாகங்கள் உத்தரவாத மளித்ததைப் போன்று சம்பளத்தையோ, இதர கொடுப்பனவுகளையோ, சலுகைகளையோ இதுவரையும் வழங்கவில்லை**

கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் நீதிபதி பிரியந்த ஆர்.பி. பெரேராவிடமே மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த முறைப்பாட்டைதெரிவித்தார்.

மலையகத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக கூட்டு ஒப்பந்தத்தில் தோட்ட நிர்வாகங்கள் கையெழுத்திட்டன. தொழில் அமைச்சர் முன்னிலையிலேயே இவர்கள் கையெழுத்திட்டு அரசுக்கு மலையகத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினை தொடர்பில் உத்தரவாதத்தினையும் அளித்திருந்தனர் என்று அவர் தெரிவித்தார்.

தோட்ட நிர்வாகங்கள் உத்தரவாதமளித்ததைப் போன்று சம்பளத்தினையோ, இதர கொடுப்பனவுகளை யோ, சலுகைகளையோ இது வரையும் வழங்கவில்லை என்று முரளி ரகுநாதன் முறைப்பாட்டில் தெரிவித்தார். (ச)

# குரங்குகளின் தொல்லை; மக்கள் பெரும் சிரமம்

எருவில், பெப்.18

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முதலாம், பத்தாம் பிரிவுகளில் குரங்குகளின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால் அவற்றிலிருந்து தாம் விடுபட சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கிராம மக்கள் கோருகின்றனர்.

கடந்த பல வருடங்களாகக் காட்டுக் குரங்குகளின் அட்டகாசம் குறித்து பிரதேசத்திலுள்ள மக்கள் அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் கூட, இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. காட்டுக் குரங்குகளினால் பயிர்கள் சேதமாக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் இரவுவேளைகளில்தான் இவற்றினால் அதிக சேதம் ஏற்பட்டு வந்தது. தற்போது இந்த நிலை மாறி அவை பகல் நேரங்களிலும் அதிக தொந்தரவைத் தருவதுடன், வீட்டின் வெளிப்புறச் சூழலில் எந்த வித பொருள்களையும் பகல் நேரங்களில் வைக்கமுடியாத நிலைமையும் தோன்றியுள்ளது.

இவற்றின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றதே தவிர, குறைந்தபாடில்லை என்று தெரிவித்த கிராமவாசிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு செயற்பட முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (ச-31)

# குளத்தை புனரமைக்க நடவடிக்கை

மகாவெலி,பெப்.18

மகாவெலி, வெலிக்கந்த திட்டத்தின் கீழ் உள்ள ஜெயந்திபுர குளம் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவின் முயற்சியினால் புனரமைக்கப்படவுள்ளதாக பிரதியமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் குளமானது கடந்த 20 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில், நீர்ப்பாசன அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து குறித்த குளத்தினை புனரமைப்புக்கு தேசிய நீர்வழங்கல் அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தக் குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)



திருகோணமலை மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

# தலவாக்கலையில் ஆர்ப்பாட்டப் பேரணி

நுவரெலியா,பெப்.18

தோட்டத் தொழிலாளர்களிடத்தில் வேலைப்பளுவைத் தன்னிச்சையாக அதிகரித்து வருகின்ற தோட்டக் கம்பனிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 29 ஆம் திகதி தலவாக்கலை நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெறவுள்ளதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த டிசெம்பர் மாதம் முதல் தோட்டக் கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களின் சம்மதமின்றி வேலைப் பளுவை அதிகரித்து வருவதால் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்து வருகின்றனர்.

**கூட்டொப்பந்தம் காரணமாக தொழிலாளர்கள் அடிப்படை உரிமைகளை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

தற்போது நடைமுறையிலுள்ள கூட்டொப்பந்தம் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தமது அடிப்படை உரிமைகளைக் கூட இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ச)

# குளங்களின் வான்கதவுகள் திறப்பு

**வான்கதவுகள் திறக்கப்பட்டதால் அதிகளவு ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின.**

மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பு மாவடத்தில் மிகப்பெரிய நீர்ப்பாசனக் குளங்களான உன்னிச்சை மற்றும் உறுகாமம் குளங்களின் வான்கதவுகள் நேற்றுமுன்தினம் மாலை திறக்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்தக் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் கிரான் பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மகிழவெட்டுவான், பாலம்மடு, சிவத்தபாலம், சின்னப்புச்சேனை, சித்தான்டி, உப்போடை உள்ளிட்ட பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# கடைத்தொகுதியில் தீ

நுவரெலியா,பெப்.18

நுவரெலியாவில் கண்டி பிரதான வீதியில் கடந்த புதன்கிழமை திடீரென கடைத் தொகுதி ஒன்று தீப்பற்றிக் கொண்டது.

நுவரெலியா மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# புகை கக்கும் வாகனத்தால் மக்கள் அசௌகரியம்

மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் புகை கக்கும் வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் போக்குவரத்து செய்வோர் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு-கல்முனை, மட்டக்களப்பு-பொலநறுவை நெடுஞ்சாலைகளில் இவ்வாறான வாகனங்கள் அதிகமாக போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

எனவே இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# வரவு-செலவுத் திட்டத்தில் வேலைவாய்ப்பு விவரமில்லை

## பட்டதாரிகள் சங்கம் மனு

மட்டக்களப்பு,பெப்.18

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தொழில்வாய்ப்பு வழங்கப்படுவது தொடர்பில் தெரிவிக்கப்படாமை குறித்து மனு ஒன்றை மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளித்துள்ளனர்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கடந்த காலங்களில் அரசால் பட்டதாரிகளுக்கும் இளம் சமுதாயத்துக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் 2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் எந்தவித தொழில் வாய்ப்புக்கள் பற்றியோ அதற்கான நிதியொதுக்கீடு பற்றியோ தெரிவிக்கப்படவில்லை.

அகில இலங்கை ரீதியாக 40,000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப் பற்றுள்ளனர். அரசின் இந்தச் செயற்பாடானது, ஒவ்வொரு பட்டதாரிகளுக்கும் உடல், உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போர், இயற்கை அனர்த்தம் போன்றவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இங்குள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த நிலைமை மாறியுள்ளது. அனைத்து பட்டதாரிகளையும் புறக்கணித்த செயலாகவே அதனை நாங்கள் கருத வேண்டியுள்ளது.

எனவே அரசு வேலைவாய்ப்பு வழங்குவதில் விசேட திட்டத்தின் கீழ் தீர்க்கமான தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இயந்திரக்கூலி அதிகரிப்பு: விவசாயிகளுக்கு நஷ்டம்

அம்பாறை,பெப்.18

எரிபொருள் விலையேற்றம் காரணமாக நெல் அறுவடை இயந்திரங்களுக்கான கூலி அதிகரித்துள்ளதால் தமது விவசாய நடவடிக்கைகளில் மேலும் நஷ்டத்தை எதிர்கொண்டு வருவதாக அம்பாறை மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளின் நெல்லை அரசு கொள்வனவு செய்ய முன்வராத நிலையில், தனியார் அரிசி ஆலைகளுக்கு தமது நெல்லை அடிமட்ட விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை காரணமாக விவசாயிகள் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில், தற்போது பெய்துவரும் மழை காரணமாக அறுவடைக்குத் தயாராகவுள்ள அதிகளவு நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது எரிபொருள் விலையேற்றம் காரணமாக நெல் அறுவடை இயந்திரங்களுக்கான கூலியும் அதிகரித்துள்ளது.

இதனால் அதிக நஷ்டத்தை எதிர்கொண்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)



# மதுபானசாலையை மூடுமாறு மீனவர்கள் மனு கையளிப்பு

மன்னார், பெப்.18

மன்னாரில் மதுபான சாலை ஒன்றை மூடுமாறும், புதிய மதுபானசாலையை அமைக்கும் வேலைகளை உடன் நிறுத்துமாறும் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பனங்கட்டுக் கொட்டு சௌத்பார் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுத் தற்போது இயங்கி வரும் மதுபானசாலையினை உடனடியாக மூடுமாறு கோரியும், அந்தப் பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபான சாலையின் வேலைத் திட்டங்களை நிறுத்துமாறு கோரியும் மட்டுப்படுத்தப் பட்ட பனங்கட்டுக்கொட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினர் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல்லின் கவனத்துக்கு கொண்டுவரும் வகையில் மனுவொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

பனங்கட்டுக்கொட்டு வாழ் மக்கள் அனைவரும் கடற்தொழிலை நம்பி வாழும் மக்கள். அன்றாடம் கடலில் தொழிலினை மேற்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே தமது குடும்ப ஜீவனோபாயத்தையும் பிள்ளைகளின் கல்வி, மருத்துவம் போன்றவற்றையும் மேற்கொள்ளுகின்றார்கள்.

**சிறு வயதிலேயே சிறுவர்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாகின்றார்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றமற்றுக் காணப்படுகின்றது. இதனால் எமது கிராமத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள மதுக்கடையை அகற்றுவதற்குப் பல்வேறு முயற்சிகளை எமது மக்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.**

இவ்வாறான நிலையில் பனங்கட்டுக்கொட்டு கிராமத்துக்குள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மதுபானச் சாலையால் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியாமல் அவதிப்படுகின்றோம். இதனால் குடும்பங்களில் சண்டை சச்சரவுகள் அதிகரித்துள்ளன. பாடசாலை மாணவர்களும் பெண்களும் மதுக்கடைகள் உள்ளமையினால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

சிறு வயதிலேயே சிறுவர்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாகின்றார்கள். குடும்பங்களில் சேமிப்புக்கள் இல்லாமல் போகின்றது. குடும்பங்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றமற்றுக்காணப்படுகின்றன. இதனால் எமது கிராமத்துக்குள் அமைக்கப் பட்டுள்ள மதுக்கடையை அகற்றுவதற்குப் பல்வேறு முயற்சிகளை எமது மக்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில் தற்போது மேலுமொரு மதுபானச்சாலையினை எமது கிராமத்துக்குள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. ஏற்கனவே உள்ள மதுபான சாலையால் எமது சமூகம் பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் போது புதிதாக மதுபானச்சாலை அமைக்கப்பட்டால் எமது சமூகம், மேலும் பாதிப்புக் குள்ளாகும் நிலையே உருவாகும் என்பதைத் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

கடந்த காலங்களிலும் பார்க்க எமது கிராம மாணவ சமூகம் கல்வியில் பல முன்னேற்றங்களை அடைந்து வருகின்றது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் தொகையை அதிகரிப்பதற்கு நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே எமது கிராமத்தில் நல்லொழுக்கமுள்ள சிறந்த சிறுவர் சமூகமும், கல்விச் சமூகமும், ஆரோக்கியமான மக்கள் சமூகமும் உருவாகுவதற்கு ஏதுவாகத் தற்போதுள்ள மதுபானச்சாலையை அகற்றுமாறும், கிராமத்துக்குள் புதிதாக மேலுமொரு மதுபான சாலை அமைக்கப்படாமல் இருக்க ஆவன செய்யுமாறும் பனங்கட்டுக்கொட்டு வாழ் மக்கள்சார்பாக கேட்டுக்கொள்ளுகின்றோம் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மனுவில் மட்டுப் படுத்தப்பட்ட பனங்கட்டுக் கொட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள், நிர்வாக உறுப்பினர்கள் என 06 பேர் கையெழுத்திட்டு அனுப்பிவைத்துள்ளனர்.

இதன் பிரதிகள் மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர, மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை, மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் பேராலயப்பங்குத் தந்தை உள்ளிட்ட பலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(க-12)

## பாடசாலைகளுக்கு அருகில் மது விற்பனையில் இராணுவம்

கிளிநொச்சி, பெப்.18

புதுக்குடியிருப்பில் பாடசாலைகளுக்கு அருகில் இராணுவத்தினர் மது விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை மற்றும் மத்திய கல்லூரி என்பவற்றுக்கு அருகில் இராணுவத்தினரின் மதுபான விற்பனை இடம் பெற்று வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்துக்குள் புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகிய இரு பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் புதுக்குடியிருப்புச் சந்தியில் உள்ள இராணுவத்தினரின் தேநீர்க் கடையில் மதுபான விற்பனை அமோகமாக நடைபெற்றுவருகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்ற வேளையிலும், பாடசாலையின் ஆரம்ப வேளையிலும் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர்.

**பாடசாலை மாணவர்கள் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கின்ற வேளையிலும், பாடசாலையின் ஆரம்ப வேளையிலும் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.**

ஏற்கனவே பாதிக்கப் பட்ட சமூகத்தின் கல்வியைச் சீரழிக்கக் கூடிய வகையில் மேற்கொள்ளப்படும் இது போன்ற நடவடிக்கைகள் கைவிடப்படவேண்டும் எனவும் இந்தப் பகுதியில் மதுபான விற்பனையை முற்றாகத் தடை செய்ய அல்லது அதனை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டுமெனவும் பலதரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-6)



வவுனியாவில் இடம்பெற்ற கொழும்பு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை டிப்ளோமா பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் காணப்படுகின்றனர். (421)


## இட நெருக்கடிக்குள் பாடசாலை

வவுனியா புளியங்குளம் இந்துக் கல்லூரி இடநெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றான புளியங்குளம் இந்துக் கல்லூரியில் 316 மாணவர்கள் உள்ளனர். 24 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர்.

இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாத போதிலும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர். இந்த நிலையில் முக்கிய பாடங்களுக்கு ஆசிரிய பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாணவர் தொகைக்கேற்ப வகுப்பறைகள் இல்லாததால் இடநெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். (க-18)

## மன்னார் மீனவர்கள் தொழில் புறக்கணிப்பு



சிலாபத்தில் மீனவரின் பூதவுடல்

மன்னார், பெப்.18

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த மீனவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மன்னார் மீனவர்கள் தமது தொழிலை ஒருநாள் புறக்கணித்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்துச் சிலாபத்தில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் வர்ணகுலசூரிய அன்ரனி பெர்னாண்டோ என்ற மீனவர் உயிரிழந்தார். இவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே நேற்றுப் பிற்பகல் 4 மணி தொடக்கம் இன்று பிற்பகல் 4 மணிவரை தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இதேவேளை இறந்தவரின் குடும்பத்தினருக்குத் தமது சமாசத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## வரலாற்றை ஆவணமாக்குவது காலத்தின் தேவையாகும்

### துணுக்காய்ப் பிரதேச செயலர் தெரிவிப்பு

அக்கராயன், பெப்.18

கல்லூரிகள் தமது வரலாற்றை ஆவணமாக்குவது காலத்தின் தேவையாகும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன்.

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**ஒரு கல்லூரியின் பொன் விழா என்பது மனிதனின் உணர்வோடு தொடர்புடைய விடயமாகும். எமது உணர்வுகளைத் தூண்டி எங்களுடைய ஆளுமைகளையும் திறமைகளையும் வெளிக்கொணரக் கூடிய வகையில் தான் இவ்வாறான விழாக்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.**

இந்தக் கல்லூரி 50 ஆண்டுகளை நிறைவு செய்து நிலைத்து நிற்கிறது என்றால் அதன் வரலாற்றை ஆவணமாக்க வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு இருக்கின்றது. பல பாடசாலைகள் 100 ஆண்டுகள் கடந்தும் தமது இலக்குகளை மறந்து காணப்படுகின்றன.

**ஆனால் தனக்கெனத் தனி இடத்தைப் பிடித்து மல்லாவி மத்திய கல்லூரி நிமிர்ந்து நிற்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.**

(க-18)

## எமக்கும் வேண்டும் நிரந்தர வீடுகள் வவுனியா வடக்கு அரச ஊழியர் கோரிக்கை

அக்கராயன், பெப்.18

வவுனியா வடக்கிலுள்ள அரச ஊழியர்களும் தமக்கு நிரந்தர வீடுகள் வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா வடக்குப் பிரதேசம் போர்க்காலத்தில் பெரும் அழிவுகளைச் சந்தித்த பகுதியாகும்.

இந்தப் பகுதியில் பெருமளவு மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ள அரச ஊழியர்களுக்குத் தற்காலிக மற்றும் நிரந்தர வீடுகள் எவையும் வழங்கப்படாத நிலை காணப்படுகிறது.

**1997 இல் இராணுவம் மேற்கொண்ட ஜயசிக்குறு போர் நடவடிக்கையின் போது இங்குள்ள வீடுகள் அனைத்தும் அழிக்கப் பட்டன. 2000 ஆம் ஆண்டில் மக்கள் மீளக்குடியமர்ந்தனர்.**

இங்கு செல்வாக்கின் அடிப்படையில் சில அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பொதுவான நிலையில் வவுனியா வடக்கில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

1997 இல் இராணுவம் மேற்கொண்ட ஜயசிக்குறு போர் நடவடிக்கையின் போது இங்குள்ள வீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டில் மக்கள் மீளக்குடியமர்ந்தனர். 2008 இல் நிகழ்ந்த இடப்பெயர்வுகளில் இந்தப் பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் அழிவடைந்தன. 2010 இல் மீள்குடியமர்வு நடைபெற்ற பின்னர் மீள்குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படும் நிலையில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை.


போருக்கு முன்னர் நிரந்தர வீடுகள் இருந்தன. அழிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் அமைத்துத் தரும் படியே அரச ஊழியர்கள் வேண்டுகை விடுத்துள்ளனர்.

(க-18)

# ஹொண்டுரஸ் சிறைச்சாலையின் பேரிடர் குறித்து அதிர்ச்சித் தகவல்

## கரிக்கட்டைகளாக உடல்கள் மீட்பு

தீப்பிடித்த போது அறைக்குள் இருந்த கைதிகள் வெளியேற வழி தெரியாமல், உதவி கேட்டு அலறித் துடித்தனர். ஆனால் சிறைக் காவலாளிகளோ, கைதிகள் கலவரத்தில் ஈடுபடுவதாகக் கருதி வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். தீக்கிரையான உடல்களை தூக்க முயன்றபோது அவை கரிக்கட்டைகளாகக்,கிடந்ததால் உடைந்து நொறுங்கின.



மத்திய அமெரிக்க நாடான ஹொண்டுரஸில் உள்ள சிறைச்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 359 கைதிகள் உயிரிழந்தனர். இந்த விபத்து ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பது குறித்த அதிர்ச்சித் தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன.

ஹொண்டுரஸின் கோமயாகுவா நகரில் சிறைச்சாலையில் 500 கைதிகளை அடைப்பதற்கான இடவசதி மட்டுமே உள்ளது. ஆனால் இங்கு 850 கைதிகள் அடைக்கப்பட்டு இருந்தனர்.


தீப்பிடித்த போது அறைக்குள் இருந்த கைதிகள் வெளியேற வழி தெரியாமல், உதவி கேட்டு அலறித் துடித்தனர். ஆனால் சிறைக் காவலாளிகளோ கைதிகள் கலவரத்தில் ஈடுபடுவதாகக் கருதி வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இந்தக் கலவரத்திற்கு இடையே கைதிகள் கூரை வழியாக வெளியேறி தப்பினர். பெரும்பாலான கைதிகள் தீயில் சிக்கியதாலும், புகை மூட்டத்தில் மூச்சு திணறியும் உயிரிழந்தனர்.

சிறைச்சாலை நிர்வாகம் மட்டுமின்றி, செஞ்சிலுவைச் சங்கத்தினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனால் உடல்களைத் தூக்க முயன்ற போது அவை கரிக்கட்டைகளாக உடைந்து நொறுங்கின.

இது மீட்புப்பணியில் ஈடுபட்டவர்களையும் அதிர வைத்தது. மரபணுச் சோதனை மற்றும் பல் மாதிரியை வைத்துத்தான் கைதிகளை அடையாளம் காண முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. (ந)

## விண்வெளியைச் சுத்தம் செய்யும் செயற்கைக்கோள்



வானில் செயலிழந்து போன செயற்கைக்கோள்கள் விண்வெளியில் குப்பைகளாக மிதந்து வருவதால் அவற்றைச் சுத்தப்படுத்த புதியதோர் செயற்கைக் கோளை சுவிஸ் விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

இந்தச் சிறிய செயற்கைக்கோள் பல கைகளுடன் கூடிய ஜெல்லி மீன் போலத் தோற்றம்முடையது.அதே சமயம் தலைக்கு மேலுள்ள' அதன் பாதையின் மிதந்துவரும் குப்பைகளைத் திரட்டி, விண்வெளியை தூய்மையாக மாற்றி விடும் எனத் தெரிவிக்கின்றனர் விஞ்ஞானிகள்.

எதிர்வரும் 2016 ஆம் 'ஆண்டில் இந்தச் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் பறக்க வாய்ப்புள்ளது.

(ந)

## ஆப்கன் தலிபான்களுடன் முத்தரப்பு ரகசியப் பேச்சு

அமெரிக்கா- ஆப்கான் தலிபான்கள் இடையே முத்தரப்பு ரகசியப் பேச்சு நடந்து வருகிறது என ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய் தெரிவித்துள்ளார்.

காபூலில் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது;

தலிபான்களும், ஆப்கானில் வசிக்கும் மக் களும் அமைதியை விரும்புகின்றனர். எனவே தான் இந்த முத்தரப்பு பேச்சு தொடங்கியுள்ளது.

விரைவில் முழு அளவிலான பேச்சு தொடங்கும் எனத் தெரிவித்தார்.

ஆனால் எந்த இடத்தில் ரகசியப் பேச்சு நடைபெறுகிறது என்ற தகவலை அவர் தெரிவிக்க மறுத்துவிட்டார். (ந)

## மாலைதீவில் விரைவில் தேர்தல்

### புதிய அதிபர் இணக்கம்



மாலைதீவில் முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு அந்த நாட்டின் புதிய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடரும் அமைதியின்மை மற்றும் சர்வதேசத்தின் அழுத்தங்களினால் ஜனாதிபதி முஹமட் வாஹிட் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம் எனச் சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.


அடுத்த வருடம் தேர்தல்கள் நடத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அது முன்கூட்டியே நடத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மாலைதீவில் ஏற்பட்ட அரசியல் எதிர்ப்பு மற்றும் பொலிஸாரின் எதிர்ப்பால் முன்னாள் ஜனாதிபதி முஹமட் நஷீட் பதவி விலகியிருந்தார்.இந்த நிலையில் தாம் வலுக் கட்டாயமாக பதவி யிலிருந்து விலக்கப் பட்டதாக அவர் குற்றம் சுமத்தி வருகின்றார். (ந)



பிரான்ஸ்ஸில் கொண்டாடப்பட்ட 79ஆவது லெமன் திருவிழாவில் எலுமிச்சை மற்றும் தோடம்பழங்கள் மூலம் பல்வேறு உருவங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் இதற்காக 300வேலையாள்கள் 145 தொன்பழங்கள் பயன்படுத் தப்பட்டுள்ளன.

## 'ரஷ்யப் பிரதமர் சிறையில்' காணொலியால் பரபரப்பு



ரஷ்யப் பிரதமரான விளாடிமீர் புடினை கைது செய்து சிறையில்அடைத்திருப்பது போன்ற காணொலி ஒன்று வெளியாகியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த வீடியோப் பதிவு செய்யப்பட்டு சுமார் 72 மணித்தியாலங்களுக்குள் மூன்று மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பார்த்துள்ளனர்.

குறித்த வீடியோவின் பின்னணியில் செய்தி வாசிப்பாளர் ஒருவரின் குரல் பதிவாகியுள்ளது. இந்தக் காணொலியில் மூன்று மணிநேரத்துக்கு முன்னதாக புடின் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். தொடர்ந்து நீதிமன்றில் உங்களின் பெயர் மற்றும் உங்களின் சொந்த நாடு எது என விசாரிக்கின்றார். அதற்கு ரஷ்யக் குடியரசைச் சேர்ந்த விளாடிமீர் புடின் என்று பதில் அளிக்கிறார் ரஷ்யப் பிரதமர். இந்தக் காட்சிகள் காணொலியில் ஒளிபரப்பப்பட்டது. (ந)

## பிரச்சினையைத் தீர்க்க காலம் உள்ளது

வொஷிங்டன்,பெப்.18

அணுஆயுத விவகாரத்தில் ஈரானுடன் சர்வதேச நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க இன்னும் நேரம் உள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. இது குறித்து அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரி கூறியதாவது;

சர்வதேச அளவில் நல்ல முறையிலான தீர்வுகாண ஈரான் விரும்பினால்,அதனைத் தூதரக அளவில் தீர்வு ஏற்படுத்துவதற்கான நேரம் மற்றும் அவகாசம் உள்ளதாக கூறியுள்ளார். மேலும் ஈரானுக்கு ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் எழுதப்பட்ட கடிதம் எங்களுக்கும் கிடைத்துள்ளது. அந்த கடிதத்திற்கு ஈரான் பதில் வழங்க வேண்டியுள்ளது.

ஆனால் இந்த நேரத்தில் கடிதம் தொடர்பாக எந்தவித பதிலும் வழங்க விரும்பவில்லை எனக் கூறினார்.(ந)

## இந்தியா அணுகுமுறை திருப்தி அடைகிறார் நஷீட்

மாலே, பெப். 18

மாலைதீவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையில் இந்தியாவின் அணுகுமுறை திருப்தி அளிப்பதாக அந்நாட்டு முன்னாள் அதிபர் முகமது நஷீட் கூறியுள்ளார்.

முன்னதாக இந்தியாவின் அணுகுமுறை தனக்கு ஏமாற்றம் அளிப்பதாக அவர் தெரிவித்திருந்தார். ஆனால் இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாயை கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசிய பின், நஷீட் தனது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.மாலைதீவில் ஏற்பட்டுள்ள பிரச்சினை யைத் தீர்க்க ஐ.நா.வும் இந்தியா உள்ளிட்ட நாடுகளும் அமைதித் தூதர்களை அங்கு அனுப்பியது. அவர்கள் அங்குள்ள அரசியல் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். இதன் ஒருபகுதியாக இந்திய வெளியறவுச் செயலர் ரஞ்சன் மாத்தாய், மாலைதீவுக்குச் சென்றார். அந்நாட்டு முன்னாள் அதிபர் நஷீட்டை சந்தித்துப் பேசினார். தொடர்ந்து மாலைதீவின் தற்போதைய அதிபர் முகமது வாஹீத் ஹசனையும் அவர் சந்தித்தார்.

சந்திப்புக்குப் பின் நஷீத் கூறியதாவது; இங்கு ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தைப் போக்க இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நம்பிக்கை அளிக்கும் வகையில் உள்ளன. இந்த விஷயத்தில் இந்தியாவின் அணுகுமுறை திருப்தியாக உள்ளது என்றார். (ந)

## இந்தியாவில் தீவிரவாதம் அதிகரிப்பு

ஜெருசலேம்,பெப்.18

இந்தியாவில் தீவிரவாதிகள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர் என, இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய எரிசக்தித் துறை அமைச்சர் உசி லாண்டவ், அடுத்த வாரம் இந்தியப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணம் குறித்து டெல் அவிவ் நகரில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்த தாவது; டில்லியில் இஸ்ரேலியத் தூதரக அதிகாரி காரில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளதன் மூலம், இந்தியாவில் தீவிரவாதிகளின் நடமாட்டம் தீவிரமாக உள்ளது தெரிகிறது. தீவிரவாத ஒழிப்பில் இந்தியாவும் இஸ்ரேலும் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றன என்றார்.

# அமெ.-ஈரான் முறுகல் நிலைமை மோசமடைகிறது

## அணு வல்லமை பகிரங்கப்படுத்தப்பட்டதால் வொஷிங்டன் சீற்றம்; போர்ப் பதற்றம் தீவிரம்

வொஷிங்டன்,பெப்.18

அணு சக்தி திட்டங்களை ஈரான் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து வொஷிங்டன் சீற்றம் அடைந்துள்ளது. இதன் காரணமாக முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்முஸ் நீரிணைக்கு விமானந்தாங்கிக் கப்பல்களை அனுப்பி வைத்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் போர்ப்பதற்றம் தீவிரமடைந்துள்ளது.



அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே அணு சக்தி விவகாரத்தில் முறுகல் ஏற்பட்டதை அடுத்து ஹோர்முஸ் நீரிணையில் பதற்றம் ஏற்பட்டது.

உலகின் எண்ணெய் விநியோகத்தில் பெரும்பகுதி ஹோர்முஸ் நீரிணை வழியாகத்தான் நடைபெறுகிறது. ஈரானுக்கு அண்மையில் உள்ள ஹோர்முஸ் நீரிணை வழியாகத்தான் பேர்சியன் வளைகுடாவைத் தாண்ட வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு அமெரிக்காவின் நடவடிக்கைகள் தீவிரமானால் ஹோர்முஸ் நீரிணையை இழுத்து மூடுவோம் என்று ஈரான் அறிவித்திருந்தது. ஹோர்முஸை மூடினால் பதிலடி கொடுப்போம் என்ற அறிவிப்பையும் அமெரிக்கா வெளியிட்டிருந்தது.

இதனால் அமெரிக்காவின் அணு ஆயுதங்களைத் தாங்கிய ஆபிரகாம் லிங்கன் போர்க் கப்பல் கடந்தமாதம் ஹோர்முஸ் நீரிணையில் முகாமிட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அணுசக்தி திட்டங்களை பகிரங்கமாக ஈரான் அதிபர் வெளிப்படுத்தியதை அடுத்து போர் விமானங்களையும் ஹோர்முஸ் நீரிணைக்கு அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. (ந)

## பட்டம் பெற்ற சிறுவன்!



அமெரிக்காவைச் சேர்ந்த சிறுவன் மோஷேகாய் கவலின்என்ற சிறுவன் ஒரே ஆண்டில் பட்டப்படிப்பை முடித்து சாதனை படைத்துள்ளான்.

தனது 8 வயதில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கம்யூனிட்டி கல்லூரியில் சேர்ந்த இந்தச் சிறுவன் ஒரே ஆண்டில் பட்டப் படிப்பை முடித்து சாதனை படைத்துள்ளான். அதுமட்டுமல்லாமல் இளம் வயதிலேயே நம்மால் முடியும் என்ற பெயரில் ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளான். அந்தப் புத்தகத்தில் ஏனைய சிறுவர்களும் தன்னைப் போல் குறுகிய காலத்தில் சாதனை படைக்க என்ன செய்ய வேண்டும் என்றும் எழுதியுள்ளான்.

அறிவாற்றல் நிறைந்தவர்களை ஜீனியஸ் என சொல்வார்கள். இந்தச் சிறுவனும் அப்படித்தான் கூறப்பட்டான். ஆனால், அதை ஏற்க அவன் மறுக்கிறான். கடுமையாக உழைத்தால் எல்லோருமே ஜீனியஸ் எனப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளான். இதுபோல், மாணவர்கள் டிவி பார்ப்பதை குறைத்து கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறான். (ந)

## இஸ்ரேலிய - பலஸ்தீன வாகன விபத்து

இஸ்ரேலிய வாகனம் ஒன்றுடன் பலஸ்தீன பஸ் ஒன்று மோதியதில் 8 பலஸ்தீன சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பலஸ்தீனத்தின் மேற்குக்கரை வீதியொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இந்த மோதலின் போது குறித்த பஸ் குடைசாய்ந்து தீப்பற்றத் தொடங்கியது. இதனால் முப்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இறந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்படி பஸ்ஸில் சுமார் 50 பேர் பயணம் செய்துள்ளனர். இவ்விபத்தையடுத்து 3 நாள் துக்க தினத்தை பலஸ்தீன ஜனாதிபதி மொஹமட் அப்பாஸ் பிரகடனப்படுத்தியுள்ளார். (ந)

## சீனாவில் கப்பல்கள் மோதல்

சீனாவில் மூழ்கி கொண்டிருந்த கப்பல் ஒன்றுடன் மற்றொரு கப்பல் மோதி விபத்துக்குள்ளானதில் 19 பேர் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளனர். காணாமற்போயுள்ள மூன்று பேரை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில், தெற்கு சீன கடலில் இரண்டு நாள்களுக்கு முன் ஏற்பட்ட கடல் சீற்றம் காரணமாக ஒரு கப்பல், விபத்துக்குள்ளாகி மூழ்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கப்பலில் இருந்த எட்டு பேர் கடலில் அடித்து செல்லப்பட்டனர். இவர்களில் ஐந்து பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், இதே வழியாக வந்த மற்றொரு கப்பல் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்தக் கப்பலில் இருந்த 14 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். (ந)

20 ஆவது ஆண்டு நிறைவில் புதுப்பொலிவுடன்...

**அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்து உற்பத்திசாலை**

Dr, N. நவரட்ணத்தின் பரம்பரையாகவும், மருத்துவக் கல்லூரியின் போதனைகள் மூலம் மருத்துவத்தை முறையாகக் கற்ற Dr. K.V. துரைராஜாவின் 7 ஆவது பரம்பரையின் கீழும் மருத்துவக் கல்லூரியின் போதனைகள் மூலமும் தகுந்த முறையில் கற்று தேர்ந்து 8 ஆவது பரம்பரையாக சிறந்த சித்த ஆயுள்வேத மருத்துவமுறைகள், பரம்பரை மருத்துவ முறைகள், விசேடமான யாழ்ப்பாண மருத்துவ முறைகள் மற்றும் மேலைத்தேய மருத்துவ முறைகள் மூலமும் மாற்ற முடியாது என கைவிடப்பட்ட நோய்களை மாற்றுவதில் பிரசித்தி பெற்றதும் எல்லோராலும் பாராட்டப்பட்டதுமான எமது வைத்தியசாலையானது விசேடமாக

★ நீரிழிவு
★ Asthma
★ மாதவிடாயின் போது வலி
★ காலம் தவறிய மாதவிடாய் மற்றும் மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகள்
★ நாரிப் பிடிப்பு மற்றும் நாரி நோ (Neuro pathy treatment மூலம்)
★ உடம்பு சூடு
★ ஞாபக சக்தி குறைவு
★ சிறுவர் நோய்கள்
★ மாதுரு நோய்கள்
★ குடற்புண்
★ குடும்பநல ஆலோசனைகள்
★ உடல் உறவில் ஈடுபாடு குறைவு மற்றும் விருப்பம் இன்மை மற்றும் சகல விதமான நோய்களையும் தகுந்த முறையில் சிகிச்சை அளித்து பூரணமாக குணப்படுத் தப்படும்

Note - வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

Medical Officer
Dr. N. நவரட்ணம் - 3rd Tradional physician
Dr. K.V. துரைராஜா - 7th Tra dional physician
Dr. கோபிநாத் - 8th Tradional physician
CATMP Reg No - 4715
CAMP Reg No - 11080
Govt. A.H.L. No - ஆயு/யா/ம.சா/ 76

Head:
29, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Branch
மாதா கோயில்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

T.P. 077 8449356, 077 3535516
mail - Agasthiyar products. S193 @ gmail. com (14508) (45-6-9)

**35 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 24 ★ 10 ★ 1948



மறைவு 16 ★ 01 ★ 2012

**கனகராயர் சிவபாலன் (துரை)**

(இளைப்பாறிய கணக்காளர் இ.போ.ச (CTB) கோண்டாவில்)

அன்னாரின் பிரிவு செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலம், வேறு வழிகள் மூலமும் இரங்கலும் ஆறுதலும் தெரிவித்து அன்னாரின் இறுதிச் சடங்குகளிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆறுதல் கூறி பலவழிகளிலும் துணை நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (18.02.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பனைச் சந்தி,
பன்னாலை, தெல்லிப்பழை. (14598)

குடும்பத்தினர்

# தமிழினத்தைக் கொன்றொழித்த காங்கிரஸை தோற்கடிப்பேன்

## சீமான் சவால்



மும்பை மட்டுமல்ல, இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் வாய்ப்புக் கிடைக்கும் இடத்தில் எல் லாம் பரப்புரை செய்து காங்கிரஸ் கட்சியை வீழ்த்தப் பாடுபடுவேன்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் சேர்ந்து தமிழினத்தை கொன்றொழித்த காங்கிரஸை தோற்கடிப்பேன் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் சவால் விடுத்துள்ளார்.

மும்பை மாநகராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழர் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரை செய்த சீமான் தெரிவித்ததாவது:

மும்பை மட்டுமல்ல, இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் வாய்ப்புக் கிடைக்கும் இடத்தில் எல்லாம் பரப்புரை செய்து காங்கிரஸ் கட்சியை வீழ்த்தப் பாடுபடுவேன்.

இலங்கையில் ராஜபக்ஷ அரசு தமிழர்களை அழித்தொழிக்க நடத்திய இனப்படுகொலைப் போருக்கு மத்திய காங்கிரஸ் அரசு ஆயுதம் கொடுத்தும், ஆலோசனை வழங்கியும், ராடர் அளித்தும், நிதியுதவி, சிங்கள படையினருக்குப் பயிற்சி என்று எல்லா வகையிலும் உதவியுள்ளது. என் இனத்தை வேரோடு அழிக்கத் துணை போன காங்கிரஸ் கட்சியை என்னுயிர் தமிழ்ச் சொந்தங்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிக்க வேண்டும்.

உண்மையான ஒவ்வொரு தமிழனும் இலங்கையில் தன் இனத்தை அழித்த காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வாக்களித்து பழி தீர்க்க வேண்டும். இதற்கு மேலும் காங்கிரஸ் கட்சிக்கு எந்தத் தமிழனாவது வாக்களித்தால் அவனது பிறப்பைச் சந்தேகிக்க வேண்டும்.

தமிழினப் பகைவனான ராஜபக்ஷவுடன் சேர்ந்து கொண்டு ஒன்றேமுக்கால் இலட்சம் தமிழர்களைக் கொன்றொழித்த காங்கிரஸ் அரசை மத்தியில் இருந்து மட்டுமல்ல, கர்நாடகம், ஆந்திரம், கேரளம், மராட்டியம், குஜராத் என்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் வாய்ப்பு கிடைக்கும் இடத்தில் எல்லாம் சென்று பரப்புரை செய்து தோற்கடிக்க முயற்சிப்பேன். இது சத்தியம் என்று சீமான் முழக்கமிட்டார். (வ)

### அண்ணா நூலக வழக்கு பெப். 20 இற்குள் பதில் வழங்க உத்தரவு

சென்னை, பெப்.18

அண்ணா நூற்றாண்டு நூலக வழக்கில், எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் பதில் வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளபோது, அரசு நூலகத்துக்கான வசதிகளைக் குறைத்து வருவதாக பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனை தனி முறைப்பாடாக தாக்கல் செய்யும்படி, அந்த மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

(வ)



தலைநகர் புதுடில்லியில் உள்ள சீன தூதரகம் முன்னால் திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களை பொலிஸார் அலாக்காகத் தூக்கிச்செல்கின்றனர்

# மாணவரிடையே மோதல் மாணவரை துப்பாக்கியால் சுட்ட சக மாணவன்



அமிர்தசரஸ், பெப்.18

பஞ்சாப் மாநிலத்தில் 11-ம் வகுப்பு மாணவரை சக மாணவர் ஒருவர் பள்ளி வளாகத்தில் நடந்த மோதலில் துப்பாக்கியால் சுட்டதால் காயமடைந்துள்ளார். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும் அந்த மாணவர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரின் 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பங்காலி கலான் மாவட்டத்தின் மஜிதா தொகுதியில் அரசு மேல் நிலைப்பள்ளி ஒன்று உள்ளது.

இங்கு 11ஆம் வகுப்பில் கல்வி கற்கும் நவதீப்சிங் என்ற மாணவன் தலைமையிலான குழுவுக்கும், வேறொரு மாணவர்கள் குழுவுக்கும் இடையே கடந்த சில தினங்களுக்கு முன்பு விரோதம் இருந்து வந்துள்ளது. இந்த சூழ்நிலையில் நேற்றுமுன்தினம் பள்ளிக்கு வந்த நவதீப்சிங் என்ற மாணவர் பாடசாலை பாக்கில் மறைத்து வைத்திருந்த சிறிய ரக துப்பாக்கியால், தன்னிடம் மோதிய சக மாணவரை நோக்கி சரமாரியாகச் சுட்டதாகக் கூறப்படுகிறது. இதில் மூன்று மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

துப்பாக்கிக்குண்டு பாய்ந்த மாணவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும், அவர் தற்போது அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டார் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாணவர்களிடையே நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய மாணவர் நவதீப்சிங் மற்றும் ஒரு மாணவரை வலைவீசி தேடி வருகின்றனர். (வ)

# ஜெயாவைச் சந்திக்கச் சென்ற மீனவர்களைத் தடுத்த பொலிஸார்

திருவொற்றியூர்,பெப்.18

முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து நேற்று மனு கொடுக்கச் சென்ற மீனவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பியதால் எண்ணூர் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை திருவொற்றியூர், எண்ணூர் கடற்கரை பகுதியில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் வசிக்கின்றனர். கட்டுமரம், பைபர் படகு மூலம் மீன்பிடித்து பிழைப்பு நடத்துகின்றனர். எண்ணூர் பகு தியில் உள்ள அரசு, தனியார் நிறுவனத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர், கடலில் கலக்கிறது. இதனால் தண்ணீர் நச்சுத்தன்மை ஏற்பட்டு மீன்கள் இறந்து விடுகின்றன. இதனால் மீனவர் தொழில் பாதிக்கப்பட்டது. வருமானம் இல்லாமல் மீனவர்கள் தவித்தனர்.

எனவே, எண்ணூர் பகுதியில் உள்ள அரசு நிறுவனத்தில் மீனவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்று அரச மாவட்ட ஆட்சியாளருக்கு மனு அனுப்பினர். இதில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில், மீனவர்கள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் நேற்றுக் காலை கத்திவாக்கம் நகரில் குவிந்தனர். அங்கிருந்து 20 வானில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்திக்கப் புறப்பட்டனர்.

தகவல் அறிந்ததும் எண்ணூர் பொலிஸ் உதவி ஆணையாளர் செல்வஅரசு தலைமையில் பொலிஸார் விரைந்தனர். வானில் சென்ற மீனவர்களைத் தடுத்து நிறுத்தினர். சென்னையில் முதல்வர் இல்லை. எனவே, அவரைச் சந்திக்க முடியாது. அமைச்சரிடம் போய் மனுக் கொடுங்கள். அதுவும் ஊருக்கு 2 பேர்தான் அமைச்சரை பார்க்க அனுமதிக்கப்படுவார்கள்' - என்றனர். (வ)

# மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு இத்தாலிக்கு இந்தியா கண்டனம்



ஆலப்புழா கடற்பகுதியில் இத்தாலிக் கப்பல் பாதுகாவலர்கள் சுட்டதில் இந்திய மீனவர்கள் 2 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு, இத்தாலித் தூதரிடம் வெளியுறவுத்துறை கடும் கண்டனம் தெரிவித்தது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த சரக் குக் கப்பல் என்ரிகா லெக்சி, கொச்சி துறைமுகத்துக்கு ஆலப்புழா கடற்பகுதி வழியாகச் சென்று கொண்டிருந்தது.

அப்போது அந்தக் கப்பலுக்கு அருகே மீன்பிடிப் படகு ஒன்று வந்தது. அதில் இந்திய மீனவர்கள் 11 பேர் பயணம் செய்தனர். 9 பேர் தூங்கிக் கொண்டிருந்தனர். சாரதியும் மற்றொருவரும் விழித்திருந்தனர். கடற்கொள்ளையர்கள் கப்பலை நெருங்குகின்றனர் என்று நினைத்து, இத்தாலிக் கப்பலின் பாதுகாப்பு வீரர்கள் முன்னெச்சரிக்கை விடுக்காமல் படகு மீது திடீரெனத் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் இரு வர் உயிரிழந்தனர். இவர்களில் ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் மற்றொருவர் கேரள மீனவர்.

இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்க இந்தி யா வுக்கான இத்தாலி தூதர் ஜியாகோமா சான்பெலிசி டி மான்டே போர்டேவுக்கு வெளியுறவுத்துறை நேற்றுமுன்தினம் அழைப்பாணை அனுப்பியது. அவரிடம் வெளியுறவுத்துறை செயலாளர் கணபதி, இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்தார். இதுகுறித்து மான்டே போர்டே பேட்டியளிக்கையில் தெரிவித்ததாவது:

சர்வதேச விதிமுறைப்படி இத்தாலிக் கப்பல் வீரர்கள் நடந்து கொண்டனர். எனினும் இது மிகவும் வருத்தமான சம்பவம். இது தொடர்பான விசாரணையில் இந்திய அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு அளித்து வருகிறோம் - என்றார்.

# ரஷ்ய விஞ்ஞானிகளை வெளியேற விடமாட்டோம்

## நாராணயசாமி தெரிவிப்பு

டில்லி, பெப்.18

கூடங்குளத்தை விட்டு ரஷ்ய விஞ்ஞானிகளும், நிபுணர்களும் வெளியேற மாட்டார்கள். அவர்களை நாடு திரும்பவிடமாட்டோம்' என்று பிரதமர் அலுவலக இணையமைச்சர் நாராயணசாமி உறுதிபடத் தெரிவித் தார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் நிருபர்களிடம் டில்லியில் மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்ததாவது:

கூடங்குளத்தில் உள்ள ரஷ்ய நாட்டின் விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் தங்களது சொந்த நாட் டுக்கே திரும்பப் போவதாக செய்தி வெளியாகியுள்ளது. ஆனாலும், அவ்வாறு நடக்காமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. அவர்கள் கூடங்குளத்திலேயே தங்கியிருக்க அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும். விஞ்ஞானிகளையும், நிபுணர்களையும் திருப்பி அனுப்பும் அளவுக்கு நிலைமை செல்லாது. இதுகுறித்து ரஷ்ய அரசுடன் முறைப்படி அதிகாரிகள் பேசி வருகின்றனர். எனவே, இந்தப் பிரச்சினை உரிய முறையில் அணுகப்பட்டு, தீர்வு காணப்படும்.

கூடங்குளம் பிரச்சினை குறித்து, 15 பேர் அடங்கிய நிபுணர் குழுவை பிரதமர் மன்மோகன் சிங் அமைத்தார். அந்த குழு 77 பக்க அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. அதன்படி, கூடங்குளம் அணுமின் நிலையம் பரிபூரண பாதுகாப்புடன் உள்ளது. அதில், நவீன தொழில்நுட்பத்துடன் இந்த அணுமின் நிலையம் இருப்பதால், சுற்றுச்சூழல் கேடுகள் ஏற்படாது. கடல்வளம் பாதிக்கப்படுவதற்கோ, மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதற்கோ வாய்ப்பில்லை.- என்றார் அவர். (வ)

# கர்ப்பிணிப் பெண்ணை விமானத்தில் ஏற்ற மறுப்பு

### வாக்குவாதத்தை அடுத்து சிசு பிறந்து சாவு

கர்ப்பிணிப் பெண்ணை விமானத்தில் ஏற்ற மறுப்பு தெரிவித்த நிலையில், அவருக்கு குழந்தை பிறந்து இறந்தது. ஆந்திராவின் ராஜமுந்திரியைச் சேர்ந்தவர் எம்.எல். காமசுந்தரி(வயது 26). இவர் மலேசியா செல்வதற்காக கடந்த புதன்கிழமை இரவு வந்தார். அப்போது 7 மாதக் கர்ப்பிணியான காமசுந்தரி விமானத்தில் செல்வதற்கு, மருத்துவரின் உடல்தகுதி சான்றிதழ் வேண்டும் என விமானத்துறை அதிகாரிகள் கேட்டனர். ஆனால் அந்த சான்றிதழ் இல்லை என்று சுந்தரி தெரிவித்ததால், அங்கு இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் சுந்தரிக்கு திடீரென வயிற்றுவலி ஏற்பட்டதால், அங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு ஆண் குழந்தை பிறந்து இறந்தது. (வ)

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானேஸ்வரி நகுலேஸ்வரன்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சமாது ஒழுங்கை, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி - நகுலேஸ்வரன் 15.02.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாமுத்து - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் மதிவதனா, சந்திரவதனா, ஸ்ரீவதனா, மதிவதனன், ஈஸ்வரவதனா, மணிவண்ணனண் ஆகியோரின் அன்புத் தாயும் வசீகரன், தயாபரன், டானியல், மிதிலா, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியும் தர்சன், பானுசன், யதுசன், தக்ஷன்யா, அபிஷா, அரிசன், அனுக்ஷா, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, கோணேஸ்வரி, சிவானந்தம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், விசாகப்பெருமாள், பரமேஸ்வரி, நீலாதாட்சி மற்றும் புவனேஸ்வரி, ராசேஸ்வரி, நாகலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் மகளின் இல்லத்தில் நாளை (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (சி/8999)(2-7-9)

தகவல்:
பிள்ளைகள்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
நாகராசா தர்மதாஸ்
(குட்டிமணி)

மலர்வு
24★11★1981

உதிர்வு
06★01★2012

நாளை (19.02.2012) ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை. (14600) (2-7-9)

குடும்பத்தினர்.

# Available Job
## Web Developer

If you are motivated, Committed, Bright Hardworking, willing to explore.

New Possibilities, creative and resoureceful, you have what it takes

PHP (Experience in any framework is an advantage)

HTML, XML Javascript CSS AJAX MySQI

* Good Knowledge in PHP
* Familiarity With MySQL and SQL
* General Knowledge of HTML, AJAX

C- Date - 20.03.2012
Multi Techno Plus Pvt Ltd.
No. 66, Palaly Road, Jaffna,
www.multitechnoplus.com
mail - post@multitechnoplus.com
T.P. 077 7034989,
0777885101

# காரைக்கால் மீனவர்கள் 3 பேர் இலங்கைக் கடற்படையால் கைது

காரைக்கால், பெப்.18

காரைக்காலைச் சேர்ந்த மூன்று மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நாகப்பட்டினத்தில் பதிவு செய்யப்பட்ட படகின் உரிமையாளர் பழனி யாண்டி, புதுச்சேரி மாநிலம் காரைக்காலைச் சேர்ந்தவர். அவரது படகில், ஜெகதாப் பட்டினத்தில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களில் 3 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களுடைய படகும், அதில் இருந்த மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. காங்கேசன் துறை முகத்தில் வைத்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. மூன்று பேர் மீதும் போதைப்பொருள் கடத்தல் வழக்கு பதிவு செய்ய இலங்கை கடற்படை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# இலங்கை அகதிகள் 64 பேர் படகு மூலம் ஆஸிக்கு

இலங்கையில் மிகவும் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளான 64 பேர் இந்தோனேசியக் கடற்பரப்பினூடாக கடந்த புதன்கிழமை ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இவர்களை ஆஸ்திரேலியக் கடற்பரப்பில் கைது செய்த ஆஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் 64 இலங்கைப் பயணிகளுடன்இந்தோனேசியாவிலிருந்து பறப்பட்ட 45அடி நீளமான படகே ஆஸ்திரேலியக் கடற்பரப்பில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (வ)

## வேலையாள் தேவை

நகைக்கடை ஒன்றுக்கு வேலை ஆள் தேவை. தொடர்பு : 0775035549.

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி டிப்போ றோட் அருகில் 10x16 அளவுள்ள சிறிய ஸ்ரோர் வாடகைக்கு உண்டு. 0771045415

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கற்குழி 1ஆம் ஒழுங்கையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776913342

## தவறிவிட்டது

சிவகுரு நித்தியானந்தன் என்பவரது தேசிய அ. அட்டை (இல 473510200V) சாரதி அனுமதி பத்திரம் (லைசன்ஸ்) 004072 இலக்கம், கொமர்ஷல் வங்கி ATM காட் என்பன அடங்கிய பிறவுன் நிற பேர்ஸ் தம்பகிட்டியிலிருந்து சாளம்பை ஊடாக வியாபாரி மூலைக்கு வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். T.P : 077 7828209
021 2263731

## மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்கும் கிடைக்காத மிக மலிவு விலையில்
Japan Sony Wega Flat T Vகள் 21"-13500/=,
25"-13500/=, பைனியர் அம்பிளிபயர் 10000/=,
ரேடியோ-CD- கசெற் - 3500/= குளிர்சாதனப் பெட்டிகள் - 19000/=
தொடர்புகளுக்கு: 077 0440570 - 077 9712956
சொனி ரேட்ற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக
56, K.K.S. வீதி, சுன்னாகம்.(13290) (45-7-9)

## கோழிப்பண்ணை விற்பனை

நவாலி வடக்கு, மானிப்பாய்
நவீன 3 பண்ணைக் கட்டடம் உட்பட அலுவலகம், செக்குறுட்டிக் கட்டடம் 5½ பரப்புடன் சகல வசதிகளுடன் நல்ல விலையில் விற்பனைக்குண்டு. தொலைபேசி:
0778350478, 0776704364

## ஐங்கரன் இசைக்குழு

சகலவிதமான மங்கல நிகழ்வுகளையும் இசையால் மகிழ்விக்க அழையுங்கள் எம்மை.

ஐங்கரன் இசைக்குழு.

தொடர்பு : S.S. சஞ்சய்
077 3158847

22, A வெள்ளாந் தெரு,
யாழப்பாணம்.

## Hatton National Bank

Hatton National Bank PLC (PQ82)

### அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, பருத்தித் துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.12.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 25.02.2012 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்.....

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(சி/9401) (45-9-6) ஹற்றன் நஷனல் வங்கி

# நீங்கா நினைவில் ஆண்டொன்று



எமக்காய்ப் ஞாலத்தில்
15 ★ 04 ★ 1922

பிரதோஷத்தன்று சிவனடியில்
01 ★ 02 ★ 2011

## அமரர் செல்லப்பா தம்பிஜயா

சிறகொன்று ஒடிந்து ஆண்டொன்றானது ஐயா!
சிரித்துப் பேசும் பொக்கை வாயும் ஈர்ப்பான கண்ணும்
நீண்ட கரமும் உயர்ந்த தோற்றமும் - இன்னும்
எம் கண்முன்னே எம்மோடு உறவாடுதையா
ஆண்டொன்று போகினும் மறந்திடுமா உன் முகம்
மீண்டும் வருவாய் எம் பரம்பரையில் எமக்காக
எதிர்பார்த்து காத்திருப்போம் உம் வரவிற்காய் நாம்

18.02.2012 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

மீளாத்துயரில்.
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மருதனார் மடம்.

நாகேந்திரம்
(வேவி)

# அழியாத சுமைகளோடு பன்னிரண்டாம் வருட நிறைவில்...

மண்ணில் மலர்ந்து
19 ★ 12 ★ 1944



விண்ணில் கலந்து
01 ★ 03 ★ 2000

## அமரர் முருகேசு நடராஜலிங்கம்

(ஓய்வு பெற்ற இ.மி.ச.உத்தியோகத்தரும், இந்திர 'தீபம்' உரிமையாளரும்))

திதி: 18.02.2012 (அபரபக்க ஏகாதசி)

பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்தபோதும்
உறங்கவில்லை உங்கள் நினைவு
விதி வரைந்த பாதையில் எம்மைவிட்டுச் சென்றாலும்
எம்மோடு வாழ்ந்த நாள்களை நினைக்கும்போது
மனம் வேதனையடைகின்றது!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் பப்பா!
அழியாத நினைவுகளாய் என்றும்
எம் நெஞ்சத்தில் வாழ்ந்திடுவீர்கள்.... என்றும் உங்கள் நினைவுடன்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் சந்தி, தும்பளை,
பருத்தித்துறை.
அன்புப் பேரன் தி.பிருந்தயன்.


(14570) (2-7-9)

# தீர்வு கிடைத்தால் கூட்டமைப்பு அரசியல் நடத்த முடியாதாம்

## டக்ளஸின் காலங்கடந்த கண்டுபிடிப்பு இது



கூட்டமைப்பை அரசு எவ்வாறு ஏமாற்றுகிறது என்பதை மக்கள் நன்குணர்வர். எமது கட்சி முன்வைக்கும் எந்த ஒரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள் ளாத வகையில் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகிறது இன்றைய அரசு .



எருவில்,பெப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்காமைக்கு காரணம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைத்துவிடும்; கிடைத்தால் கூட்டமைப்பினரால் அரசியல் நடத்த முடியாது போய்விடும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதிய ஒரு கண்டுபிடிப்பைக் கூறி வருகிறார் என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பண்டாரியாவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசுடன் ஒட்டிக் கொண்டு அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகள் விமர்சிக்கின்றார்கள். அண்மையில் மட்டக்களப்புக்கு கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக 30வருடங்களுக்குப்பின்பு வருகைதந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விமர்சித்துப் பேசியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் பேசி எடுக்கும் தீர்மானத்தை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தெரியப்படுத்துவது என்று முடிவெடுத்தோம். ஆனால் அரசு ஒரு நாளைக்கு ஒரு கதையிணைக்கூறிக்கொண்டு காலத்தை இழுத்தடித்து வருகிறது. இந்த விடயம் இது வரைக்கும் அமைச்சருக்கு தெரியாமல் இருப்பது கவலையளிக்கின்றது.

கடந்த காலங்களில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று பேசிய டக்ளஸினால் அதனை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லைண்டதுதான் உண்மை. இதைவிடுத்து வெறும் பசப்பு வார்த்தைகளினால் கூட்டமைப்பினரை விமர்சிப்பதற்கு இவ்வாறான அமைச்சர்களுக்கு அருகதை ஏதும் இல்லை.

அரசானது எந்தளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏமாற்றுகின்றது என்பதை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தவர்கள். எமது கட்சி முன்வைக்கும் எந்த ஒரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளாத வகையில் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகிறது இன்றைய அரசு . எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமே எமது நிரந்தரத் தீர்வைப் பெறமுடியும்- என்றார். (ஒ-ச-31)

# 5 லட்சம் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம்

கொழும்பு,பெப்.18

மின்சாரம் இல்லாத அனைத்து வீடுகளுக்கும் மாதமொன்றுக்கு 200 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்கமைய நாட்டின் தோட்டப்புறங்கள் உள்ளிட்ட சுமார் ஐந்து லட்சம் குடும்பங்களுக்கு தற்போது இந்த நிவாரண உரிமை கிடைத்துள்ளது என்று சமுர்த்தி ஆணையாளர் திணைக்களப் பணிப்பாளர் சந்திரா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

25 மாவட்டங்களில் 330 பிரதேச செயலகப் பிரிவுகளை முன்னிறுத்தி மண்ணெண்ணெய் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் இந்த வேலைத் திட்டம் நாளை முதல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படும்.

மண்ணெண்ணெய் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்காக அரசுக்கு மாதாந்தம் 80 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி செலவாவதுடன் இது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட பின்னர் மாதத்துக்கு செலவிடப்படும் 6 லீற்றர் மண்ணெண்ணெய்க்கு மேலதிகமாக செலவிடப்படும் நிதிக்கு சமமான நிவாரணமாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நாட்டின் மின்சாரமற்ற அனைத்து வீடுகளுக்கும் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த மண்ணெண்ணெய் நிவாரணம்அனைத்துப் பிரதேச செயலக அலுவலகங்கள் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு சமுர்த்தி ஆணையாளர் நாயக அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

சமுர்த்தி பயனாளிகளுக்கு மட்டுமின்றி மின்சார வசதி இல்லாத அனைத்துக் குடும்பங்களும் கிராம சேவகரின் சான்றிதழுடன் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரியூடாக இந்த நிவாரண அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அட்டையை பிரதேச பலநோக்கு கூட்டுறவு நிலையம் அல்லது பிரதேச செயலாளரினால் அனுமதி அளிக்கப்படும் விற்பனைப் பிரதிநிதிகளின் விற்பனை நிலையங்களில் காண்பித்துக குறித்த நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (ச-60)

# தீர்வு கிடைக்கும்வரை தொழிலுக்குச் செல்வதில்லை

கொழும்பு,பெப்.18

அரசு எரிபொருள் விலையேற்றத்துக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வரை கடற்றொழிலுக்கு செல்வதில்லை என்று நீர்கொழும்பு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசி ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்துக்கு சிலாபம் கடற்றொழிலாளர் கூட்டமைப்பு ஆதரவை வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# உலக சந்தையில் விலை குறைந்தால் எரிபொருள் விலையைக் குறைப்போம்

## அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்

கொழும்பு,பெப்.18

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தால் மட்டுமே, இலங்கையிலும் எரிபொருள் விலையைக் குறைப்போம் என்று அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். ஏற்கனவே, உலக சந்தையில் எரி பொருளின் விலை குறைவடைந்த பல சந்தர்ப்பங்களில் அவற்றின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதாலேயே இலங்கையிலும் எரிபொருள் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வதும் குறைவடைவதும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது இடம்பெறுகின்றன. அதற்கு அமைய நாமும் எரிபொருளின் விலையை கூட்டியும் குறைத்தும் வருகின்றோம்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்த வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாமும் அதன் விலையை குறைத்து அதன் நன்மைகளை ஏற்கனவே மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



எரிபொருள் விலை, மின் கட்டணம் மற்றும் பஸ் கட்டணம் என்பவற்றை உடன் குறைக்குமாறு அரசை வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணி நேற்று வெள்ளிக்கிழமை புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஜே.வி.பியினர் துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர். இந்த நிகழ்வில் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பிரதான செயலாளர் ரில்வின் சில்வா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# எரிபொருள் விலையேற்றம் அரசுக்கு கவலையாம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.18

அரசு விருப்பத்துடன் பொருள்கள், சேவைகளுக்காக விலைகளை உயர்த்தவில்லை என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படும் பிரச்சினைகளினால் இவ்வாறான தீர்மானங்களை எடுக்க நேரிட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் எந்த விடயத்தையும் விமர்சனம் செய்கின்றன. பொறுப்பு வாய்ந்த அரசு என்ற ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இதேவேளை, எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டமை அரசுக்கு மகிழ்ச்சியில்லை என்று அவர் தெரிவித்தார். (ச)

# குழந்தை பரிதாபச் சாவு

கொழும்பு,பெப்.18

மொனராகலை - ரதலியெத்த - இங்கினியாகொட பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற ட்ராக்டர் ஒன்றில் குழந்தை மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் இரண்டு வயதுக் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் டிராக்டர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிபில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# ராஜீவ்காந்தி படுகொலை; அமெரிக்காவுக்கும் தொடர்பு

## அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.18

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்துடன் அமெரிக்காவுக்கு தொடர்பு இருப்பதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முட்டாள் தனமான தீர்மானங்களை எடுத்திருக்கமாட்டார்.

புலிகளின் தலைவர் ராஜீவை படுகொலை செய்வதன் மூலம் ஏற்படக் கூடிய பாதக நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தாமல் இருந்திருக்க முடியாது.

பிரபாகரனுக்குத் தெரியாமல் தமிழகத்தில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அமெரிக்க உளவுப் பிரிவு, ராஜீவை படுகொலை செய்யும் ஒப்பந்தத்தை ஒப்படைத்திருக்க வேண்டும்.

காந்தி குடும்பத்தினர் இந்தியாவை ஆட்சி செய்யும் வரையில் தெற்காசிய பிராந்திய வலயத்தில் ஆளுமை செலுத்த முடியாது என்பதனை அமெரிக்கர்கள் உணர்ந்திருந்தனர் -என்றார்.

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத்தின் சிறிபெரம்பத்தூர் பகுதியில் தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் கலந்து கொண்ட ராஜீவ்காந்தி,தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



நுணாவில் கிழக்கு அமர்தாம்பிகை வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டிகளின் போட்டியொன்றில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு தென்மராட்சி கல்வி வலய உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் சான்றிதழ்கள் வழங்கிய பின்னர் வித்தியாலய அதிபருடன் காணப்படுகிறார். (ம-9)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வட வலய பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் போட்டியில் வெற்றிபெற்ற ஏபிரகாம் இல்லத்தின் தலைவரிடம் வெற்றிக்கேடயத்தைக் கையளிக்கிறார். கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் அருகில் உள்ளார். (ம-9)







காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரி முன்னாள் அதிபர் ந.பரமசிவம் , பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலய கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன்ஸ் பாடசாலை அதிபர் வே.முருகமூர்த்தி ஆகியோர் இணைந்து மாணவனுக்கு வெற்றிக் கேடயம் வழங்குகின்றனர். மாணவர்களின் சமநிலை நடையும் ஓட்டமும் ஆரம்பமாகின்றன. (ம-250)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப்பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன். (ம-86)



சாவகச்சேரி மகளிர் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு முதன்மை விருந்தினராகக் கலந்கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனை கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வருகின்றனர். (ம-9)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் மாணவர்கள். (ம-250)





கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. அதிபர் மு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பொறியிலாளர் மு.கிருஷ்ண குமார் ஆகியோர் பான்ட் வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுகின்றனர். மாணவர்கள் இசையும் அசைவும் நிகழ்வும் இடம்பெறுகிறது. (ம-212)



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் ந.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் சாவதேச நாடுகளின் பழைய மாணவர் சங்கங்களின் இணைப்பாளர் எஸ்.ஸ்ரீகாந்தா, உடுவில் பிரதேச 513 ஆவது படைப் பிரிவின் இராணுவ உயர் அதிகாரி மற்றும் அளவெட்டிப் பிரதேச இராணுவ அதிகாரி உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவன் ஒருவருக்கு கேடயம் வழங்கப்படுகிறது. (ம-86)




மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## மாலைதீவு அருங்காட்சியகத்தில் இந்துக் கடவுள்களின் சிலைகள் சேதம்

மாலைதீவு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தர் மற்றும் இந்துக் கடவுளர்களின் சிலைகள் உடைக்கப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன. இதில் 35 சிலைகள் சின்னாபின்னமாகின.

மாலைதீவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மக்கள் புரட்சி வெடித்தது. அதையடுத்து அதிபராக இருந்த முகமது நஷீட் பதவி விலகினார். புதிய அதிபராக வாகீத் ஹசன் பதவி ஏற்றார். நஷீட் பதவி விலகுவதற்கு முன்பு ஒரு வாரமாகப் போராட்டம் நடந்தது.

அப்போது நடந்த வன்முறைச் சம்பவங்களின்போது தலைநகர் மாலேவில் உள்ள அருங்காட்சியகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனவே, அது உடனடியாக மூடப்பட்டது.

தற்போது அங்கு அமைதி திரும்பிய நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தர் மற்றும் இந்துக் கடவுளர்களின் சிலைகள் அடித்து உடைக்கப்பட்டு சேதமடைந்து காணப்பட்டன.

அங்கு 35 சிலைகள் சின்னா பின்னமாகி இருந்தன. அவை அனைத்தும் மணல், பவளம் மற்றும் சுண்ணாம்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட அரிய வகைச் சிலைகளாகும்.

இங்கு கடந்த 1962 ஆம் ஆண்டு அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. அன்று தொடக்கம் இந்தச் சிலைகள் இங்கு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுவந்தன. தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளன. அவை 6 ஆம் நூற்றாண்டுச்சிற்பங்களாகும்.

புரட்சியின்போது பழைமை மதவாதிகள் இவற்றை உடைத்து நொருக்கியதாக அருங்காட்சியக இயக்குநர் அலி வாகித் தெரிவித்தார். தெற்காசிய மாநாட்டின்போது முஸ்லிம் நாடான பாகிஸ்தான் மாலைதீவு அதிபரிடம் அரிய புத்தர் சிலை ஒன்றை பரிசளித்திருந்தது. கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பு நடந்த போராட்டத்தின் போது அந்தச் சிலையை ஒரு கும்பல் அடித்து நொருக்கியது. (வ)

## முன்னேற்றம் கண்டுள்ளன இலங்கைப் பல்கலைக்கழகங்கள்

### உயர்கல்வி அமைச்சு தெரிவிப்பு

2012இலங்கையில் உள்ள அநேகமான பல்கலைக்கழகங்கள் சர்வதேச தரப்படுத்தலில் முன்னேற்றம் கண்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு, பேராதனை, ஸ்ரீஜயவர்த்தனபுர மற்றும் களனி ஆகிய பல்கலைக்கழகங்கள் சர்வதேச தரப்படுத்தலுக்கமைய முக்கிய இடங்களை கைப்பற்றியுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறியுள்ளார்.

இலங்கையின் பல்கலைக் கழகங்களைச் சர்வதேச மட்டத்துக்கு உயர்த்தும் வகையில் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளே இந்த முன்னேற்றத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரசு கடந்த வருடத்தில் மாத்திரம் 600 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரப்படுத்தலின் பிரகாரம் தெற்காசியாவின் அதி சிறந்த 100 பல்கலைக்கழகங்களுக்குள் இலங்கையின் நான்கு பல்கலைக் கழகங்கள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

## காசநோய் தினத்தை முன்னிட்டு கட்டுரை, ஓவியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்18

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு ''எமது எதிர்கால சந்ததிக்கு காசநோயை அளிக்க விடமாட்டோம்'' எனும் தொனிப் பொருளிலான கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் மூன்று பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. 14 வயதுக்கு உட்பட்டவர்கள் முதலாம் பிரிவினராகவும் 15-19 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 2ஆம் பிரிவினராகவும் 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் 3 ஆம் பிரிவினராகவும் கொள்ளப்படுகின்றனர்.

கட்டுரைப் போட்டியில் பங்குபற்றும்போட்டியாளர்கள் 1200- 1500 சொற்களை உள்ளடக்கியதாக தமது ஆக்கங்களை அமைக்க வேண்டும்.

ஓவியப்போட்டியில் பங்கு பற்றும் போட்டியாளர்கள் தமது ஓவியங்களை 17" x 23" அள்வினை உடையதாக கீறி அனுப்பவேண்டும்.

இந்தப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் 19 வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்தால் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடனும் 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடனும் போட்டியாளரின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை இணைத்து பொறுப்பதிகாரி, மார்பு நோய் சிகிச்சைநிலையம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த போட்டியாளர்கள் தங்கள் தங்கள் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ந)

## சிவராத்திரிக்கு மறுநாள் வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விரதமிருக்கும் வர்த்தக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் நன்மை கருதி மகாசிவராத்திரி தினத்துக்கு மறுநாள் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படும் என்று யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

## திட்டமிடல் சேவைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.18

இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முதலாம் அல்லது இரண்டாம் தரச்சித்தியைப் பெற்றிருக்கவேண்டும். அல்லது பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் ஒரு வருட கால பாடநெறியைக் கொண்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்வேண்டும்.

பரீட்சார்த்தி 22 - 28 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும். மேலதிக விவரங்களை 17.2.2012 ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (ஒ)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கார்த்திகேசு சிவராசசிங்கம்
மண்ணில்
27★02★1950
விண்ணில்
19★01★2012

கடந்த 19.01.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் கார்த்திகேசு சிவராசசிங்கம் அவர்களது வீட்டுக் கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.02.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (14657) (2-7-9) குடும்பத்தினர்.

13 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
சின்னக்குட்டி வேலுப்பிள்ளை
திதி:அபர பக்க ஏகாதசி
(18.02.2012) சனிக்கிழமை
தோற்றம்
01.08.1938
மறைவு
13.03.1999

பாசம் மறவாத ஆண்டு பதின்மூன்றாச்சு
பாரினிலே இத் துன்பம் போல் வேறொன்றில்லை
பாரினிலே உங்களை நாம் மறப்பதென்பதில்லையே
பக்தியுடன் வணங்கிடுவோம் குருநாதனடி சேர்க.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"சிவகிரி",
மீசாலை வடக்கு, கொடிகாமம்.
பாசமுடன்
குடும்பத்தினர்.
(14576)(2-7)

இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர்
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்

ஆங்கில வகுப்பு

ஒய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் பின்வரும் வகுப்புகள் நடத்தப்படும்-
*. பாடசாலை மாணவருக்குரிய ஆங்கிலம்
*. பல்கலை மாணவருக்குரிய ஆங்கிலம்
*.Spoken English for Students and Adults. வீட்டுக்கும் வரமுடியும்.
தொடர்பு: 021 2227801

காணியும் வீடும் விற்பனைக்கு

நெல்லியடி, மகாத்மா வீதியில் 6 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
075 6407873
(14405)

காணி உடன் விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள பழனியாண்டவர் கோயிலுக்கும், வன்னியசிங்கம் வீதிக்கும் இடையில் 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 021 2219048

வாடகைக்கு

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி சந்திக்கு அண்மையில் 1000 சதுர அடி விஸ்தாரமான இரண்டாம் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
தொடர்பு 0774002780

துர்க்கா திருமண சேவை

80ஆம் ஆண்டு [illegible] அரபு நாட்டில் தொழில் புரிந்து வந்துள்ள மணமகளுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை 16, 4ஆம் லேன் அரசடி. 0213211814, 0778185978.
thurka32@gmail.com.

முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்



S. லெனின்-சுகந்தா தம்பதியரின் ஏக புதல்வன்
கரிஸ்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (18-02-2012) சனிக்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, லண்டனில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காவும், சுவிஸ் சில் வசிக்கும் மாமா, அத்தை, மச்சான், மச்சாள் ஆகியோரும் தனுசா, அத்தை, விஜேஜன் சித்தப்பா ஆகியோரும், இலங்கையில் வசிக்கும் தாத்தா குடும்பத்தினரும், மதன், சுதன் மாமா குடும்பத்தினரும், கனடாவில் வசிக்கும் சித்தப்பா குடும்பத்தினரும், எல்லோரும் பல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் கண்ணகை அம்மன் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (14538) (7,10)
வாழ்த்துவோர்:
லீலாவதி (அப்பம்மா).

விற்பனைக்கு
ALLIANCE CEMENT PRODUCTS CENTRE

மின்சார இயந்திரத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட சகல அளவுகளிலும் கொங்கிறீற் கற்கள், வேலித்தூண்கள் மற்றும் ஓட்டைக் கற்கள்விற்பனைக்குண்டு. கட்டடஒப்பந்தகாரர்களுக்கு விசேட விலைக்கழிவுண்டு. நிலப்பதிப்பு கற்கள் விற்பனைக்கு உண்டு.

(SLS தரச்சான்றிதழ்கள் பெற்ற உற்பத்திகள்)
கடந்த 7 வருடங்களில் 500.000 மேற்பட்ட உற்பத்திகளை விற்பனை செய்துள்ளோம்.

Factory Address.

பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
தொ.பேசி :
077 3296407

4ம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
இருபாலை.
தொ.பேசி :
077 3296408

Jaffna Office : 021 2228193
Colombo Office : 011 5764335

### சூளைமேடு சூட்டுச் சம்பவம்;

# டக்ளஸ் மீதான வழக்கு பெப்.21 இல் தீர்ப்பு

இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான வழக்கு விசாரணைக்காக, அவரை இந்தியாவுக்குக் கொண்டு வர உத்தரவிடக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் முடிந்துள்ளதால், வரும் 21 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படவுள்ளது

சென்னை சூளைமேட்டில், 1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் திருநாவுக்கரசு என்பவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

அப்போது சென்னையில் தங்கியிருந்த, ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவாணந்தா உள்ளிட்ட 10 பேர் மீது, சூளைமேடு பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு, சென்னை கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வழக்கில் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றத்தில் முன்னிலையாகாத, டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில், டக்ளஸ் தேவாணந்தா, இலங்கைக்குச் சென்று, அமைச்சராக உள்ளார்.

இந்தநிலையில் அவர் மீதான பிடியாணையை நடைமுறைப்படுத்தக் கோரியும், இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவை இந்தியாவுக்குக் கொண்டு வரவும், வழக்கை சந்திக்கவும் உத்தரவிடக் கோரி,சென்னை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி புகழேந்தி மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை, நீதிபதிகள் மோகன்ராம், அக்பர் அலி அடங்கிய அமர்வு விசாரித்தது.

மனு மீதான சட்டவாளர்களின் வாதம், நேற்று முடிவடைந்தது. இதையடுத்து, வரும் 21திகதி உத்தரவு பிறப்பிப்பதாக, உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (வ)

# சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி ஜேர்மனியில் போராட்டம்

ஜேர்மன் வெளிநாட்டமைச்சுக்கு முன்னால் இலங்கையில் சர்வதேச சுயாதீன விசாரணை வலியுறுத்தும் மக்கள் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை பரிந்துரைத்தவாறு இலங்கையில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்றை வலியுறுத்தும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைச் சபையில் கொண்டு வருவதற்கு ஜேர்மனிய அரசை வலியுறுத்தும் வகை யிலேயே இந்த மக்கள் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஜேர்மனிய வெளிநாட்டமைச்சுக்கு அலுவலகத்துக்கு முன்பாக பிற்பகல் 2மணி தொடக்கம் 5 மணி வரை மக்கள் போராட்டம் இடம் பெறும்.

இந்த அமைதிவழி மக்கள் போராட்டத்தில் ஜேர்மன் வாழ் தமிழ் மக்களையும் தமிழர் அமைப்புக்களையும் பங்கெடுத்து ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு வலுவூட்டுமாறு நாடுகடந்த தமிழீழ அரசின் ஜேர்மன் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(வ)

## வயோதிப மாது சடலமாக மீட்பு

வடமராட்சி, பெப்.18

தும்பளையில் தனிமையில் வாழ்ந்த வயோதிப மாதுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தும்பளையைச் சேர்ந்த லிங்கசாமி செல்லக்கண்டு (78வயது) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவரா வார். சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் ஒப் படைக்கப் பட்டுள்ளது. கணவனை இழந்த இந்த வயோதிப மாதுவின் பிள்ளைகள் வெளி நாடுகளில் வசித்து வருகின்றனர், அந்த வயோதிப மாதுவுக்கு அயலவர் உணவு வழங்கி வந்தனர்என்றும் நேற்று முன் தினம் அயலவர் மதிய உணவைக் கொடுக்கச் சென்றவேளை சடலமாகக்காணப்பட்டதாகவும்விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பருத்தித் துறை பொலிஸாரின் உதவியுடன் மரண விசாரணை அதிகாரி திருமதி அஞ்சலா காண்சன்தயான் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (வ-8)

# மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.18

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் நவோதயா பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் க.கனகராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக கணக்காளர் ச.குகதாஸும் வலிகாம கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. நடராஜாவும், 515 பிரிகேட் பிரிகேடியர் ரந்தெனியாவும் கலந்து கொள்வர்.

(வ-16)

* * *

யாழ்ப்பாணம், பெப்.18

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில், பாடசாலை அதிபர் சு. திருக் கேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. மணிமாறனும் சிறப்பு விருந்தினர்களாக எஸ். சந்திரசேகரம் முகாமையாளர் இந்தியன் வங்கி யாழ்ப்பாண கிளை, வட்டு துணைவி அ.மி.த.க. பாடசாலை ஓய்வுநிலை அதிபர் வி.யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(வ-16)

* * *

வலி.வடக்கு,பெப்.18

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் அ.அகில தாஸ் தலைமையில்கல்லூரிமைதானத் தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தின ராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரனும் கௌரவ விருந்தினர்களாக அண்ணா தொழிலக உரிமையாளர் என்.பி. நடராசாவும் பழைய மாணவனும், யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்கள நிர்வாக அலுவலருமான பி.சந்திரநாதனும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

(வ-86)

* * *

கொழும்புத்துறை,பெப்.18

கொழும்புத்துறை இந்துமா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எம்.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்றினும் சிறப்புவிருந்தினராக முன்னாள் அதிபர் எஸ்.தியாகலிங்கம், யாழ்.வலய பௌதிக கல்விவள ஆலோசகர் என். சிறிமுருகதாஸ்காந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(வ-135)

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21-02-1936 மறைவு: 18-02-2010

அமரர்

**திருமதி லலிதா அரியநாயகம்**

(இளைப்பாறிய ஆசிரியை)


அன்பு, பண்பு, தியாகம், அர்ப்பணிப்பு என்னும் உயர் இலட்சியங்களுடன் வாழ்ந்து எங்கள் இதயத்தில் என்றும் வீற்றிருக்கும் எமது பாசமிகு அன்பான அமரர் திருமதி லலிதா அரியநாயகம் அவர்களது நினைவாக இன்று (18.02. 2012) சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கரவெட்டி புனித தேவமாதா ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**''பஸ்ரியன் வில்லா''**
**கரவெட்டி வடக்கு,**
**கரவெட்டி.**

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**உறவினர்.**

(C\9404) (7,10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தங்கராசா சிறிகரன்**

(தகவல் தொழில்நுட்ப பூங்கா உத்தியோகத்தர்)

மண்ணில் 17★03★1969

விண்ணில் 01★03★2011

*அன்பு எனும் சொல் அதனை*
*பாசம் எனும் வலை வீசி*
*உறவு எனும் ஒடம் அதில்*
*உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்*
*நீங்கள் போன வழி தெரியவில்லை*
*தேசம் விட்டு விண்ணுலக வாசம் சென்றீரோ*
*பொங்கி வரும் கண்ணீருக்கு அளவில்லையே*
*தேம்புகின்றோம் உமை நினைத்து*

குலனைபூர்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

**ச.பேரின்பநாதன் குடும்பத்தினர்.**
*(அத்தான், அக்கா, மருமக்கள்)*

(14597)(2-7-9)


# அச்சகத்தினர்கள்

சிறி லங்கா அச்சகத்தினர்கள் சங்கத்தில் பதிவுசெய்தல்

ஸ்ரீ லங்கா அச்சகத் தொழில்துறையில் ஸ்ரீ லங்கா அச்சகத்தினர் சங்கம் ஒரு பிரதானமான நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன் இச் சங்கம் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பலவிதமான வழிகளில் நாங்கள் வசதிவாய்ப்புக்களை வழங்கி வரும் அதே வேளையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அச்சகத் தொழில்துறை குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கும் பொருட்டு அச்சு, பொதிசெய்தல் தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தொடர்ந்து உதவுவதே எமது குறிக்கோளாகும்.

எங்களது பதிவுகளை புதுப்பிக்கும் பொருட்டும் சிறி லங்காவின் அச்சகத் தொழில்துறை சம்பந்தமாக சரியான தகவல்களை திரட்டி வைத்திருக்கும் பொருட்டும் உங்களை எங்களுடன் பதிவுசெய்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப் பதிவுசெய்தல் மூலம் சங்கத்தின் தொழிற்பாடு சம்பந்தமான பொதுவான தகவல்களையும் இத் தொழில்துறைபற்றிய தகவல்களையும் கிரமமான முறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இச் சங்கத்தில் பதிவுசெய்யப்படும் கம்பனி அங்கத்தவர்கள் கீழே காணப்படும் பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

- இத் தொழில்துறையின் கிரமமான முறையில் புதுப்பிக்கப்படும் தரவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்
- சங்கத்தின் எல்லா விதமான வெளியீடுகளையும் சந்தாப்பணமின்றி பெற்றுக்கொள்ளலாம்
- எல்லா சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் பற்றிய தகவல்களை பெறமுடியும்
- வெளிநாட்டிற்கு சங்கத்தினூடாக குழுப்பயணம் சலுகைக் கட்டணத்தில் பயணிக்க இணைந்துகொள்ளலாம்
- சங்கத்தால் வழங்கப்படும் பயிற்சி திட்டங்கள் சலுகை அடிப்படையில் பங்குபற்றலாம்
- அச்சகப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்
- சங்கத்தின் எல்லா சமூக செயற்பாடுகளிலும் பங்குபற்றலாம்
- எல்லாவிதமான சுங்க, இறக்குமதி வரி சம்பந்தமான விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படுத்தும் உரிமை

அங்கத்துவம்பற்றி மேலதிக தகவல்கள் தேவைப்படின் தயவுசெய்து எங்களது செயலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் தொலைபேசி : 0112 472315
0112 386716

* பூர்த்தி செய்த கூப்பனை கீழே தரப்பட்ட விலாசத்திற்கு அனுப்பவும்

பதிவு விபரங்கள்

கம்பனியின் பெயர்: ....................
உரிமையாளரின் பெயர் : ....................
விலாசம் : ....................
மின் அஞ்சல் : ....................
தொலைபேசி : ....................
கைத்தொலைபேசி: ....................

கம்பனி விபரங்கள்
(தயவுசெய்து X இடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| லெற்றர் பிரஸ் | ஓப் செற் | டிஜிரெல் அச்சு | ஸ்கிறீன் | ரைப்செற்றிங் | பிரீ பிறஸ் |

லொத்தர் சீட்டிழுப்பு

Collate 2012
அச்சகக் கண்காட்சி
24-26 பெப்ரவரி 2012
சிறி லங்கா கண்காட்சி, மாநாடு நிலையம்

தயவுசெய்து நிரப்பிய கூப்பனை கொலற் 2012 கண்காட்சிக்கு எடுத்துவாருங்கள். தரப்பட்ட தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கத்தின் மூலம் அதிர்ஷ்டசாலிகள் அறிவிக்கப்படுவர்

பெயர் : ....................
கம்பனியின் பெயர் : ....................
விலாசம்: ....................
தொடர்பு கொள்ளவேண்டிய இல: : ....................
தே.அ.அ. இல : ....................



ஏற்பாட்டாளர்கள்

SLAP

இலங்கை அச்சகத்தினர் சங்கம்
இல: 290, டி.ஆர் விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 0094 11 2 472315 / 2 386716
தொலை நகல்: 0094 112 386716
மின் அஞ்சல்: slap@srilankaprint.com
இணையத் தளம்: www.srilankaprint.com

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சில விடயங்கள் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது நடக்காமல் போகலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சுபகாரிய நிகழ்ச்சியில் பங்கேற்கலாம். நீண்ட நாள்களாக பிற்போட்டுவைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

**இடபம்:** மற்றவர்களின் விமர்சனம், கேலிப் பேச்சுக்களுக்கு ஆளாகலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நீங்கள் சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் மற்றவர்களிடம் சண்டை போடலாம். வெறுப்பு உண்டாகும்.

**மிதுனம்:** நண்பர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவி கிடைக்கலாம். மனைவி அல்லது கணவரின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நீண்ட நாள் பார்க்காத உறவினர்கள் சிலரை திடீரெனப் பார்க்கும் வாய்ப்பு கிட்டும்.

**கடகம்:** மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில விடயங்களில் புத்திசாலித்தனமாகச் செயற்படுவதன் மூலம் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிக்கும் வாய்ப்புக் கிட்டும்.

**சிங்கம்:** மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்க நேரிடலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உடல் ரீதியாக சில உபாதைகள் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், சில வேலைகளைச் செய்ய நேரிடலாம். கனவுத் தொல்லையுண்டு.

**கன்னி:** வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி உண்டாகும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, சில காரியங்களில் இறங்கிவிட்டு, அவதிப்படுவீர்கள். கடன் மிகுதி ஒன்றை கண்டிப்புடன் வசூலிப்பீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, உடனுக்குடன் வாகனங்கள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**துலாம்:** எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிடைக்கலாம். இரண்டு மூன்று நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று கைக்கு வரலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையில், எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுவீர்கள். உறவினர் ஒருவர் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். பெண்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடக்கவும்.

**விருச்சிகம்:** பணம் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம். வீட்டுக்குத் தேவையான உணவுப்பொருள்கள் வாங்க கணிசமாகச் செலவிடலாம்.

**தனுசு:** நடக்குமோ, நடக்காதோ என்று நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். சில விடயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயற்பட முற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். தாய் வழி உறவுகள் மூலம் சில நன்மைகளை அடையலாம். வழக்கு விவகாரங்களில் நல்ல திருப்பங்களைக் காணலாம். ஆதாயகரமான நாள்.

**மகரம்:** தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம் அல்லது யோசனை சொல்லலாம். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த முக்கிய செய்தி வந்து சேரும். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். மறதியால் அவதியுண்டு.

**கும்பம்:** நண்பர்கள் சிலர் உங்களைப் பாராட்டிப் பேசலாம். பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரிய அளவில் உதவி கிடைக்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

**மீனம்:** காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். கனிவான பேச்சுக்களால் சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். பெண்கள் சிலர் மூலம் முக்கியமான உதவி கிடைக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.

**நாளை**

மாசி 7 ஞாயிற்றுக்கிழமை 19.02.2012
திதி: திரயோதசி பி.இ. 04.43 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ. 11.56 வரை
சுபநேரம்: 09.32 - 11.02 வரை,
ராகு காலம்: 05.02 - 06.32வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 1 | 7 | | 5 | | | 2 |
| | 9 | 3 | | 1 | | 6 | 7 | |
| | | 5 | 3 | | | | 4 | |
| | | 8 | 6 | | | 2 | | |
| | 2 | 7 | | | | 3 | 6 | |
| | | 6 | | | 9 | 7 | | |
| | 6 | | | | 4 | 5 | | |
| | 5 | 2 | | 8 | | 4 | 1 | |
| 7 | | | 2 | | 3 | 8 | | 6 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 1 | 4 | 9 | 5 | 2 | 8 |
| 8 | 4 | 1 | 5 | 3 | 2 | 6 | 9 | 7 |
| 9 | 2 | 5 | 8 | 6 | 7 | 3 | 4 | 1 |
| 3 | 8 | 2 | 6 | 7 | 1 | 4 | 5 | 9 |
| 1 | 7 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 9 |
| 6 | 5 | 4 | 2 | 9 | 8 | 7 | 1 | 3 |
| 2 | 1 | 3 | 7 | 8 | 4 | 9 | 6 | 5 |
| 5 | 9 | 8 | 3 | 2 | 6 | 1 | 7 | 4 |
| 4 | 6 | 7 | 9 | 1 | 5 | 8 | 3 | 2 |


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் முன்னால் AUTOS கட்டடத்துக்கு பின்புறமாக கந்தப்பசேகர ஒழுங்கையில் 1 பரப்பும் 9 குளியும் (வயல் அளவை) கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 6805364, மார்ச் 10 ஆம் திகதிக்கு பின், 011 9054717773

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள்,புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.

யாழ். அக்கூரியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

## காணி உடன் விற்பனைக்கு

தென்மராட்சி, வெள்ளாம் போக்கட்டி, கொற்புலவு மயானத்துக்குச் சமீபமாக அல்லாரை வீதியில் நல்ல நிலையில் உள்ள தோட்டக்காணி 9 பரப்பு முழுமையாக உடன் விற்பனைக்குண்டு. தொழில் பேட்டைக்கும் ஏற்றது.

தொடர்பு : 0779907122

## காணி விற்பனைக்கு

மருதங்கேணி வைத்தியசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம் என்பவற்றை இணைக்கும் பிரதான வீதியில் பயன்தரும் தென்னை மரங்களுடன் கூடிய குடியிருக்கும் நிலம் 30 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0775949786.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1974 அனுஷம், 7 இல் செவ்வாய் (குற்றமற்றது) B.com,MED பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை.

தொடர்பு: 077 1250332

E.mail - Pcmallevt @ gmail. com

## விற்பனைக்குண்டு

HS xxxx, JI xxxx தொடர் இலக்கமுடைய இரண்டு ஐஸ்கிறீம் வான்களும், ஐஸ்கிறீம் வாத், டீபிறிஸர் என்பனவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 6090926

## காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பின்புறமாக கம்பஸ் லேனில் 1 ½ பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0774869128 (14484)(6,10)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944 | நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944 | சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085 |

(13302) (45-7-9)

## தேவை

கலர் லாப் ஒன்றிக்கு பின் வரும் வேலைகளுக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

01. கிரபிக் டிசைனிங் - GRAPHIC DESIGNING
02. பிரேமிங் - FRAMING
03. அல்பம் பைண்டிங் - ALBUM BINDING

முன் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் சுயவிவரக் கோவையுடன் தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதியையும் இணைத்து 25.02.2012இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**விஸ்ட்டா விஷன் கலர் லாப்**

52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தி.சி.சண்முகலிங்கம்**

(இணுவில் கிழக்கு)
திதி:அபரபக்க ஏகாதசி

தோற்றம்
20★ 10 ★ 1937

மறைவு
13 ★ 02 ★ 1988

இணையிலாப் புகழ் மலி இணுவையம் பதியினிலே!
துணையென யாவர்க்கும் தொண்டுகள் இயற்றி
ஒப்பிலா திறத்தால் உயர்பெருமையுடன் - நன்றே
இப்புவி போற்ற வாழ்ந்த ஏந்தலே - எம் எந்தையே!

கொடிய விதி கடிதில் உமைப் பிரிந்ததுவோ
கடிய முயற்சியாற் தம் கனவை நியமாக்கயாம்
விந்தை அறிவு நிரம்பி வியனுறு பதவியுற்று
உய்ந்த போதும் தாங்கள் இல்லையே தவிக்கிறோம்

பண் இழந்த பாடலாய் ஆனோமையா
கண் இழந்த நீர்த்துளி கடலென ஆனதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனைப் பிராத்திக்கின்றோம்.

'சுகந்தம்',
இணுவில் கிழக்கு, இணுவில்.

அன்பான மனைவி, பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரன், பேர்த்தி, சுற்றத்தார்.

(14533) (2-7-9)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முத்தையா மார்க்கண்டு**

தோற்றம்
20 ★ 11★ 1927

மறைவு
18 ★ 02★ 2001

ஆண்டு பதினொன்று ஆனதையா ஆயினும் உன்
நீண்ட நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
உன்னை உருக்கி நீ கொடுத்த ஒளியிலன்றோ
இன்றும் நாம் இணையில்லா வாழ்வுதனை வாழ்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

49, இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14500) (2-7-9)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 17 ★ 03 ★ 1969

விண்ணுலகில் 01 ★ 03 ★ 2011



## தங்கராசா சிறிகரன் (சிறி)

திதி: 18.02.2012

அன்புள்ள அப்பாவே நீங்கள் எங்களை விட்டு எங்கே
அப்பா போனீர்கள் நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து ஒரு வருடம் ஆனதுவோ உங்களை நாம் நினைக்காத
நாளில்லை அப்பா காலனவன் படுத்த படுக்கையிலே
உங்கள் உயிரைப் பறித்தானோ
மற்றையவர்களை ஆளாக்கிவிட்டீர்கள்
நாங்கள் ஆளாகும் நேரத்தில் எங்கே சென்றீர்கள் அப்பா

59, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சிறிகரன் பவித்திரன்
(மகன்).

(14756) (2-7-9)

# எரிபொருள் விலையை அடுத்து தேநீரும் விலை உயர்வு

யாழ்ப்பாணம்.பெப்.18

எரிபொருள் விலை அதிகரிப்பு, சீனியின் விலையேற்றம் போன்ற காரணங்களால் தேநீரின் விலையும் அதிகரித்துள்ளது.

குடாநாட்டில் சில தேநீர் கடைகளில் நேற்று தேநீரின் விலை திடீரென 5 ரூபாவால் அதிகரித்துள்ளது.

மண்ணெண்ணெயின் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. சீனியின் விலை 5 ரூபாவால் எகிறியது. இந்த நிலையில் அனேகமான தேநீர் கடைகளில் மண்ணெண்ணெய் அடுப்பு மூலம் தேநீர் தயாரிப்பு மேற்கொள்வதால் தேநீரின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருப்பதாக தேநீர்க் கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து தற்போது சில உணவகங்களில் தேநீர் ஒன்று 15 ரூபாவும், பால் தேநீர் 25 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(ந-17)


## நாய்க்குட்டி விற்பனைக்கு

3 மாத அல்சேசன், ஜேர்மன் செப்பேட் ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு. சகல ஊசியும் போடப்பட்டது.

தொடர்புகளுக்கு : 075 0489784


# உழவு இயந்திரத்துக்குள் தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி, பெப்.18

நெல் வயலில் சூடு மிதித்த உழவு இயந்திரத்திலிருந்து வீழ்ந்த சாரதி அதன் சில்லுக்குள் அகப்பட்டு காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நாகமணி மகேந்திரன் (வயது 32) என்பவர் வயிற்றுக்கு மேலாக உழவு இயந்திரச் சில்லு ஏறிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

இதேவேளை நேற்றுக் காலை சாவகச்சேரி ஏ-9 வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவருக்கு கை மூட்டுடன் கழன்றது.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த விஜயரத்தினம் விஜயநேசன் (வயது 22) என்பவர் கை கழன்ற நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(ம-9)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
செல்வி விஷாந்தினி அல்பேட்
அவர்களின் அன்புத் தந்தை

## மரியான் சொலமன் அல்பேட்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/9000) (2-7-9) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய்.


## தவறிவிட்டது

80, கனகரட்ணம் வீதி, அரியாலை என்னும் முகவரியினை சேர்ந்த மகாதேவன் குகதேவா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (882932710V) சாரதி அனுமதிப் பத்திரம், அலுவலக அடையாள அட்டை மற்றும் வரிப்பத்திரம் என்பன (15.02.2012) புதன்கிழமை கனகரட்ணம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0773679744 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனைக்கு

மிக அழகியதும், சில ஆயிரம் கி. மீற்றர் பாவனையில் உள்ளதுமான JIALING - 90 (SUPER CUP) மோட்டார் சைக்கிளும், 48 CC - DAIDO மோட்டார் சைக்கிளும், இங்கிலண்ட் றலி சைக்கிளும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: 100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. 0778996281

## அறைகள் வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழக மாணவிகளுக்கு (மருத்துவபீடம் விரும்பத்தக்கது) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு : 516, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2228036

## THANU COMMUNICATION & NET CAFE

உடனடி வேலை வாய்ப்பு உண்டு.
Communication One Year
அனுபவமுள்ள பெண் அல்லது ஆண் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0778025702, 021 7451825

## தவறிவிட்டது

சின்னத்தம்பி துஷ்யேந்திரா என்பவருடைய மோட்டார் சைக்கிள் பின்பக்க இலக்கத்தகடு (WO-5019) கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகரப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0778448029.

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித்தருகிறோம் அழையுங்கள். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு : 077 9086737


# மரண அறிவித்தல்



## இராஜேஸ்வரி இராஜபட்சம்

(யாழ். இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இராஜபட்சம் கடந்த (13.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் தையல்பாகர் (நீர்ப்பாசன பொறியியலாளர்) - தில்லையாட்சி, தம்பதியரின் அன்பு மகளும், மகேஸ்வரி, திருவாதவூரர், இரட்ணராஜா, காலஞ்சென்ற சிறீபாதம் ஆகியோரின் சகோதரியும். காலஞ்சென்ற ஆறுமுகம் இராஜபட்சத்தின் (பணிப்பாளர், நெடுஞ்சாலை, நீர்ப்பாசனத் திணைக்களம், வடமாகாணம்). அன்பு மனைவியும் வாமணதேவி, சுலோக்ஷனாதேவி, ஈஸ்வரபட்சம், விஸ்வபட்சம், யாழினிதேவி, ஸ்ரீரங்கபட்சம், ராஜினிதேவி, உருத்திரபட்சம் ஆகியோரின் பாசமிகு தாயும், பாஸ்கரன் காலஞ்சென்ற கோபவன் மற்றும் நந்தினி, புஸ்பா, கதிர்காமநாதன் காலஞ்சென்ற கணேஸ்குமார் ஆகியோரின் மாமியும், பிரம்மன், சமந்தி, ஜெயந்தி, நிசாகரன், உமேஸ்கரன், விஸ்வகாந்தன், விஜிகலா, பார்த்திபன், ஹரிதாஸ், தர்ஷனா, சிந்துசா ஆகியோ ரின் பேர்த்தியும், ரிஷிகேஸ், சரூண், ஆசிலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2012) சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் 8 மணிவரை பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை முதல் இலக்கம் 19 விவேகானந்த வீதி, வெள்ளவத்தையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கொழும்பு (சி/9039) (45-9-6) தகவல்: பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் வீரசிங்கம்

(ஓய்வுபெற்ற பொது சுகாதார உத்தியோகத்தர், மலேரியா தடை இயக்கம்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல. 82 4/4 ஹம்டன் லேன், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் வீரசிங்கம் 16-02-2012 வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-அபிராமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கந்தையா-நாகமுத்து தம்பதியரின் மருமகனும், சந்திரேஸ்வரியின் அன்புக் கணவரும், துஷ்யந்தினி (கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), மாயவதீபன் (லண்டன்), பிரதீபன் (லண்டன்), துவாரகா (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குருபரராஜா (பனை அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம்), தாரணி (லண்டன்), விஜயராஜ் (டுபாய்), ஆகியோரின் மாமனும், மகிழ்ருதன் (பரியோவான் கல்லூரி), சானவி (வேம்படி, மகளிர் உயர்தர பாடசாலை), சபினா (லண்டன்), வர்சனா (லண்டன்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, அப்புத்துரை மற்றும் கந்தையா, பூலோகமணி (கனடா) ஆகியோரின் சகோதரரும், கோமளேஸ்வரி (கனடா), சுந்தரலிங்கம் (ஓய்வூதியர், தபால் திணைக்களம்), மகேந்திரலிங்கம் (கனடா), குமளேஸ்வரி, பாக்கியம், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் தவமணிதேவி, சரவணமுத்து (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் தங்கராசா, கமலேஸ்வரி, ரதிராணி (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-02-2012) சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (19-02-2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, மு.ப 10 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/9043) (2-10-9-7) தகவல்: குடும்பத்தினர்.

# சஜீவன் சதம் அடிக்க வென்றது யாழ். இந்து

யாழ்ப்பாணம், பெப்.18

சஜீவன் சதம் அடிக்க 5 விக்கெட்டுக்களால் யாழ். மத்திய கல்லூரியை வெற்றி கொண்டது யாழ்.இந்துக் கல்லூரி அணி.

19 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

தனது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 40 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கபிலன் 32 ஓட்டங்களையும் யூலியஸ் 25 ஓட்டங்களையும் சர்மிகன் 19 ஓட்டங்களையும் டார்வின் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரர்களான மதுஷன் 18 ஓவர்கள் பந்து வீசி 59 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் றொசாந் 8 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 60 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் சஜீவன் 118 ஓட்டங்களையும் மதுஷன் 60 ஓட்டங்களையும் வாமணன் 26 ஓட்டங்களையும் சஜீகன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான கோகுலன் 27 ஓவர்கள் பந்து 104 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கரிகரன் 9.5 ஓவர்கள் பந்துவீசி 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றனர்.

சர்மிகன் 51 ஓட்டங்களையும் கோகுலன் 42 ஓட்டங்களையும் செளமிதரன் 32 ஓட்டங்களையும் நிஷாந்றூபன் 26 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரர்களான சிந்துஷன் 7 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மதுஷன் 23 ஓவர்கள் பந்துவீசி 80 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் லஸ்மின் 11 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் றொசான் 8ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.



93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் 30 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனால் யாழ். இந்துக் கல்லூரி அணி 5விக்கெட்டுக்களால் யாழ்.மத்திய கல்லூரி அணியை வெற்றி கொண்டது. (ம-23)

## பூப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று மானிப்பாய் இந்துவில்

வலி வடக்கு, பெப்.18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15 வயது, 19வயது ஆண்கள், பெண்கள் அணிகளுக்கு இடையேயான அமரர் அன்ரன் லோஹர்சன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பூப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.லோகநாதனும், சிறப்பு விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரனும் கௌரவ விருந்தினராகப் பங்குத் தந்தை பூட் சுதர்சனும் கலந்துகொள்வர்.

ஆண்களுக்கான 15, 19 வயதுப் பிரிவுப் போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

பெண்களுக்கானபோட்டியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது. (த-86)



சண்டிலிப்பாய் சக்தி ஜிம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்திய பளுதூக்கல் மற்றும் வலுத்தூக்கல் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய சுன்னாகம் கோல்ட் ஜிம் வீரர்கள். (த-86)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே அமரர் டாக்டர் ஜே.பி.சி.பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 4.15 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஞானமுருகன் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதும். (த-23)

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.18

மட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)


# மரண அறிவித்தல்



## மரியான் சொலமன் அல்பேட் (எட்வேட்)

குருநகரைப் பிறப்பிடமாகவும், 82, மவுண்ட் கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் சொலமன் அல்பேட் (எட்வேட்) 15.02.2012 புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் திருமதி சீதாசிற்றின் (ராசாத்தியம்மா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மரியான் சொலமன் - எலிசபேத்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் பபிலோன் செபமாலை சின்னத்துரை- றெஜினா அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான M.S. பிரான்சிஸ் சேவியர், M.S. ஜேசுநாயகம், M.S.பேரின்பநாயகம் (முன்னாள் உதவி மேயர், யாழ். மாநகரசபை, முன்னாள் மாநகரசபை உறுப்பினர்), M.S.சிலுவைதாசன் மற்றும் M.S.ஜேம்ஸ், M.S.மரியதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செறிங்ரன் (நோர்வே), மார்ஷல் (நோர்வே), சுமித்திரா (பிரான்ஸ்), காந்திமதி(நோர்வே), விஷாந்தினி (ஆசிரியர், யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரி), கௌசலா (ஆசிரியர், யாழ். அச்சுவேலி மகளிர் கல்லூரி), ஜீவலக்ஷினி(கல்விசார் தாபனக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டிலிஷியா, அன்பரசி, கிறிஸ்ரியன் கிளௌனி, சுரேஸ், சுதாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும், கெவின், வனசா, மார்க்கூஸ், பெனி, விக்ரோறியா, ஜொகன்னா, மத்தியூ, யுவக்கீம் எவோஞ்சலி, மத்தியாஸ், பென்ஞமின், கபிரியேல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும்.

82. மவுண்ட் கார்மேல் வீதி,யாழ்ப்பாணம்.

(சி/9409) (2-9-7)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.



# சினந்தன சிங்கங்கள் சிதைந்தன கங்காருகள்

அண்மைக்காலமாக தொடர் தோல்விப்பாதையில் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை அணி, அதன் தலைமையை மாற்றிய பின்னரும் கூட, அந்த அணி வெற்றி பெற முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில் நேற்று ஆஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து பந்தாடி தொடர் தோல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தது . மழையினால் இலங்கையின் வெற்றி பறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலும் கூட, ஆஸ்திரேலிய அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றதுடன் தொடரின் முதலாவது வெற்றியையும் இலங்கை அணி பதித்தது.



நாங்களும் சொல்லியடிப்போமில்ல..

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் கொமன்வெல்த் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் ஆறாவது ஆட்டத்தில் இலங்கையும், ஆஸ்திரேலிய அணியும் சிட்னியில் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணித்தலைவர் பொன்டிங் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

**மஹேல அதிரடி முடிவு**

இலங்கை அணியில் நேற்று மூன்று சகலதுறைவீரர்களை (மத்தியூஸ், பெரேரா, மஹ்ரூப்) இணைத்துக் கொண்டு அணித்தலைவர் மஹேல களமிறங்கினார். தரங்க, சேனநாயக்கா நீக்கப்பட்டு மஹ்ரூப், திரிமன்னே ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

டேவிட் வோர்னர், மத்தியு வேட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இலங்கை அணி ஆரம்பத்திலிருந்தே ஆக்ரோஷமாக பந்து வீசியதுடன் களத்தடுப்பிலும் கலக்கியது. உலக் கிண்ணத்தில் சங்காவின் தலைமையில் காட்டிய இலங்கையின் வேகம் மீண்டும் நேற்று பளிச்சிட ஆஸ்திரேலிய வீரர்களுக்கு அடிவயிறு கலங்கியது.

வோர்னர் 13 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் சுருண்டார். தொடர்ந்து நுழைந்த பொன்டிங் அணியின் ஓட்ட வேகத்தை ஆமை வேகத்தில் நகர்த்திக் கொண்டிருந்தார்.

**பீனிக்ஸாய் எழுந்த மஹ்ரூப்**

இரண்டு வருடங்களின் பின்னர் இலங்கை அணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட மஹ்ரூப், எதிர்பார்ப்புடன் இருந்த இலங்கை ரசிகர்களுக்கு நல்ல விருந்தளித்தார். பொன்டிங்கை 2 ஓட்டங்களுடனும், போரஸ்டரை 16 ஓட்டங்களுடனும் பவிலியனுக்கு அனுப்பி வைத்தார். மஹ்ரூப் 8 பந்து பரிமாற்றங்களில் ஒரு ஓட்டமற்ற் பந்து பரிமாற்றம் அடங்கலாக 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினார்.

ஒரு புறம் இலங்கையின் வேகப் பந்துகள் ஆஸி.யின் முக்கிய தலைகளை கொய்து எடுக்க, மறுபுறம் களத்தடுப்பிலும் கலக்கிய இலங்கையின் சிங்கங்கள் ஆஸி.யின் ஆட்டத்துக்கு ஆப்பு வைத்தன. வேட் 15, மைக் ஹஸி 13, கிறிஸ்ரெய்ன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வரிசையாக இருக்கைக்கு திரும்ப ஆஸி அணி 81 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து திணறியது.

**மழை குறுக்கீடு**

ஆஸ்திரேலிய அணி 26 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்தது. இலங்கை ரசிகர்களின் முகங்களும் மழை மேகங்கள் போன்று கறுத்தன. இருப்பினும் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை. ஆட்டம் மீண்டும் ஆரம்பமானது. இரு அணிகளுக்கும் தலா 41 பந்து பரிமாற்றங்கள் வழங்கப்பட்டன.

ஹேரத்தின் சுழலில் சிக்கிய மக்கே 3, லீ ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க ஆஸி. 104 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்திருந்தது. ஆஸிக்கு ஒட்சிசனை ஏற்றிக் கொண்டிருந்த டேவிட் ஹஸி 58 பந்துகளில் தனது 9 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். ஒன்பதாவது இலக்குக்கு இணைந்த டேவிட் ஹஸி, ஸ்ராக் ஜோடி ஆஸி. அணியை தூக்கி விடும் முயற்சியில் ஈடுபட்டது. இவர்களது முயற்சி சிறிது நேரத்திற்கு வெற்றியளித்ததால் ஆஸி. அணி 150 ஓட்டங்களைத் தாண்டியது.

இறுதி நேரத்தில் டேவிட் ஹஸி 58 ஓட்டங்களுடன் பெரேராவின் வேகத்தில் சிக்கி தனது அணியைக் கைவிட்டார். தொடர்ந்து இறுதிப் பந்து பரிமாற்றத்தில் ஸ்ராக் 17 ஓட்டங்களுடன் குலசேகரவினால் ரன் அவுட்டானார்.

40.5 பந்து பரிமாற்றங்களில் ஆஸி. அணி சகல இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் இலங்கை சார்பில் மஹரூப், பெரேரா தலா 2 இலக்குகளையும் மத்தியுஸ், மலிங்க, ஹேரத் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

**சாதனை இணைப்பாட்டம்**


அதன் பின்னர் பதிலளித்து துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணிக்கு மஹேல, டில்ஷான் ஜோடி பலமான ஆரம்பத் துடுப்பாட்டத்தை வழங்கியது. இந்த ஜோடி ஆஸி. அணிக்கு தலையிடியை கொடுத்து ஓட்டங்களைக் குவித்தது.

டில்ஷான் பழையபடி அதிரடி வீரராக உருவெடுத்து வெளுத்துக் கட்டினார். ஆட்டத்தின் ஐந்தாவது பந்து பரிமாற்றத்தை, இலங்கையை வேகத்தில் மிரட்டுவேன் என்று சவால் விட்ட லீ வீசினார். முதலாவது பந்தை டில்ஷான் தட்டி விட்டு நான்கு ஓட்டங்கள் பெற்றுக் கொள்ள, டில்ஷானுடன் வார்த்தை மோதலைத் தொடக்கினார் லீ. அதற்கு டில்ஷான் வார்த்தைகளால் பதிலளிக்காமல் தனது துடுப்பால் பதிலடி கொடுத்தார். அடுத்த இரண்டு பந்துகளிலும் அடுத்தடுத்து நான்கு ஓட்டங்கள் விளாச வாயடைத்துப் போனார் லீ.

முதலாவது இலக்குக்காக 70 பந்துகளில் 74 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் டில்ஷான் 41 பந்துகளில் 45 ஓட்டங்களுடன் மக்கேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இந்த இணைப்பாட்டமே இந்தத் தொடரில் முதலாவது இலக்குக்காகப் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.







என்னத்தை அடிச்சு என்னத்தை பண்ண... சலித்துக் கொள்ளும் போறஸ்ர், டேவிட் ஹஸி

**சங்கா 10000**

தொடர்ந்து நுழைந்த சங்கக்கார நேற்றைய தினம் 11 ஓட்டங்களைப் பெற்ற போது 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இவர் தனது 315 ஆட்டத்தில் இந்தச்சாதனையைப் படைத்தார். இதுவரையில் இலங்கையின் சார்பில் ஜெயசூரியா, மஹேல இருவருமே பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தவர்களாவார்.

டில்ஷான் விட்டுச் சென்ற அதிரடியை சங்கா தொடர, மஹேல தனது 63 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

இலக்கை விரட்டிச் சென்ற இலங்கை அணியின் இரண்டாவது இலக்கு இருபத்தியிரண்டாவது பந்து பரிமாற்றத்தில் வீழ்த்தப்பட்டது. சங்கா 29 பந்துகளில் 30 ஓட்டங்களுடன் வெளியேறினார். சந்திமால் அடுத்து களமிறங்க அணி 24.1 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

மஹேல 61, சந்திமால் 6 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். லீ, மக்கே தலா ஓர் இலக்கினை சரித்தனர். ஆட்ட நாயகனாக திஸ்ஸர பெரேரா தெரிவானார். இந்த ஆட்டத்தில் இலங்கை அணி போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்றுள்ளது. (ங- 5)



நல்ல வேளை நான் தப்பிச்சன். பொண்டிங்க கப்டனா போட்டதால எல்லாப் பழியும் அவனுக்கே.... வோர்னர்

## கரைந்தது கட்டி

யுவராஜ் உடலில் இருந்த புற்று நோய்க்கட்டி அனேகமாக கரைந்து விட்டதாம். யுவராஜ் நுரையீரலுக்கு இடையில் 'கோல்ப்' பந்து அளவுக்கு சிறிய புற்றுநோய்க் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இதற்காக அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் புற்று நோய் ஆய்வு மையத்தில் 'கீமோதெரபி' சிகிச்சை பெற்று வருகிறார். இதன் பக்கவிளைவு காரணமாக தலைமுடியை இழந்து, ஆளே மாறிப் போயிருந்தார். இவருக்கு மார்ச் மாதம் வரை தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படும்.

தற்போது வேகமாக குணமடைந்து வரும் யுவராஜ், தனது 'டுவிட்டர்' இணையதளத்தில் விடுத்துள்ள செய்தியில், எனது சமீபத்திய 'ஸ்கேன்' குறித்து ஆய்வு செய்த வைத்தியர் லாரன்ஸ் நல்ல செய்தியை சொன்னார். எனது உடலில் இருந்து புற்று நோய்க் கட்டி, அனேகமாக கரைந்து விட்டதாம். இரண்டாவது கட்ட சிகிச்சை ஆரம்பமாகியுள்ளது. புற்று நோய்ப் பாதிப்பில் இருந்து மீண்ட அமெரிக்க சைக்கிள் பந்தய வீரர் லான்ஸ் ஆம்ஸ்டிராங், அனைத்து உதவிகளும் அளிக்க தயார் என்று தகவல் அனுப்பியிருந்தார். அவருக்கு எனது நன்றி, என்று தெரிவித்துள்ளார். (5)

# வலைபந்தில் யாழ்.அணியை வென்றது விமானப் படை

வலி.வடக்கு,பெப்.18

தேசத்தின் மகுடம் கண்காட்சி வெற்றிக்கிண்ணத்துக்காக மாவட்டங்களிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி தனது திறமையை வெளிக்காட்டிய போதிலும் வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டது.

அனுராதபுரம் ஓயாமடு மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இலங்கை விமானப் படை அணிக்கும் யாழ் மாவட்ட அணிக்கும் இடையே போட்டி இடம் பெற்றது.

இரு அணிகளும் சம வலிமை கொண்ட அணிகளாக நோக்கப்பட்ட போதிலும் மாவட்ட அணி மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் வெற்றி வாய்ப்பு விமானப் படை அணிக்கு இலகுவாகக் கிடைத்தது.

முதல் பாதி ஆட்டத்தில் விமானப் படையணி 9:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தையும் கூட இலகுவாகப் பெறலாம் என்ற எண்ணத்துடன் விமானப்படை அணி எதிர்பார்த்த போதிலும் அதற்கான வாய்ப்பை யாழ். மாவட்ட அணி வழங்கவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் விமானப் படையணி பலத்த எதிர்ப்பின் மத்தியில் 6:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் விமானப் படையணி 15:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.மாவட்ட அணியை வென்றது. (த-86)

## போராடித் தோற்றது யாழ்.மாவட்ட அணி

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்றில் யாழ். மாவட்ட அணி கடுமையாகப் போராடித் தோல்வியடைந்தது.

இரத்தினபுரி ஹாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கம்பஹா மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் கம்பஹா மாவட்ட அணி முதல் மூன்று நேர்சுற்றுக்களிலும் வெற்றி பெற்றது.

கம்பஹா மாவட்டம் முதல் மூன்று நேர்சுற்றுக்களிலும் முறையே 25:17, 25:14, 25:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ். மாவட்ட அணியை வெற்றி பெற்றுக் காலிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது.

(த-86)

## பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி ஆரம்பம்

வடமராட்சி,பெப்.18

பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் போட்டியில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு வல்வெட்டித்துறை றெயின்போஸ் விளையாட் டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டு கழக மைதானத்திலும் பெண் களுக்கான கிரிக்கெட் போட்டி திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதா னத்திலும் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அல் வாய் மனோகரா மைதானத் தில் கபடிப் போட்டியும் நடை பெறவுள்ளன.

20 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறும் பெண் களுக்கான கிரிக்கெட் போட்டியில் பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(த-8)

கணினி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம் Diploma in Computer Courses

2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு

Duration 3Months, 4months 1000/=

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail .

BatchI:-19-02-2012 9am or 3pm
BatchII:-22-02-2012 9am or 3pm
BatchIII:-24-02-2012 9am or 3pm

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி, மாணவர்மீது தனிப்பட்ட கவனம், அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் தமிழ்மொழி விளக்கத்துடன் வகுப்புகள் நடாத்தப்படும்.

Computer Express
No 15, Sirambiyadi lane (off stanly Road) - Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Certificate in Multi IT
Duration - 1Week,1Month
Rs 3500 only Batch i -21-02-2012
077 4691673 Batch ii -23-02-2012

## சேவை நலன் பாராட்டு விழா

திரு. சிதம்பரன் கந்தசாமி
(SLES - III)



சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி பிரதிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் (கல்வி முகாமைத்துவம்) கடமையாற்றும் எங்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளரின் சேவையை பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நல் வழி காட்டியாய் நல் அதிகாரியாய் அன்பாய் எம்மை வழிபடுத்திய தாங்கள் மேலும் உயர் பதவிகள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர் நலன்புரிகழகம்,
சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள்,
ஆசிரியர்கள்,
கோட்ட அலுவலர்கள்.

## மரண அறிவித்தல்

### நாகராசா தருமலிங்கம் (தறுமு)



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், குருசோ வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா தருமலிங்கம் நேற்றுமுன்தினம் 16.02.2012 வியாழக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - திரேசம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியகொறற்றியின் (தீபம்) பாசமிகு கணவரும் , வோல்டர் ஸ்கொட் (கனடா), வெஸ்லின் சிம்சன் (பிரான்ஸ்), றொசான் டேமி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் சசி, ஜெனி ஆகியோரின் பாசமிகு மாமனும் சீவரத்தினம், கமலாதேவி (நோர்வே), காலஞ்சென்ற வர்களான அன்னலிங்கம், ராசலிங்கம் மற்றும் கணேசலிங்கம், லீலாவதி (பட்டு), விக்ரோரியா (பழம் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றெஜினாவின் (றூபி) மைத்துனரும்,வக்சன், வக்சயா, அஸ்வெல் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2012) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குருசோ வீதியில், அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியை தொடர்ந்து யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*196/1, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகராசா

(உரிமையாளர்- அம்பாள் ஸ்ரோர்ஸ், வீரமாகாளி அம்மன் கோயில்)



நல்லூர் அரசடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகராசா 15.02.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், சதீஸ்கரன், ஜெஸ்மினி (சுவிஸ்), சர்வேந்திரன் (கனடா), சயேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்காதரன் (சுவிஸ்), யமுனா (ஆசிரியை), சண்முகா (இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, இராசம்மா, கண்மணி, சாமி, திருநாவுக்கரசு மற்றும் சதாசிவம்,பிள்ளையம்மா, நயினார், மங்கையற்கரசி (கமலா), ஆகியோரின் சகோதரரும், இராசேந்திரம் (ஐம்போம்), காலஞ்சென்றவர்களான பூமணி, செல்லம்மா மற்றும் இராசமணி (கனடா), சின்னராசா, நாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ரிஷிகரன், லதீஸ்கரன், வக்ஷிகரன், அல்சியா, அனுஸ்கா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**34/1, இராமநாதன் வீதி,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**



ஒரு தடவை வந்து பாருங்கள்!!!
நீங்களா!! என அதிசயிக்கும் மாற்றங்கள்!!!

* ஒரே வாரத்திலே உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!! முகப்பருக்கள், கரும்புள்ளிகள், சுருக்கங்கள், கழுத்துக் கருமை, உதட்டுக்கருமை, போன்றவற்றுக்கான சிகிச்சைகள்
* பொடுகு முடி உதிர்வுக்கு, விசேட ஆயுள்வேத சிகிச்சைகள் மற்றும் இளநரை முடி நிறம்மாறுதல் சிகிச்சைகள்
* உடற்பருமன்கூட்டுதல், குறைத்தல் மற்றும் உடல் அழகுச் சிகிச்சைகள், முக அழகுச் சிகிச்சைகள் மேலும் பல அழகு ஆரோக்கிய சிகிச்சைகள்

முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள்

SANEYA HERBAL CARE "WE CARE ALWAYS"

262, செம்மணிவீதி,
நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை, தொ.பே இல :-0777351954
நல்லூர் யாழ்ப்பாணம் (முற்பதிவு அவசியம்)


## 31ஆம் நாள் நினைவுநாளும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 | | 20 |
| ★ | | ★ |
| 05 | | 01 |
| ★ | | ★ |
| 1948 | | 2012 |



### அமரர் குமாரவேல் சரவணமுத்து

(Apex Globals, Hotel Trprabane)

கைதடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட குமாரவேல் சரவணமுத்து அவர்களின் 31ஆம் நாள் நினைவு நாளை நடைபெறும்.

எமது குடும்பத் தலைவரின் திடீர் இழப்பால் நாம் துயரடைந்து தவித்திருந்த வேளையில் நேரில் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், உடனிருந்து உதவியவர்களுக்கும், கடித மூலமும், தொலைபேசி தொடர்புச் சாதனங்கள் மூலமும் ஆறுதல் அளித்தவர்களுக்கும், பல்வேறு விதத்திலும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Kumaravel Saravanamuthu,
Parwathy Kumaravel
"Apex Globals"
7-218, Ochard Complex,Galle Road,
Colombo - 06.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### இன்னாசிமுத்து தேவசகாயம் (தேவதாஸ்)

99/6, ஸ்ரேசன் லேனைப் பிறப்பிடமாகவும், 209, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து தேவசகாயம் நேற்று முன்தினம் (16.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இன்னாசிமுத்து - நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ராசேந்திரம் - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தனுஷா வின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரேசா மற்றும் செல்வம், ஜோர்ச், நோபேட், றாணி, மலர் ஆகி யோரின் சகோதரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி, குணேஸ்வரி, மங்களேஸ்வரி, தனேஸ்வரி, தனேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், ஷணாவின் மாமனும், பிரவீன், சந்தோஷ் குஷானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நிகழ்வுக்காக இன்று (18.02.2012) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து பி.ப. 3.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்குக் கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

209, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

### சிதம்பரப்பிள்ளை விநாயகசிவம்பிள்ளை (சிவம்)



காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை விநாயகசிவம்பிள்ளை (சிவம்) நேற்றுமுன்தினம் (16.02.2012) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகராஜா, சிவகௌரி, தெய்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், சச்சிதானந்தசிவம், வள்ளிநாயகி ஆகியோரின் சகோதரனும், பரமசிவம், தேவராஜா, பராசக்தி ஆகியோரின் மைத்துனரும் ஜெயராஜாவின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைப்பிட்டி, காரைநகர். தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.


## மடிக் கணினியைத் திருடிய நபர் மறியலில்

யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் மடிக்கணினியைத் திருடிய சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப் பட்டார். விடுதியில் அறை ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் மடிக்கணினியே திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. திருடியவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஓ-4)

## மரண அறிவித்தல்

### தியாகராசா கருணாகரன்



ஆனைக்கோட்டை 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை கூழாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா கருணாகரன் நேற்று(17.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சிவயோகம் தம்பதியரின் அன்பு மூத்த மகனும் சிவனேஸ்வரியின் (பவானி) அன்புக்கணவரும் கிருபாகரன், பிரபா, பாமா ஆகியோரின் அன் புச் சகோதரனும் கல்பனா, விந்துஜா, சிந்துஜா, சஞ்சீவன், சனுஜீவன், சோபனா, றஜீத்தா, வித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2012) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி மேற்கு, ஆனைக்கோட்டை. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி பொன்னம்மா

சோலியகட்டை மல்லாகத்தை பிறப்பிடமாகவும் புதுத்தோட்டம் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் தற்போது பருத்திக்கலட்டி சுன்னாகத்தில் வசித்துவருமாகிய திருமதி சின்னத்தம்பி பொன்னம்மா நேற்று (17.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மகளும்கிருஸ்ணர் - அன்னமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும், சிவகுமார் (புள்ளி) சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்), ஜெயந்தி ஆகியோரின்அன்புத்தாயும், நந்தகுமாரி, சிவராசா ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான முத்தையா, இராமசாமி, செல்லம்மா, சின்னம்மா மற்றும் அன்னம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மதன்குமார், மற்றும் கீர்த்தனா (யா/யூனியன் கல்லூரி), வேணுகா (இராமநாதன் கல்லூரி), காரத்திகா(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்திக்கலட்டி, சுன்னாகம். தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் இளையதம்பி

குரும்பசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மாப்பியன் வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாய் (மாவத்தைலேன்) வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இளையதம்பி நேற்று (17.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும், இராசமணியின் அன்புக்கணவரும், சண்முகதாசன்(அப்பன்), தேவதாசன் (ஜேர்மனி), சிறிதாசன் (லண்டன்), கவிதாசன் (ஜேர்மனி), சத்தியராணி (ஜேர்மனி), தேவராணி (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாப்பியன்லேன் (மாவத்தைலேன்) சுதுமலை தெற்கு, மானிப்பாய். தகவல்: பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 08 | | 19 |
| ★ | | ★ |
| 02 | | 01 |
| ★ | | ★ |
| 1936 | | 2012 |



### அமரர் சண்முகநாதன் மகேஸ்வரி

கடந்த (19.01.2012) வியாழக்கிழமை சிவபதடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (18.02.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கருவப்புலம் வீதி, கோக்குவில். (நாதன் புடவையகம், திருநெல்வேலி). குடும்பத்தினர்.

## கந்தப்பசேகரம் வீதி அகலிப்பு

கந்தப்பசேகரம் வீதி விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் கலந்துரையாடல் 2012.02.21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மாநகர முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் கௌரவ முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளமையால் குறித்த வீதியிலுள்ள ஆதன உரிமையாளர்கள், பாவனையாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முதல்வர்
திருமதி. யோ. பற்குணராசா
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## 48ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 2012.01.03 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### பெரியார் சரவணை

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தென்மேற்கு, புலோலி. குடும்பத்தினர்.

### மக்களின் எதிர்ப்பு வலுப்பதால்

# எரிபொருள் விலைக் குறைப்பு அரசு தீவிர ஆலோசனை

கொழும்பு, பெப்.18

எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பையடுத்து அரசு மீதான மக்களின் அதிருப்தி தீவிரமடைந்துள்ள சூழ்நிலையில் எரிபொருள்களின் விலைகளில் கணிசமான குறைப்பைச் செய்வது குறித்து அரசு அவசர ஆலோசனைகளை நடத்திவருகிறது.

இதற்கமைய எரிபொருள் விலைக்குறைப்பு தொடர்பான அரசின் அறிவிப்பு விரைவில் வெளிவருமென்று அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தன.

எரிபொருள் விலை அதிகரிப்பானது ஒரேயடியாக இவ்வளவு வீதத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடாதென்றும், இது அரசு மீது மக்கள் வெறுப்புக்காட்ட முக்கிய காரணமாகிவிடுமெனவும் சிலாபத்தில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவங்கள் கூட இதன் எதிரொலியே எனவும் அரசின் மூத்த ஆலோசகர்கள் பலர் அரச தலைமையிடம் எடுத்துக்கூறியிருப்பதாகத் தெரிகிறது.

நேற்றுமாலை சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பியிருந்த ஜனாதிபதி எரிபொருள் விலைகளில் கணிசமான அளவு குறைப்பைச் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து தனது ஆலோசகர்களுடன் நீண்டநேர ஆலோசனைகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள்களின் விலைகளைக் குறைப்புச் செய்யும் போது ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது என அந்தத் தரப்பு வட்டாரங்கள் கூறின. (சி)

## ஜேர்மன் ஜனாதிபதி ராஜினாமா

ஜேர்மனிய ஜனாதிபதி கிறிஸ்டியன் வூல்வ், தனது பதவியை நேற்று ராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் 2008 ஆம் ஆண்டு ஜேர்மனியின் லோவர் சக்ஸோனி மாநில பிரதமராக பதவி வகித்தபோது செல்வந்த வர்த்தகரான இகோன் ஜேம்ஸ்கீர்கன்ஸ் என்பவரின் மனைவியிடமிருந்து குறைந்த வட்டியிலான வீட்டுக்கடன் ஒன்றை பெற்றமை தொடர்பான சர்ச்சையே இதற்குக் காரணம்.

இந்த வர்த்தகருடன் கிறிஸ்டியன் வூல்புக்கு ஏதேனும் வர்த்தகத் தொடர்புகள் உள்ளனவா என லோவர் சக்ஸோனி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அவ்வர்த்தகருடன் தொடர்புகள் எதுவும் இல்லையென வூல்ப் மறுத்தார். வர்த்தகரின் மனைவியுடனான வர்த்தகத் தொடர்புகள் குறித்து அவர் பேசவில்லை.

2010 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக பதவி வகித்துவரும் கிறிஸ்டியன் வூல்புக்கான சட்ட விதிவிலக்கை நீக்கவேண்டுமென வழக்குத் தொடுநர்கள் வலியுறுத்தியதையடுத்து அவர் நேற்று இராஜினாமா செய்துள்ளார். (சி)

## 13ஆவது திருத்தம் முடங்கினால் இலங்கை – இந்திய உறவு பாதிக்கும்

»1 முறைப்படுத்துவது தான் இலங்கைக்கு இப்போதுள்ள ஒரே வழி எனவும் அவர் கூறியுள்ளார்.

புதுச்சேரிப் பல்கலைக் கழகத்தில் 'விடுதலைப் புலிகளுக்குப் பின் இலங்கை - இந்தியாவின் விளைவு கள்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேசக் கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கயில் போரின் உச்சக்கட்டத்தில் தமிழர்கள் கொத்து கொத்தாகக் கொல்லப்பட்டனர்.

அப்போது, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்தியாவால் இலங்கைக்குப் போர்த் தளபாடங்களைக் கொடுக்க முடியவில்லை.

இருநாடுகளுக்குஇடையே அப்போது ஏற்பட்ட இடைவெளியை, சீனா நன்கு பயன்படுத்தி கொண்டது.

போருக்குத் தேவையான ஆயுதங்களை தயக்கமின்றி வழங்கி, இலங்கையின் முக்கிய கூட்டாளியாகச் சீனா மாறிவிட்டது.

இதனால் தான், இலங்கையின் முக்கிய உட்கட்டமைப்பில் சீனாவின் தலையீடு அதிகரித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், இலங்கை - இந்தியா நாடுகளுக்கு இடையிலான உறவுகள் வலுவாக இருந்தாலும், சீனா இலங்கையில் தீவிரமாக ஊடுருவியுள்ளது என்பதே உண்மை. சீனாவுடன் இந்தியா போட்டி போட்டுக் கொண்டு, இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும். அப்போது தான், இலங்கையில் இந்திய ஆதிக்கம் தொடரும்.

விடுதலைப் புலிகளுடனான போருக்குப் பின், தமிழர்களுக்குச் சம உரிமையளிக்கும், 13ஆவது சட்டத்திருத்தத்தைக் நடைமுறைப்படுத்துவதாக இந்தியரவுக்கு இலங்கை உறுதியளித்திருந்தது. ஆனால், தற்போது திடீரென பின்வாங்குகிறது. இதனால், அதிகாரப் பகிர்வுக்கான பேச்சுக்ககள் முடங்கியுள்ளன.

இலங்கை 13ஆவது சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்தவில்லை எனின், அது இந்தியா இலங்கை இடையேயான உறவில் சிக்கலை ஏற்படுத்தும்- என்றார் அவர்

லகன் லால் மெஹ்ரோத்ரா இந்திய வெளிவிவகாரச் செயலராகவும், கொழும்புக்கான இந்தியத் தூதுவராகவும், கம்போடியா மற்றும் இந்தோனேசியாவுக்கான ஐ.நா தூதுவராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### குப்பைகள் அகற்றப்பட்டன

தொல்புரம் பகுதியில் கொட்டப்பட்டிருந்த குப்பைகள் இரவோடு இரவாக வலிகாமம் பிரதேச சபையினரால் அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (130)

### அலைகடலெனத் திரண்டு வாருங்கள் வீதியில் இறங்கிப் போராடுவோம்

»1 அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்களைத் தடுக்குமுகமாக குண்டுத்தாக்குதல்கள், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் போன்ற அரசின் கொடூரங்கள் தொடர்கின்றன.

அரசின் அராஜகச் செயல்களை எதிர்த்து வீதியில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட எமது கட்சி தயாராக உள்ளது. அரசை எதிர்த்து வெற்றிகாணவேண்டும் என்றால் மக்கள் அனைவரும் இன, மத பேதங்களைக் கடந்து போராட்டங்களில் ஈடுபட அணிதிரண்டு வரவேண்டும் - என்றார். (ஒ-சி)

## யாழ். வந்த கொமன்வெல்த் தலைவர் பல்வேறு தரப்பு மக்களுடன் சந்திப்பு

»1 மத்திய பஸ் நிலையப் பகுதிக்குச் சென்ற குழுவினர் பல்வேறு தரப்பு மக்களையும் சந்தித்து தற்போதைய நிலவரம் குறித்து கேட்டறிந்தனர். தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா மற்றும் வைத்திய நிபுணர் ரவிராஜ் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அத்துடன் யாழ். போதனா வைத்திசாலையின் விடுதிகளுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது வைத்தியசாலைப் பணிப்பாளரினால் வைத்திய விடுதிகளிலுள்ள குறைகள் மற்றும் புதிய கட்டடங்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. குறிப்பாக இதய நோய் வைத்தியசாலை அமைப்பதற்கு 250 மில். ரூபா நிதி தேவை எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ந்து மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழுவினர் மாவட்டச் செயலகத்தின் சகல கிளைகளிலும் நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் அரச அதிபருடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகக் கலந்துரையாடல்களை முடித்துக் கொண்டு மதியம் பலாலிக்குச் சென்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதியையும் இந்தக் குழுவினர் சந்தித்தனர். (ஒ-10-5)

### மிதி பலகையில் பயணித்தவர் விழுந்து சில்லில் நசியுண்டு சாவு

»1 சந்தியில் திரும்பியவேளை தவறி விழுந்து பின் சில்லில் நசியுண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-323-420)

# கொழும்பில் மக்கள் திரள் அரசுக்குக் கடும் எதிர்ப்பு

»1 புறக்கோட்டைப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் 'கட்டவுட்'களைக் கிளித்துக் கொழுத்தினர். நிலைமை கட்டுமீறிப் போனதால் பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட அதிரடிப் படையும் இராணுவமும் கோட்டைப் பகுதிக்கு வரவழைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டார். அவரது இடது கையில் சிறிய காயம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்த 15 பொலிஸாரில் மூத்த பொலிஸ் அதிகாரிகள் மூவரும் அடக்கம் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர், கொழும்பு மாவட்ட பொலிஸ் மா அதிபர் மற்றும் கொழும்பின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரே காயமடைந்த மூத்த அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலைகளைக் குறைத்து, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்குமாறும் சம்பளத்தை அதிகரிக்குமாறும் வலியுறுத்தியே நேற்றைய ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலை 3 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் இரவு 7 மணி வரை நீடித்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நாட்டு மக்கள் மீதான வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோஷலிசக்கட்சி உட்பட்ட அரசியற் கட்சிகளும், அரச எதிர்ப்பு தொழிற்சங்கங்களும் கலந்துகொண்டன.

கோட்டை ரயில் நிலையத்தின் முன் ஒன்றுதிரண்ட மக்கள் முன்னிலையில் உரையாற்றிய ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, "அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் கொழும்பு கோட்டையுடன் நின்றுவிடாது. அது நாடு முழுவதும் பரவப் போகின்றது" என்று சூளுரைத்தார்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்கான வாய்ப்பு மக்களுக்கு இல்லாமற் போய்விடுமென எதிர்வு கூறிய ரணில் விக்கிரமசிங்க, சம்பள அதிகரிப்பு, ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவது என்ற கூட்டு எதிர்க்கட்சிகளின் கோரிக்கை வடக்கிலிருந்து தெற்கிற்கும், கிழக்கிலிருந்து மேற்கிற்கும் பரவும் என்றும் எச்சரித்தார்.

ஐ.தே.க. தலைவரின் உரையையடுத்து கூட்டு எதிர்க்கட்சிகளின் பேரணி கோட்டையிலிருந்து காலிமுகத்திடல் நோக்கி நகர்ந்தது. சிலாபத்தில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டமை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவற்றைச் சுட்டிக் காட்டி அரச எதிர்ப்புக் கோஷங்களை பேரணியில் சென்றோர் எழுப்பினர்.

பேரணி கோட்டை ரெலிக்கொம் அருகே சென்றபோது பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். ஆயினும், மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் நீரைப் பீச்சியடித் தும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும் தாக்கினர்.

இந்தத் திடீர்த் தாக்குதலினால் நிலைகுலைந்து போன ஆர்ப்பாட்டக்காரர்கள் சிதறி ஓடினர். அலுவலக நேரமுடிவு என்பதால் கடமை முடிந்து செல்லும் ஆயிரக்கணக்கான ஊழியர்களும் இதனால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இதன் விளைவாக கோட்டைப் பகுதியில் பலமணிநேர போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

"ஜனநாயக ரீதியில் நடத்தப்படும் போராட்டங்களுக்கு கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசுவது அரசின் வழமையான செயற்பாடுதான். ஆனால் மக்களின் உணர்வுகளை அரசால் ஒன்றும் செய்யமுடியாது. இதனை அரசு மிக விரைவில் உணரும்" என்று நேற்றுமாலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. அண்மைக் காலத்தில் இப்படியான ஒரு ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடைபெறவில்லை என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் விக்கிரமபாகு கருணாரத்ன உட்படப் பல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## சவேந்திர சில்வா நியமனம் ஆசிய நாடுகளும் விசனம்

»1 வெளிப்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை இலங்கை இந்தப் பதவிக்கு முன்னிறுத்தியது முறையற்றது என்ற வகையில் இந்த நாடுகளின் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய ஒருவரை இந்தப் பதவிக்கு நிறுத்தியது குறித்து இலங்கை மீது விசனத்தை வெளியிட்டுள்ள இந்த நாடுக ளின் பிரதிநிதிகள், இதனை சரி செய்யுமாறு இலங்கையிடம் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அவர்கள் சர்ச்சைக்குரிய ஒருவரை அனுப்பியது, எமக்கு ஆச்சரியமாக உள்ளது. இது சரியல்ல" என்று ஐ.நாவுக்கான பங்களாதேஷ் நாட்டின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அபுல்கலாம் அப்துல் மொமென் தெரிவித்துள்ளார். தனிப்பட்ட முறையில் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. என்று குறிப்பிட்ட அவர், நானும், இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகளும் இலங்கையிடம் இதனைச் சரி செய்யுமாறு கேட்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதி அப்துல்லா ஹுசெய்ன் ஹரூன் நல்லது நடக்கும் என்று நாம் நம்புகிறோம். நாங்கள் இது பற்றி நாளை சந்திப்போம் என்று கூறியுள்ளார்.

இதனிடையே, ஒட்டுமொத்த ஆசியக் குழுவைவிட இது மிகச் சிறியதாகும். என்று குறிப்பிட்ட ஆசிய நாடுகள் குழுவின் உறுப்பினர் ஒருவர், முதலில் இலங்கை இதனைச் சரி செய்ய வேண்டும். பின்னர் குழு அதனை உறுதி செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை இந்தப் பதவியில் இருந்து தாமாக விலகிக் கொள்ளுமாறு, ஆசிய நாடுகள் குழுவிலுள்ள முக்கியமான நாடுகள் இலங்கையிடம் இராஜதந்திர முறையில் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (த)

"பல மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுத்த"
வெற்றித் தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள்

2012 தரம் - 5 மாணவர்களுக்கான பரீட்சை - 04
2012 தரம் - 4 மாணவர்களுக்கான பரீட்சை - 01

காலம் : 19.02.2012 (ஞாயிறு)
பரீட்சை நிலையம் -
சயன்ஸ் அக்கடமி நல்லூர்.
பதிவுகளை இன்றே மேற்கொள்ளுங்கள்.
தொடர்பு - 0212229016, 0775388471.

உங்கள் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க தொ.பே.: 0215671111 தொலைநகல் 021 222 9731

**அலுவலக உத்தியோகத்தர் தேவை**

A/L படித்த ஆண்/பெண் தேவை
நல்ல கையெழுத்து விரும்பத்தக்கது
சுயவிபரக்கோவையுடன் 19.02.2012 ஞாயிறு
காலை 9.00-9.30 வரை நேரில் வரவும்
**MyWay**
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி
**077 33 63 456**

## மாடுகள் அறுத்த மூவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் சட்டவிரோதமாக மாடு வெட்டிய மூவரும் தலா பத்தாயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 25 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

பழைய வீடொன்றுக்கு 6 மாடுகளைக் கொண்டு சென்ற ஓட்டோ சாரதி உட்பட மூன்றுபேர், இரண்டு மாடுகளை வெட்டிக் கொன்றுள்ளனர். ஏனைய மாடுகளையும் வெட்ட முயன்றபோது தகவல் பெற்று அங்கு சென்ற யாழ். பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தினர். பிரஸ்தாப மூவரையும் கைது செய்தனர். ஏனைய நான்கு மாடுகளையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மூவரும் அன்றைய தினம் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது. நேற்றைய தினம் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(ஒ-4)

**ஆங்கிலம்**
ஒரு மணிநேர இலவச கற்கைநெறி
**20.02.2012 திங்கள்கிழமை**
பிரிவு 1 : காலை 8.00 – 9.00
பிரிவு 2 : காலை 10.00 – 11.00
பிரிவு 3 : மாலை 3.00 – 4.00
பிரிவு 4 : மாலை 5.00 – 6.00
அனுமதி, புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்
(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)
வகுப்புக்கு வரும் அனைவருக்கும் ஆங்கில கற்கைநெறி CD இலவசம்
**MyWay English**
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி
077 33 63 456

## மரண அறிவித்தல்

### வாரித்தம்பி தவேந்திரம் (தவம்)



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு தற்போது குஞ்சுப்பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி தவேந்திரம் நேற்றுமுன்தினம் (16.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - அம்மாகுட்டி தம்பதியரின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தவநிதி, சிவாஜினி, ஸ்ரீசுபாஜினி (2010 - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி, சடாச்சரம் (அதிபர், எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), நவரத்தினம் (ஜேர்மனி), காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் மனோன்மணி (தாதி - சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜேஸ்வரி, விஜயலட்சுமி, ஜெகநாதன் (கனடா), விக்கினேஸ்வரன் (லண்டன்), ராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், நீதிராசா (பரந்தன்), ருஷாந்தன் (கொக்குவில்), வினோதன் (மீசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், ருதர்சன், தக்சாயினி, சாருஜன், சஞ்சீவன், டர்ஷனா, கேமாங்கி, யஷ்வினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் (மீசாலை கிழக்கு, மீசாலை) நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். வினோதன்
(மரக்கறிக் கடை, மீசாலை).
மீசாலை கிழக்கு, மீசாலை.

**திசைகாட்டி முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம் தானா? ஆம். ஏனெனில்**

| போலியான விசா ஆலாசனை நிறுவனம் | முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம் திசைகாட்டி |
|---|---|
| ✗ வியாபாரப் பதிவு எதுவும் காணப்படமாட்டாது | ✓ கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டு திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் என அழைக்கப்படல் |
| ✗ நிலையான தொலைபேசி இலக்கங்கள் எதுவும் இன்றி கைத்தொலைபேசி மட்டுமே பாவனை | ✓ 0212219016 |
| ✗ விசா ஆலோசனையில் படிமுறைகள் எதுவும் எடுத்துக் கூறப்படாது. மேலெழுந்த வாரியாக, பூசிமெழுகிச் சொல்லப்பட்டு முற்பணம் சுரண்டப்படல். | ✓ விசாவுக்குரிய சட்டரீதியான படி முறைகள் எடுத்துரைக்கப்பட்டு விலாவரியான ஆலோசனையை வழங்கல் |
| ✗ ஆலோசனைக்குப் பின்னர் பயனாளிகள் நிலை கவனத்திலெடுகப்படமாட்டாது. | ✓ ஆலோசனைக்குப் பின்னரும் வெளிநாட்டிலும் பயனாளிகள் நிலை தொடர்பில் அதிக கவனம் |

இன்னும் என்ன தாமதம்? ஆஸ்திரேலியா குடும்ப விசாவின் ஆலோசனை செயற்றிட்டத்தில் இணைந்து பயன் பெற்ற 5 குடும்பங்களுக்கு நாங்கள் காட்டிய பாதையில் நடைபோட நீங்களும் இணையுங்கள்.
ஆலோசனையின் இறுதி நாள் : 25.02.2012

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
37, சிவநந்தநாதர் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். 0212219016
கிளை: 115ஏ, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
ஆஸ்திரேலியா மெல்பேர்ன்: 0061412479209.

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி**
அவர்களால் வடிவமைக்கப்பட்ட

**முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

★ எளிய முறை உடற்பயிற்சிகள்
★ எளிய முறை காயகல்பப் பயிற்சி
★ எளிய முறை தியானப் பயிற்சிகள்
★ அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சிகள்
*அனைவரும் வருக பயின்று பயன் பெறுக!*

**பயிற்சிகளை வழங்குபவர்**
மனவளக்கலை பேராசிரியை
**திருமதி S. இந்திரா** அவர்கள்
(தமிழ்நாடு, இந்தியா)

இலவச அறிமுக உரை
காலம்: 19.02.2012 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: பிற்பகல் 04 மணி
இடம்: இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் மணி மண்டபம்.
பயிற்சிகள்
19.02.2012 தொடக்கம் 26.02.2012மாலை 5 மணிக்கு நடைபெறும்.

18.02.2012 சனி, 19.02.2012 ஞாயிறு தினங்களில் அகத்தாய்வு 1ஆவது பயிற்சிகள் காலை 8.30 மணிமுதல் 1.30 மணி வரை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் மணி மண்டபத்தில் இடம்பெறும். (ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் (6 நாள் பயிற்சிகள்) எடுத்தவர் கள் கலந்து கொள்ளலாம்) கட்டணம் அறவிடப்படும்.

பயிற்சிகளை எடுத்தவர்களுக்கான மீள் பயிற்சிகள்
கட்டணமின்றி இலவசமாக வழங்கப்படும்.
மன்றத்தினால் வழங்கப்பட்ட அடையாள
அட்டைகளைக் கொண்டு வரவும்.

இவ்வாறான அரிய பல பயன்களைக்கொண்ட
பயிற்சிகளைப் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனைவரும் வருக, பயின்று பயன்பெறுக.

இலங்கை அறிவுத் திருக்கோயில்
இலங்கை மனவளக்கலை மன்றம்
53/1A, இராமகிருஷ்ண வீதி,
கொழும்பு - 06
தொ.பே. 5658412

வண்ணார்பண்ணை
தவமையம்
3/8, கேசவில் 1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 071 2208808

**மகளிருக்கான 3 மாத கால பயிற்சிகள்**





**அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் பயிற்சிகள் சனி, ஞாயிறுகளிலும் நடைபெற உள்ளன.**

**முக அழகுக் கலை (Facial)**:- (B) பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற்,
தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட 15 வகையானவை.
**Pedicure, Manicure** (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
**இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம்,**
வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்,
அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)
50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening), முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 6 வித முடி வெட்டுதல்கள். தமக்குத் தாமே முடி வெட்டுவதற்கானபயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.





**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.**
மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 25-02-2012 சனி காலை 9.30 மணி**

**கலாலயா** பயிற்சியகம் 1985-2012
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.